காவேரி



வியய - மார்கழி

December-1946

As. 8

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 JAN 1947
MADRAS



THE MAN *in* INDUSTRY

கண்ணாடித் தொழிலாளி

கண்ணாடி உருக்குவது இந்தியாவின் புராதனமான தொழில். அதில் ஈடுபட்டுள்ள திறமையும் அநுபவமும் நிறைந்த இன்றையத் தொழிலாளி, பக்குவமாகக் காய்ச்சிய கண்ணாடிக் குழம்பை, தொழில் முறைப்படி ஊதி, கண்ணாடிக் கிண்ணம், பிளாஸ்க் முதலிய பொருள்களை உற்பத்தி செய்கிறார். உருவமே இல்லாத ஒன்றிலிருந்து உருவங்கள் அமைக்கிறார்.

இக்காலத்து முன்னேற்றமான முறைகளைக் கொண்டு, நம் நாட்டின் உபயோகத்துக்குத் தேவையான கண்ணாடிப் பொருள் எல்லாவற்றையுமே தயாரிக்க முடியும். ஆனால் அவைகளை நாடெங்கும் மக்களுக்குக் கிடைக்கும்படி செய்ய நல்ல ரோடுகள் தேவை.

இந்தியக் கைத்தொழில் அபிவிருத்திக்கு நல்ல ரோடுகள் தேவை என்னும் நம்பிக்கையுடன்
பர்மாஷெல் கம்பெனியாரால் வெளியிடப்பட்டது.

BURMAH-SHELL OIL STORAGE AND DISTRIBUTING CO. OF INDIA LTD. (INCORPORATED IN ENGLAND) GA/BS/1

இந்திய மக்களிடையே
புகழ்பெற்று விளங்கும் நமது
வாசனைத் திரவியங்கள் சுமார் அரை
நூற்றாண்டுகளாக வினியோகிக்
கப்பட்டு வருகின்றன.

விஜயபுரம்

கே. டி. ஆர்.

சரக்குகள்—பன்னீர், அரைக்கீரை, சந்தனாதி தைலங்கள், கிருஷ்ணா அகர்பத்தி, ராஜா பற்பொடி — மணத்திற்கும் குணத்திற்கும் பெயர்போனவை — எங்கும் கிடைக்கும்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 JAN 1947
MADRAS

K·T·R

சந்தனாதி தைலம்

...SOLE DISTRIBUTORS...

GIRISON & Co...MADRAS

தென்னிந்தியாவிலுள்ள எல்லா ஊர்களிலும் எல்லா வியாபாரிகளிடத்திலும், வட இந்தியாவில் பம்பாய், கல்கத்தா, பூனா, குண்டூர் டிஸ்டிரிக்ட்டு முதலிய ஊர்களிலுள்ள எங்கள் ஏஜண்டுகளிடமும் கிடைக்கும். மற்றப் பாகங்களிலும் ஏஜண்டுகள் தேவை.

K. T. R. என்ற விலாஸ எழுத்துக்களை எழுத்துக்கெழுத்து — கவனித்து வாங்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம் —

198077

ஹனிவிடா

எந்தக் காலத்திற்கும் ஏற்ற சிறந்த பானம்

HONEY VITA

"ஹனி-விடா"

உயர்ந்த சத்துக்கள் நிறைந்த தேனினால் தயாரிக்கப்பட்ட
— ருசியுள்ள சிறந்த பானம் இதுதான். —

ஊக்கத்திற்கும், உற்சாகத்திற்கும், ஆரோக்கியத்திற்கும்

"ஹனி-விடா"வை

எப்பொழுதும் அருந்துங்கள்

எல்லா பிரபல கடைகளிலும் கிடைக்கும்

தென் இந்திய சோல் ஏஜண்டுகள்:

Messrs Best & Co., Ltd., Madras.

தி நியூ கிரேட் இன்ஷ்யூரன்ஸ்
கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்

(பரோடாவில் ஸ்தாபிக்கப்பட்டது—மெம்பர்களின்
— பொறுப்பு வரையறுக்கப்பட்டது) —

அனுமதிக்கப்பட்ட மூலதனம்	வெளியிடப்பட்டு வசூலிக்கப்பட்ட மூலதனம்	செலுத்தப்பட்ட மூலதனம்
ரூ. 2,50,00,000	ரூ. 1,25,00,000	ரூ. 32,50,000

டைரக்டர்கள் போர்ட்

1 ஸ்ரீ துளசிதாஸ் கிலாசந் (சேர்மன்)
2 ,, வால்சந் ஹீராசந்த்
3 ,, தராம்ஸெ முல்ராஜ் காடாவ்
4 ஸ்ரீ ஜிஹாங்கீர் பெஸ்டான்ஜி படேல் B.A., (Cantab)
5 ,, ராஜ்பிரிய மணிபாய் வஸான்ஜி தேசாய்
6 ,, அம்பாலால் கிலாசந்த்

ஜெனரல் மானேஜர்:- எம். ஜி. மோடி

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்:-
பாங் பில்டிங், மண்ட்வி, பரோடா.

பிரிட்டிஷ் இந்தியாவில் பிரதம ஆபீஸ்:-
45/47, அபோலோ தெரு, போர்ட், பம்பாய்.

சென்னை ராஜதானி முழுமைக்கும் சுறுசுறுப்பும்
— செல்வாக்கும் உள்ள ஏஜண்டுகள் தேவை —

விபரங்களுக்கு:—
சென்னை ஆபீஸ்:-
121-A அரமனைக்காரத் தெரு.

கையாளப்படும் அலுவல்கள்:—
ஆயுள், தீ, கடல்விபத்து, எதிர்பாராத விபத்துக்கள்.

கிரைப் சிரப்

குழந்தைகள் வயிற்றிலேற்படும்

அஜீர்ண கோளாறுகளைப் போக்கி, அவைகளை

ஆரோக்கியமாக வளர்க்கும்
சிறந்த ஔஷதம் இதுதான்

குழந்தைகள் விரும்பிச் சாப்பிடும் முறையில் இது தயாரிக்கப்பட்டிருக்கிறது

எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

ஏஜண்டுகள்:- **Messrs BEST & Co., Ltd., MADRAS.**

Noting the events of the day
3rd Dec. 1946
marriage fixed
jewels solicited &
Ordered at P.A.R's
1. necklace.
3 Pairs bangles,
1 Saree pin
1. Diamond nose screw
1. Pair thodu 1.5. cts.
all to be recd on 20
Phone No. 268
5
BASKARA
Better cultivate the diary habit
P. A. RAJU CHETTIAR & BRO.,
JEWELLERS
COIMBATORE.
LOUIS

கவலை வேண்டாம்

ஸ்திரீகளின் துயரத்தைப் போக்க

தேவி பில்ஸ்

அதி சுலபமாகவும், அதி சீக்கிரமாகவும், எக்காரணத்தாலும் நின்றுவிட்ட மாத விடாயைச் சரியாக்கும் ... விலை ரூ. 6-0-0

நாள்பட்ட
கோளாறுகளுக்கு ... ரூ. 7-8-0

★

(தபால் சார்ஜ் பிரத்தியேகம்)

★

SEENU & Co.,
325, MINT STREET, MADRAS 1

எங்கும் ஸ்டாக்கிஸ்டுகள் தேவை

சிலோன் சோல் ஏஜண்ட்ஸ்:-

சிவானந்தா சித்தர் மெடிகல் ஹால்
92, கடல்தெரு :: கொழும்பு

அடுத்த விளையாட்டுப் பந்தயத்தில்

அம்ருதா
ரத்த சுத்தி திராவகம்..

கலக்கம், ஆயாச மில்லாமல் நன்கு விளையாடி வெற்றி பெறச் செய்கின்றது.

நரம்புகளை முறுக்கேற்றுகிறது

கேசரி குடீரம் லிட், மதராஸ்

ஒரிஸ்ஸா, நைஜாம் சமஸ்தானம், ஆந்திர ஜில்லாக்கள், தமிழ் நாட்டுக்கு

ஏஜண்டுகள்:-

சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்,
பேர்ஹாம்பூர், செகந்திராபாத்,
பெஜவாடா, மதுரை.

BMB மிஷீன் கலப்பைகளின் வெளிப்படையான உண்மைகள்

1. ஒரு நாளைக்கு சுமார் 2 ஏக்கரா பூமியை ஏர் உழும் 10 ஏக்கராவை பரம்படிக்கும்.
2. களைவெட்டுதல், பயிரிடுதல் விதை விதைத்தல், உரமிடுதல் முதலிய வேலைகளைச் செய்யவும்.
3. சுமை இழுக்கவும், பெல்டினால் ஓட்டப்படும் யந்திரங்களை உபயோகிக்கவும் உதவும்,
4. மிகக் குறைந்தசெலவிலும், அதிக கவனிப்பில்லாமலும், எல்லாவித கால நிலைகளிலும் எவ்வித தொந்தரவும் கொடுக்காமல் உழைக்கும்



1. குதிரை ஓட்டம் (H.P.)
3. குதிரை ஓட்டம் (H.P.)
6. குதிரை ஓட்டம் (H.P.)

முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்

ஸிம்ஸன் & கம்பெனி லிமிடெட்.

மவுண்ட்ரோட். மதராஸ்.

கிளைகள்: பங்களூர், உதகமண்டலம், திருச்சினாப்பள்ளி, ஹைதராபாத் (Dn).

ஒரு புராதன வைத்யம்

இவ்விதமாகவே நல்ல செய்திகள் பரவுகின்றன. உட்வர்ட்ஸ் கிரைப் வாட்டர் குழந்தைகளை நன்கு பாதுகாக்கிறது.



WOODWARD'S
GRIPE WATER

keeps baby well

I-WW111-111

W. WOODWARD LTD. LONDON. ENGLAND

Agent:—T. T. KRISHNAMACHARI & Co.
12A Lingha Chetty Street, — G. T. MADRAS.

வீகம்ஸீயின்

டிரேட் மார்க்

V. C.

(ஸ்தாபிதம் 1893)

●

குறிபோட்ட நகைகளெல்லாம்

சவரன் பொன்னுக்கும்

முதல்தரமான

வைரங்களுக்கும்

மேன்மையான கைதேர்ந்த

வேலைப்பாட்டுக்கும்

உத்தரவாதமுள்ளவை

VEECUMSEE

CHABILDOSS & SONS

Renowned Diamond Merchants,

China Bazaar :: MADRAS.

பொருளடக்கம்

விய மலர் 6 } { மார்கழி இதழ் 5

வலையில் சிக்கவேண்டாம் 11

அரசியல் நிர்ணய சபை 14

மனத்தில் மிதந்த காட்சி 17
ரா. ஸ்ரீ. தேசிகன்

அகில இந்திய காங்கிரஸ் கூட்டம் 22

அன்றும் இன்றும் 24
யோகி சுத்தானந்த பாரதியார்

அம்மாஞ்சியின்— அபிப்பிராயங்கள் 28
ராமய்யா

தந்தம் 33
ஆர். கே. விசுவநாதன்

சித்ரா 37
கே. சுந்தரம்மாள்

ப்ரேம ப்ரகாசம் 47
கே. வரதாச்சாரி

மனக்கோட்டை 56
வை. சுப்ரமணியன்

கப்பலோட்டும் பம்பரம் 61
நா. கி. நாகராசன்

ஜிஸியா வரி 66
எஸ். வைத்தியநாதன்

தி பிருத்வி இன்ஷ்யூரன்ஸ்

கம்பெனி லிமிடெட்

12-13, அங்கப்ப நாயக்கன் தெரு,

சென்னை—1

ஓர் அறிவிப்பு

எங்கள் பாலிஸிதார்ரர்களின் நன்மைக்காகக் கீழ்க்கண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை மிக மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம்.

1. ஒரே சமயத்தில் ஒரு நபருக்கு இலவச வைத்திய சிகித்சை கொடுப்பதற்கு கீழ்க்கண்ட ஆரோக்யஸ் தலங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

(a) க்ஷயரோக ஆரோக்ய ஸ்தலம் — பெருந்துரை

(b) மிஷனரி வைத்தியக் கலாசாலை — வேலூர்

(c) ஹார்வி நர்ஸிங் ஹோம் — மதுரை

மேற்குறித்த வசதிகள் எங்களுடைய எல்லா ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் பாலிஸிதாரர்களுக்கும் அவர்களுடைய மனைவி மக்களுக்கும் மற்றுமுள்ள எங்கள் குழுவின் அங்கத்தினர்களுக்கும் கிடைக்கும். அவசியம் ஏற்பட்டால் எங்கள் தலைமை ஆபீஸிற்கு நேரில் விண்ணப்பித்துக்கொள்ளவும்.

2. ஒரு நிபுணரால் தயாரிக்கப்பட்ட "க்ஷயரோகமும் அதன் தடுப்பும்" என்ற சிறு புத்தகம் தமிழிலும் தெலுங்கிலும் எங்கள் கைவசம் உள்ளது. விண்ணப்பத்தின்பேரில் பாலிஸிதாரர்களுக்கு இலவசமாக அனுப்பப்படும். மேற்படி புத்தகத்தின் ஆங்கிலப் பதிப்பும் கூடிய சீக்கிரம் வெளிவரும்.

நாளடைவில் இம்மாதிரி வசதிகளை இன்னும் அதிகமாகவும் சிறந்த முறையிலும் அளிக்கவேண்டும் என்பதே எங்கள் நோக்கம்.

இதற்கு உங்கள் அன்பையும் ஆதரவையும் வேண்டுகின்றோம்.

ஸ்ரீ எஸ். பார்த்தஸாரதி;

மானேஜிங் டைரக்டர்.

காவேரி

விய மலர் 6 | "சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—" பாரதியார் | மார்கழி இதழ் 5

வலையில் சிக்கவேண்டாம்

ஒரு தேசத்தின் அரசியலை வகுக்கச் சபை கூடுகிறதென்றால் அது மகத்தான சம்பவம் என்று யாரும் ஒப்புக்கொள்வார்கள். இந்தியாவிலும் பிரிட்டிஷாரின் திட்டம் வெளிவந்தவுடன் அப்படித்தான் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் காலம் செல்லச் செல்லப் பிரிட்டிஷாரின் நல்லெண்ணங்களின் சாயம் வெளுத்துச் சுய ரூபத்தில் காணப்படுகின்றன.

அவர்கள் டிஸம்பர் 6வ. வெளியிட்ட அறிக்கையிலிருந்து அரசியல் நிர்ணய சபையின் சுயநிர்ணய உரிமைக்குச் சாவு மணி அடித்தாய்விட்டது என்று நமக்குத் தோன்றுகிறது. படிப்படியாக அச் சபையின் கௌரவத்தைக் குறைத்துக்கொண்டே வருகிறார்கள், பிரிட்டிஷ் ராஜதந்திரிகள்.

தொகுதி வட்டப் பிரச்னை ஏக அமர்க்களமாக விவாதிக்கப்பட்டதல்லவா? இன்று அது என்னவாயிற்று? டிஸம்பர் அறிக்கையைப் பரிசிலனை செய்ததில் தொகுதி வட்டத்தில் ஒரு மாகாணம் புகுந்தால் அதன் கதி அப்புறம் அதோ கதிதான் என்று ஏற்பட்டுவிட்டது. அஸ்ஸாம் முதலிய மாகாணங்கள் இத் தொகுதி வட்டங்களில் கலந்துகொள்ள மறுப்பதே அரசியல் அறிவு ஆகும் என்று நமக்குப் படுகிறது. அரசியல் நிர்ணய சபை முறிந்துபோய்விடும் என்பதற்காக அந்த மாகாணங்களைத் தொகுதி வட்டங்களில் பங்கு எடுத்துக்கொள்ளச் செய்வது அனர்த்தத்தை விளைவிக்கும்.

தொகுதி வட்டத்தில் புகுந்த பின்னர் பிடிக்காவிட்டால் எப்பொழுது வேண்டுமானாலும் வெளிவந்து விடலாம் என்று சில புத்திமதிகள் கூறப்படுகின்றன. இது பெருந் தவறு. தொகுதி வட்டம் ஏற்பட்டு விட்டால் அதினின்று ஏதாவது ஒரு மாகாணம் வெளியேற வேண்டுமென்றால் புதிய அரசியல் திட்டப்படி ஏற்பட்ட மாகாண சட்டசபை அமைந்த பிறகுதான் அப்படிச் செய்ய இயலும் என்று திட்டத்தில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. அதைத் தெரிந்துகொண்டே இஷ்டப்பட்டபொழுது வெளிவந்துவிடலாம் என்று சொல்லுவது திட்டத்திற்கு முரண்பட்டதாகும். சட்டபூர்வமாக இதைப் பிரிட்டிஷ் கவர்மெண்டார் வற்புறுத்துவார்கள்.

டிஸம்பர் அறிக்கையிலிருந்து வெளியாவது என்னவென்றால் இந்த அரசியல் நிர்ணய சபையே ஒரு சூழ்ச்சி, அதில் புகுந்தால் வெளியேறுவது கடினம் என்று தெரிகிறது. அவ்வறிக்கையில் கூறியபடி நடப்பதாக ஒப்புக்கொண்டாலும் முஸ்லிம் லீக் மத்திய அரசாங்க விஷயத்திலும் முரண்பாடாக நடக்கலாம். தொகுதி வட்டங்களினின்று சில

நேயர்களுக்கு

இவ்விதழ் வெகு காலதாமதமாக வெளிவந்ததற்கு வாசகர்களின் மன்னிப்பைக் கோருகிறோம்.

இந்தியா கவர்மெண்டார் நமக்குத் தேவையான செய்தித்தாள் ரேஷன் பர்மிட் கொடுத்திருப்பினும், அதைக்கொண்டு சென்னையில் எங்கும் நமக்குத் தேவையான காகிதம் வாங்கமுடியவில்லை. காகித வியாபாரிகள் அனைவரும் செய்தித் தாள் இல்லை என்று கைவிரித்து விட்டார்கள். சில தினங்களுக்கு முன்னர்தான் நமக்கு டிஸம்பர் மாதத்திறகு வரவேண்டிய பேப்பர் வந்துசேர்ந்தது.

இந்தியா கவர்மெண்டாருக்கு இவ்விஷயமாக எழுதியுள்ளோம். தொடர்ந்தாற் போலப் பல மாதங்களுக்குத் தேவையான பேப்பரை வாங்கி வைத்துக்கொள்ள அனுமதி கவர்மெண்டாரிடமிருந்து கோரியிருக்கிறோம். அது கிடைத்துவிட்டால் உரிய காலத்தில் காவேரி வெளிவருமென்பதை நேயர்களுக்கு உறுதியாகக் கூறுகிறோம்.

ஜனவரி மாத செய்தித்தாள் சீக்கிரத்தில் கிடைக்காலம் என்ற நம்பிக்கை. எனவே தை இதழைக் காலாகாலத்தில் வெளியிட இயலும் என்று எதிர்பார்க்கிறோம்.

மாகாணங்கள் முரண்டிக்கொண்டு வெளிவந்தால் பிறகு நடக்கவிருக்கும் மத்திய அரசாங்க திட்டத்தில் லீக் கலந்துகொள்ள மறுக்கலாம். டிஸம்பர் அறிக்கைப்படி லீக் எந்த விஷயத்தில் கலக்கவில்லையோ அதைப் பிரிட்டிஷ் கவர்மெண்டார் ஒப்பமுடியாது என்று தெளிவாகக் கூறிவிட்டார்கள். இதிலிருந்து தெளிவாவது என்ன? லீகர்கள் இஷ்டப்படி நாம் போனாலும் அவர்கள் இழுத்த இழுப்புக்கெல்லாம் நாம் நடிக்கவேண்டும். அப்படியே கடைசிவரை நிர்ணய சபை நடந்தாலும் அதிலிருந்து வெளிவரும் மத்திய அரசாங்க திட்டம் அதிகாரமற்ற அரசாங்கமாகவிருக்கும். நாம் பிரிட்டிஷ் கவர்மெண்டின் திட்டப்படி நடந்ததன் பலன் நாட்டை நாம் விரும்பாமலே துண்டுபோட ஒப்புக்கொண்டதுடன் பலமான மத்திய அரசாங்கமும் ஏற்படுத்த முடியாமல் தவிப்பதேயாகும். எல்லைப்புற காந்தி அன்றே தெளிவாகச் சொன்னபடி இந்த அரசியல் நிர்ணய சபையே ஒரு பெரிய சூழ்ச்சி, அதைச் சீக்கிரம் முறிப்பதே நலம் என்று ஏற்படுகிறது. அது சரிவர நடந்தேறவேண்டும் என்ற ஆர்வத்தில் நமது அடிப்படையான கொள்கைகளை விட்டுக்கொடுப்பது அரசியல் அறிவாகாது.

பிரிட்டிஷ்காரர்களிடமிருந்து சமாதான முறையில், முஸ்லிம் லீகர்கள் பிரிட்டிஷாரின் கைப் பொம்மைகளாக இருக்கும் வரை, நாம் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது என்பது எல்லோருக்கும் தெளிவாயிருக்க வேண்டும். கௌரவத்திற்காக இனியும் நாம் அரசியல் நிர்ணய சபையைத் தூக்கிக்கொண்டு நடத்த முற்படக் கூடாது. அரசியல் நிர்ணய சபையின் முடிவுகளை அப்படியே நிறைவேற்றுகிறோம் என்ற வார்த்தை பறந்தோடிவிட்டது. இந் நிலையில் அதை இனியும் நடத்திக்கொண்டேபோவது வீண் காலவிரயமாகும்.

சுதேச மன்னர்கள் இன்னும் அதனருகே வரவில்லை. நமது தேசிய நோக்கத்திலேயே தீவிர அபிப்பிராய பேதம் ஏற்பட்டுவிட்டது. லீகர்கள் உட்புகுந்தபின் இவை அனைத்தும் மாறலாம். ஐக்கிய மனோபாவம் இல்லாத பல கட்சிகள் ஒன்று கூடி, பொதுவான திட்டம் வகுப்பது என்பது கடினம். அரசியல் நிர்ணய சபைக்கு ஒரு அரோகரா போட்டுவிட்டுப் பிரிட்டிஷ்காரர்களை வழிக்கு வரும்படி செய்வதே இனி நாம் செய்யவேண்டியது. பிரிட்டிஷ்—ஜின்னா ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டது என்பதை இனியும் நாம் உணராமல் இருப்பது நமக்குத்தான் வினைவிளைக்கும். வெள்ளையனே வெளியேறு என்ற கோஷம் ஓய்ந்துவிட்டது என்று சந்தோஷப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் பிரிட்டிஷார். முஸ்லிம்களை ஏவிவிட்டுச் சண்டையை முற்றவிட்டுக்கொண்டிருக்கிறார்கள் பிரிட்டிஷ் ராஜதந்திரிகள். முஸ்லிம் ராஜ்யத்தை ஸ்தாபிதம் செய்யும்நோக்கத்துடன் லீகர்களும் இதில் மதிமயங்கி ஹிந்துக்களுக்கு எதிரிடையாகப் போர் புரியத் தயாராகி வருகிறார்கள். இறுதியில் அவர்கள் தலையிலும் பிரிட்டிஷார் கை வைப்பார்கள் என்பதை மறந்துவிட்டார்கள் போலும்!

எனவே அரசியல் அரங்கம் கொந்தளித்து எக்கச் சக்கமான நிலையிலுள்ளது. பிரிட்டிஷ் ராஜதந்திரம் நம்மை வலையில் சிக்க வைத்துவிட்டது. வெகுதூரம் உட்புகுமுன் நாம் விழித்தெழுவது நலம்.

அட்டைப் படம்

நமது அட்டைப் படத்தை அலங்கரிப்பவர் ஸர் என். கோபாலஸ்வாமி ஐயங்கார். இவர் தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்தவர். இன்று அரசியல் நிர்ணய சபையில் அகில இந்தியத் தலைவர்களுடன் நிபுணர்கள் கமிட்டியில் அங்கத்தினராக விருந்து தொண்டாற்றி வருகிறார். புத்தி கூர்மையிலும், அறிவிலும் எல்லோரையும் மிஞ்சக் கூடியவர் என்பது சமீபத்தில் அரசியல் நிர்ணய சபையில் அவர் செய்த பிரசங்கத்திலிருந்தும், அதைத் தொடர்ந்து ஸர் ஸி. பி. ராமசாமி ஐயருடன் நிகழ்ந்த விவாதத்திலிருந்தும் வெளியாயிற்று. இவர் காலஞ்சென்ற ஏ. ரெங்கஸாமி ஐயங்காரின் சகோதரர் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே.

Coffee
Ours for Quality
RAW,
ROAST
OR GROUND.
GANESH & Co.


ஏன் இப்படிக்
கஷ்டப்படவேண்டும்
Saridon
ஸாரிடோன்
எல்லா வலிகளையும்
பத்தே நிமிஷத்தில் நிறுத்துகிறது





டாக்டர் பட்டாபி சீதாராமையாவும், பம்பாய் பிரதமர் பி. ஜி. கரேயும்.

நிர்ணய சபை

ஜகத் ஜீவன்ராம், டௌலத்ராம், ஸரத்போஸ் முதலியோர் சபைக்குச் செல்லும் காட்சி.

மற்ற மருந்துகளால் குணப் படுத்த முடியாதென அபிப் பிராயப்பட்ட பல்லாயிரக் கணக்கான குழந்தைகள் இவ்வபூர்வ மருந்தினால் காப் பாற்றப்பட்டிருக்கின்றனர்.

ஜம்பீஸ்
லிவர் க்யூர்

பிரபல டாக்டர்கள் இதை வைத்திய சாஸ்திரத்திற்கே ஒரு கலங்கரை போல் போற்றுகிறார்கள்.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும் அல்லது
ஜம்பி வெங்கட்ரமணய்யா & சன்ஸ்.
17, பிராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.
மற்றும் பம்பாய், கல்கத்தா, லக்ஷ்மணபுரி,
பெங்களூர், திருச்சிராப்பள்ளி.

லிவர்க்யூர் பிராஞ்ச் ஆபீஸ்
பெரியதெரு
கும்பகோணம்.

LIVER CURE Branch Office
Parekh Mansion
Sandhurst Road, (West)
BOMBAY 4.



நாஷனல்
இன்ஷ்யூரன்ஸ கம்பெனி லிமிடெட்
7, கவுன்ஸில் ஹவுஸ் ஸ்டிரீட், கல்கத்தா.

மதராஸ் பிராஞ்சு
நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்
362, சைனபஜார் ரோட்

★

ஸப் ஆபீஸ்:-
பெங்களூர் & மதுரை

மணத்தில் மிதந்த காட்சி

ரா. ஸ்ரீ. தேசிகன்

மாணவர்களின் பேர் அரவம் அந்திப் பொழுதின் அமைதியில் மாய்த்து விட்டது. கடற்கரைமீது ஒரு தனி அழகு படிந்திருந்தது. மனிதர்களின் சந்தடி ஓயவே இயற்கையின் புகலரும் நல்லிசைக் கானத்தின் இன்பம் உள்ளத்தில் பாய்ந்தது. இந்நிலையில் என் நண்பரும் நானும் இயற்கை அழகைப் பருகிக்கொண்டே உரையாடினோம்.

"படிப்பு நமக்கு என்ன தரும்?" என்றேன்.

"அறிவைத் தரும்" என்றார்.

"அறிவிலே எழக்கூடியதென்ன?"

"விநயந்தான் எழவேண்டும்"

"விநயத்தையா பார்க்கிறீர்கள்?"

"இல்லை, அகந்தைதான் தலைவிரித்தாடுகிறது."

"இது எதைப்போல இருக்கிறது தெரியுமா?"

"சொல்லுங்கள்"

"வளர்க்கின்ற தாய் குழந்தைக்கு நஞ்சை வழங்குகிறது போல இருக்கிறது: அகவுயிருக்கு அமுதமாகவேண்டியது, ஆலாலமாகிறது. தன்னையும் அழிக்கிறது; தரணியையும் அழிக்க முயலுகிறது"

"செல்வச் செருக்குக்கும் இதற்கும் வித்தியாசமென்ன?"

"கூறுங்கள்"

"செல்வம் போய்விட்டால், அதில் தளிர்த்தது அதோடு சாம்பி அழிந்துவிடுகிறது; அறிவுச் செருக்கோ நாளுக்குநாள் விஷம் போலத் தலைக்கேறுகிறது."

"அதற்காக நம்மைத் தாழ்த்திக்கொள்ளுகிறதா?"

MEHTA'S SPECIALITIES

Well-known for their efficacy and Medicinal values

1 **SUNDARI ELIXIR**
For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 **PHOSPHORUS OIL**
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 **MASTANA PILLS**
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 **DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA**
A great Blood Purifier & digestive & Potential Tonic.

Stocked by all important Chemists & Druggists of South India

K. S. MEHTA & CO.

250, China Bazaar, MADRAS.

"நம்மைத் தாழ்த்திக்கொள்ள வேண்டாம். அகண்டத்தை நினைத்து நம்மை நோக்குகிறபொழுது நமக்குப் பணிவு உண்டாகும்."

"அதை நினைத்தால்தானே."

"நினைக்காமற் போனால் நம் தருக்கிலே எதையும் நிந்திக்கப் புகுந்துவிடுவோம்."

"எவர்களைப்போல, சொல்லலாமா?"

"தடையென்ன?"

"நம்மோடு இரண்டு உபாத்தியாயர்கள் சேர்ந்திருக்கிறார்களே, தெரியுமா?"

"ஆம்; தெரியும். எதையும் நிந்திப்பதையே தம் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். ஒருவர் சிரித்தால் மற்றொருவர் சிரிப்பார், ஒருவரை ஒலியென்றால் மற்றொருவரைப் பிரதியொலி என்று சொல்லிவிடலாம். எதற்காகச் சிரிக்கிறார்கள் என்பது நமக்கு விளங்காது. அவர்களுக்குத்தான் அது விளங்குமா? அது சந்தேகம். ஆனால் அவர்கள் சிரிப்பிலே ஒரு நிந்தனை தோன்றும்; ஓர் இகழ்ச்சிக்குறி புலப்படும்."

"திறந்த வீட்டில் நாய் எட்டிப்பார்க்கிறதுபோல வகுப்புக்கு வகுப்பு வந்து ஓட்டுக் கேட்கிறாரே ஒருவர் அது எதற்காக?"

"அது தெரிந்த விஷயந்தானே! எந்த உபாத்தியாயர் என்ன பிழை செய்கிறார் என்றதைத் தெரிந்துகொண்டு விட்டால், அதை நினைத்து நினைத்துச் சிரிக்கலாமன்றோ.

பிறர் புரிகிற பிழையிலே—இல்லை—பிறர் குழப்பம் அடைந்து துயர் உறுகிற நிலையில் களிக்கின்ற இயல்பு அவருக்கு. அவ்வியல்புக்கு வசமாய்ச் செய்யத் தகாத காரியங்களைச் செய்கிறார். அவரைப் பார்த்துப் பலர் நகைக்கின்றனர் என்பதை அவர் உணர்கிறதில்லை"

"இவரைப் பற்றிப் பேசினது போதும். தினம் ஒரு புதிய புத்தகத்தைக் கையில் எடுத்து வருகிறாரே! அவரைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்" என்று வினவினார் என் நண்பர்.

"அவரைப்பற்றி ஒரு கதை சொல்லுகிறேன்.

"கேட்கிறீர்களா?"

"சொல்லுங்கள்"

"ஒரு புதுப் புத்தகத்தைக் கையில் வைத்திருந்தார். அதை மற்றொரு நண்பர் பார்த்துவிட்டார். "என்ன இப்பொழுதுதான் வெளிவந்ததுபோலிருக்கிறதே. "ஆமாம், ஓர் ஆச்சரியமான புத்தகமென்றார்" அந்த நண்பர் அதை வைத்துக்கொண்டு தெருத் தெருவாய்த் திரிய ஆரம்பித்தார். ஐந்தாறு நாட்கள் கழிந்தன. நம்முடைய நண்பர் ஒரு பெரிய அறிவாளி: கொடுத்த புத்தகம் இன்னதென்று தெரியாததனால், "என்ன கையில் புதுப் புத்தகம் இருக்கிறதே என்றார். "ஆமாம் இதைப் போலப் புத்தகமே இல்லை என்றார்" ஏற்கனவே புத்தகம் வாங்கிக்கொண்ட நண்பர். "அதைப் படித்துவிட்டுத் தரலாம் என்று நினைக்கிறேன்" என்றால் புத்தகங்கொடுத்த நம் நண்பர். கையில் புத்தகத்தை வைத்துக்கொண்டு இவர் முன்போலத் திரிய ஆரம்பித்தார்.

"இதனால் என்ன நன்மை"?

"இதனால் என்ன நன்மை என்று கேட்கிறீர்களே? இதில்தான் எல்லா நன்மைகளும் அடங்கியிருக்கின்றன. புகழ்வரும்; வித்வான் என்ற பெயர் எங்கும் முழங்கும்."

பெரிய மனிதர்கள் முகங்கொடுத்துப் பேசாவிட்டாலும் அவர்களைத் தம்முடைய உறவினர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்களுக்கும் இவர்களுக்கும் யாதொரு வித்தியாசமில்லைபோலும்"

"அதற்கென்ன சந்தேகம். பெரிய புத்தகங்களோடு உறவு கொண்டாடுவதும், பெரிய மனிதர்களுடன் சிநேகம் என்று சொல்லிக்கொள்வதும் ஒரே வேரில் பிறந்த தன்மைகளாகும். நம்முடைய நண்பர் இன்னொரு முறையை அனுஷ்டிக்கிறார். தனக்குக் கீழே உள்ளவர்களைக்கொண்டு தம்முடைய விரிந்த அறிவை உலகங் கேட்கப் பறையடிக்கிறார்.

அவரிடத்தில் பல்லைக்காட்டும் ஒரு பதர். "அவரோடு படிப்பு அழிந்துவிடும்போல் இருக்கிறதே" என்று இப்படி ஆரம்பிக்கும். "அதற்கு ஐயமில்லை. இப்பொழுதுதான் ஒரு புத்தகம் வெளியாயிற்று. அதை உடனே வாங்கிப் படிப்பவருடைய அறிவு விரிவடையாமலிருக்குமா? அவர் இறந்தால் நம் நாட்டை இருள் மூடிவிடும்" என்று அவர் வாயில் எழும் சொல்லிற்கு இவர் வாய் பிரதி ஒலிதரும்.

"நெருங்கிப் பழகினால் சாயம் வெளுத்துவிடுமே"

"நெருங்க விடுவார்களா?

"தூரத்துப்பச்சை" என்ற கிளட்டன் பிராக்கு எழுதினாரே. அவர் கொண்ட கருத்தை விளக்க இவர்கள் போன்றவர்கள் உதாரணங்களாக அமையலாமே"

"இத்தகைய அறிவாளிகள் உலகத்தில் விளங்குவதனால் இக்கட்டுரை எழுந்தது. இக்கட்டுரை எழுதிய ஆசிரியர் இவர்களுக்கு வந்தனம் அளிக்கவேண்டும்" என்றேன் நான்.

இந்த வேஷதாரி உண்மையாய் உழைத்து அறிவு புகட்டும் ஆசிரியரைப்பற்றி என்ன சொன்னார் தெரியுமா? என்று மீண்டும் கேட்டேன்.

"என்ன?"

இதுதான்: அது சுத்த கர்நாடகமாயிற்றே என்றார். அவரை நம் வேஷதாரி அஃறிணையாக்கிவிட்டார்.

"கர்நாடகம் என்றால் விளங்கவில்லையே"

கர்நாடகத்தைப்பற்றிச் சொல்லுகிறேன்.

மணியடித்ததும் வகுப்புக்குப் போவது; வீண் வம்பு அடிக்காமல் பாடத்தைச் சொல்லுவது; பாடங்களில் மேற்கோள்கள் காட்டப் பட்டிருந்தால் மேற்கோள் சுட்டும் புத்தகங்களை முழுவதும் படித்து வேண்டிய குறிப்புக்களுடன் பாடங் கற்பித்தல்:— இப்படித் தெய்வத்திற்குப் பயந்து பாடம் நடத்திவிட்டுத் தற்பெருமையை விரும்பாது, விளம்பரமே தொழிலாகக் கொள்ளும் உலகத்தில் தன்னை மறைத்துக் கொள்ளுதலையே விரதமாகக் கொள்ளுதல்: இது தான் கர்நாடகம். இத்தகைய குணங்களெல்லாம் அவரிடத்தில் இருக்கின்றன. அதனால் அவர் கர்நாடகம். மனச் சாட்சியிருப்பது கர்நாடகத்தின் சின்னமன்றோ?

"புது நாடகம் என்ன?"

மணி அடித்ததும் பதினைந்து நிமிஷங் கழித்து வகுப்புக்குப் போகுதல்: பதினைந்து நிமிஷத்துக்கு முன் வகுப்பை விட்டுவிடுதல். சொல்லித் தருகிற விஷயம் சற்றுக் கடினமாயிருந்தால், பண்டிதர்களைப் போல இப் பாட்டைச் சேதஞ் செய்யக்கூடாது; அதனுடைய அழகு குறைந்துவிடும்; என்ன அழகு! என்ன ஆச்சரியம்! என்று மெய்ம் மறந்து பிதற்றுதல். சொற்கடந்த நயங்

சோல் ஏஜண்ட்ஸ்: யுனைடெட் கன்ஸர்ன் 54, பந்தர் தெரு, மதராஸ்.
டிப்போ: (மதுரை: 42, தெற்காவணி மூலவீதி) (கோவை: 234, ராஜா தெரு)

களைப் பிரித்துப் பிரித்து ஆராய்தல் அழகன்று என்று சொல்லிவிடுதல். புத்தகங்களைப் பிரித்துப் பார்க்காமலேயே அவைகளைப் படிக்கும்படி மாணவர்களுக்குக் கட்டளையிடுதல். எந்தப் புத்தகத்திலிருந்து வரி வரியாய் ஒப்பிக்கின்றார்களோ, அதை மறைத்துவிடுதல்—ஏதோ புதிதாய் விஷயங்கள் சொல்லுகிறதாய்க் கேட்கிறவர்கள் நினைக்க வேண்டாமா?—அட்டவணை ஆசிரியர்கள், விஷய சூசிகை உரையாளர்கள், மனச் சாட்சியை மாய்த்தவர்கள். இவர்கள் நிரம்பிய உலகந்தான் புது நாடக உலகம்.

ஆடம்பரத்தைத் தவிர வேறொன்றுமே காணோமே. கர்நாடக உலகத்தவராய் நாமிருப்போமே என்றார் என் நண்பர்.

"எல்லாம் ஆடம்பரந்தான் என்றேன். புதிதாய் வந்த புத்தகங்களை மேஜைமீது பரப்பிவைத்துக் கொள்ளுதல், மலம், ஜலம் கழிக்கிற இடங்களில்கூடப் புத்தகங்களை வைத்துப் படித்தல்; அந்த நிமிஷம்கூட வீணாகக் கூடாதாம். தெருவிலே இரண்டு கைகளிலும் கட்டுப் புத்தகங்களைத் தூக்கிச் செல்லுதல்! இது ஒருவித ஆடம்பரம்"

"உங்களை வெகுநாளாகக் கேட்கவேண்டுமென்றிருந்தேன். நிதம் சாயங்காலம் கடற்கரைமீது பள்ளிக்கோலத்தோடு உலாவுகின்றாரே. அவர் யார்?"

"அவரைத் தெரியாதா?"

"தெரியாதே"

"அவர்தான் கீதாசாரியன். பலனில்லாமல் காரியஞ் செய்கிறவர். ஏதாவது புதிதாய்ப் பள்ளிகள் ஏற்பட்டால், அவைகளுக்கு உடனே தலைமை வகிப்பார். மாதச் சம்பளமில்லை. மாதச் சம்பளம் வாங்கினால் பலனோடு செய்கிற காரியமாகும். வருஷத்தில் பள்ளிக்கூடத்து மானேஜர்கள் ஏதோ மனம் உவந்து தந்தால் அதைப் பெற்றுக் கொள்ளுவார். தாம் விரும்பாமல், அதுவே வந்தால். கீதை உபதேசத்திற்கும், செயலுக்கும் விரோதமில்லையே" என்றேன்.

"இப்படிக் கீதை நமக்கு உதவினால் நலமாயிருக்குமே" என்று குறும்பு நகை இதழ்களின் ஓரங்களில் விளையாடப் பதில் சொன்னார் என் நண்பர்.

இன்னும் அநேக போலி உருவங்கள் எங்கள் முன் எழுந்தன, இவைகளுக்கிடையே அடக்கமே உருவாய் நின்ற ஒரு மாசற்ற ஆசிரியரின் உருவம் ஒரு வான வில்போல் விளங்கிற்று.

பொழுதும் தோய்ந்துகொண்டே இருந்தது. கோயிலில் மணி எட்டு அடித்தது. வான வீதியில் நக்ஷத்திர தீபங்கள் விளங்கின. என் நண்பர் தனியே சென்றார். நான் ஒரு சோலை வழியாய் அடிபெயர்த்து வைத்தேன். எங்கிருந்தோ ஒரு நறுமணம் வந்துகொண்டிருந்தது. ஆனால் மணத்தைப் பரப்பிய மலர் கண்ணுக்குத் தெரியவில்லை. உலகமறியாது எங்கேயோ காடுகளிலும் மலைகளிலும் திரிகிற சான்றோர்களின் தூய எண்ணங்கள் போல் இம்மணமும் மெல்ல வந்தது. மறைந்து நின்று மணத்தைப் பரப்பும் இச்சோலை மலர் இன்னொரு காட்சியை எழுப்பிற்று.

நான் புரிந்த வடதிசை யாத்திரையில் ஒரு ரயில் வண்டியில் சந்தித்த ஒரு பெரியவரின் முகம் என்முன் நின்றது. கூட்டத்தில் ஒரு சாதாரண மனிதர்போல அவர் அமர்ந்திருந்தார். அவர் கால்கள் சேற்றில் உழலும் உலக மாந்தரிடையே சஞ்சரித்தன; ஆனால் அவர் எண்ணங்கள் இருள் சூழ்ந்த உலகப் புயல்களுக்கும் மேகங்களுக்கும் அப்பால் விரிசோதியில் விளங்கும் தூய வான வெளியில் திரிந்தன. ஆடம்பரமான உடை இல்லை. சீமையில் வடமொழி பயின்று பெரிய உத்தியோகத்தில் அமரவில்லை. வடமொழி தெரியாமலேயே மேற்றிசையில் நம் வேதாந்தத்தை விரித்துப் புகழ்மாலை சூடவில்லை. ஆனால் விநயத்திற்கே ஓர் எல்லையாய் நின்ற அவர் தூய வடிவு என் சிந்தைக் கோயிலிலே வீற்றிருக்கிறது. இத்தகைய உருவத்தைப்போல விளங்குகின்ற மாசறு காட்சியுள்ள மஹான்களுக்கு என் சிந்தை விரைகிறபொழுது பொய் பொதிந்த பள்ளிக்கூடம், போலி ஆசிரியர்களின் உருவங்கள், பயங்கரமான உலகச் சந்தடிகள், ஓலங்கள், ஏமாற்றங்கள், பொய்கள், ஆடம்பரங்கள், எல்லாம் மறைந்துவிடுகின்றன. என்னையறியாமல் கண்களில் நீர் அரும்புகின்றது: சென்னிமேற் கரங்கள் குவிகின்றன: உள்ளத்தில் ஓர் அமைதி பாய்கின்றது. அந்த அமைதியில் உண்மை வெளியாகின்றது. அந்நிலையில் அச்சான்றோர்களின் உள்ளத்தோடு என் உள்ளமும் உரையாடுகிறது.



ரெக்ஸோனாவினால் சரும ஆரோக்கியமேற்படுகிறது ... சரும ஆரோக்கியமே அழகு

அழகான மேனியின் இரகசியம் சரும சுகமே. உங்கள் சருமம் ஆரேர்க்கிய முடையதாக இருக்காவிட்டால் அழகு ஏற்படாது. கேடில் எனும் மருந்து சேர்ந்ததும், விரைவில் நுரையைத் தருகின்றதுமான ரெக்ஸோனாவின் உதவியை பயன் படுத்திக்கொள்ளுங்கள். இந்த ஆன்டிஸெப்டிக்கும், குணமளித்துப் போஷிக்கும் தன்மையுடையதுமான தைலங்கள் சேர்ந்த விசேஷ மருந்தை, ரெக்ஸோனாவின் நுரை சருமத்தின் அடிப்பாகத்திற்கு கொண்டுசேர்த்து, மலினங்களை அகற்றி சுத்தம்செய்து சருமத்திற்கு சுகத்துடன் வனப்பையுமளிக்கிறது. மேனி அழகிற்கு சருமசுகமே அடிப்படை என்பதற்கும், ரெக்ஸோனாவின் மருந்து கலந்த நுரை சௌந்தர்ய மேற்பட உதவுகிறது என்பதற்கும் சந்தேகமே கிடையாது.

ஆடவருக்கு ரெக்ஸோனா: ரெக்ஸோனா பெண்களுக்காகமட்டும் வழங்கப்படும் சோப் பென்க் கருதாதீர்கள். அது ஆடவருக்கும் மிக அவசியமான சோப். ரெக்ஸோனாவிலிருக்கும் கேடில் ஆன்டிஸெப்டிக்கும், குணமளிக்கும் தன்மை வாய்ந்ததுமாதலால் சருமத்தைப் பாதுகாக்கிறது. சரும சுகத்தினாலேற்படும் செழித்த ஆரோக்கியம் ஆடவருக்கு தனிப்பெருமையைக் கொடுக்கும்.

குழந்தைகளுக்கு ரெக்ஸோனா: ரெக்ஸோனாவின் மிருதுவான நுரை குழந்தையின் இளம் சருமத்தைத் தேற்றுகிறது. கேடில் மருந்து சிறு அவயவங்களை எரிச்சல் அரிப்பு முதலானவைகளிலிருந்து காப்பாற்றுகிறது. குழந்தைகளுக்கு, மிக உத்தமமான சோப்பே உகந்ததாகும்.

★ ரெக்ஸோனாவிலுள்ள கேடில் சுகமளித்துப் போஷிக்கும் தைலங்கள் சேர்ந்த விசேஷ மருந்து. அது சரும ஆரோக்கியத்திற்கு மிகவும் அவசியமானது.

RP. 30-23 TM

REXONA PROPRIETARY LIMITED



கொடியேற்று விழா.



ராஷ்டிரபதி ஆசார்ய கிருபலானி.

காங்கிரஸ் கூட்டம்



அஸாத், ஸரோஜினி, நேரு, படேல், கபார்கான் முதலிய தலைவர்கள் காங்கிரஸ் கூட்டத்திற்கு வரும் காட்சி.



ஸ்திரீ தொண்டர் படையினர் அணிவகுப்பு.

அன்றும் இன்றும்

யோகி சுத்தானந்த பாரதியார்

1927-ஆம் ஆண்டு; சென்னை காங்கிரஸில் எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார் பூரண சுதந்தரத் தீர்மானம் கொண்டுவந்து ஒரு மணி நேரம் பேசினார். சில மிதவாதிகள் அதை எதிர்த்தனர். ஐயங்காருக்குக் கோபம் வந்துவிட்டது. பூரண சுதந்தரம் இல்லாவிட்டால் காங்கிரஸ் எதற்கு, நான் எதற்கு என்று குமுறினார். மௌலானா முகம்மதலியும் மதன்மோகனமாளவியாவும் "வாஹ்வா!" போட்டுத் தீர்மானத்தை ஊக்கினர். அன்ஸாரி பூரண சுதந்தர இந்தியா பூரணமான குடியரசு இந்தியாவாகும், என்று பேசினார். காங்கிரஸிற்கு வந்திருந்த நேருவும் சுபாஷ்போஸும் இந்தியா என்றால் இந்தியர் குடியரசு என்று நண்பருள் பேசிக்கொண்டனர். இந்து முஸ்லிம் ஒற்றுமைத் தீர்மானத்தை மாளவியா பிரேரேபித்துப் பேசினார். மௌலானா முகம்மதலி அவரைத் தழுவிக்கொண்டு "இஸ்லாமியருக்கு என்னவேண்டும் என்றால் பண்டிட்ஜீயைக் கேளுங்கள் என்பேன்" என்றார். இந்தியக் குடியரசு இந்து—முஸ்லிம் அரசு என்பதை அன்று எல்லாரும் நம்பினர்.

சில மிதவாதிகளே யூனியன் ஜாக்கின் திருவடி நிழலில் மாகாண சுயராஜ்யம் அரைக்காணி சுதந்தரம் என்று முன்னே பேசியதுண்டு. அவர்களைக் காலம் ஒப்பவில்லை. மிதவாதிகள் என்றும் இந்திய ஜனங்களின் மதிப்பைப் பெற்றதில்லை. எந்த நாட்டிலும் பொதுஜன மதிப்பைப் பெற்றது பூரண சுதந்தரமே. இத்தாலியில் கரிபால்டியும் மஜினியும், ரஷ்யாவில் லெனினும் டிராட்ஸ்கியும், பிரான்ஸில் வால்தேரும் ரூஸோவும், அமெரிக்காவில் வாஷிங்டனும், துருக்கியில் கெமால்பாஷாவும், சீனத்தில் சுன்யாத்ஸனும் — முழு விடுதலை வீரராய் விளங்கினர்.

இந்திய சுதந்தரப்போர் 1857-மே, 11ல் தொடங்கியது. அதைப் பிரம்மவர்த்த அரண்மனையிலிருந்து தூண்டி நடத்தியவன் நானாசாகெப். தாந்தியாதோபே, ராணி லக்ஷ்மீபாய் அகமத்மௌல்வி, அஸிமுல்லாகான், ஆகிய நால்வரும் அவனுக்கு நான்கு கைகளாக உதவினர். அஸிமுல்லாகான் கட்டழகன்; ஆங்கிலம் பிரெஞ்சு அழகாகப் பேசுவான். அவன் இங்கிலாந்து, பிரான்சு, ரஷ்யா, துருக்கி தேசங்களுக்குச் சென்று துப்பாக்கிகள் சேர்த்ததுடன், போர் முறையும் கற்று, இந்தியாவுக்கேற்ற அரசியலையும் முறை வகுத்து வந்தான். அஸிமுல்லாவின் பேச்சிலும் அழகிலும் வெள்ளையர் மயங்கி அவன்கேட்டதெல்லாம் உதவினர். பல வெள்ளை அழகிகள் அவனிடம் மயங்கிக் கடிதம் எழுதினர். அஸிமுல்லாகானே நானாசாகெபுவின் மூளை என்னலாம். இவர்கள் அனைவரும் வகுத்த இந்திய அரசியல் மிகத்திறமையுள்ளது. இந்து முஸ்லிம் ஒற்றுமையும், சர்வஜன சுதந்தரமும் அடிப்படையான இந்திய ராஜ்யத்தை இவர்கள் நிலை நாட்டினர். தில்லியை விடுதலைசெய்து பகதூர்ஷாவை அரியணையில் வைத்ததும் புரட்சிக்காரர் "ஐயா, நீ பழைய பாதுஷாக்களைப்போல் சுயேச்சாதிகாரம் செலுத்தமுடியாது. நீ ஜனநாயகன்; பொதுஜனப் பிரதிநிதி; ஆதலால் ஜன சம்மதமான கொள்கைபற்றி ஆளவேண்டும். இந்தியா சுதந்தரம் பெறுவது ஒரு அரசனுக்கோ பாதுஷாவுக்கோ அன்று, இந்தியா விடுதலைபெறுவது இந்தியருக்காகவே. நீ இந்தியரின் சேவகனே" என்றனர். அப்படியே கருதி பகதூர்ஷா தேசபக்தர்களைக்கலந்து ஆட்சி செலுத்தினான். நானாசாகெபு "பாஹர்சலோ......வெளியேறு வெள்ளையா!" என்ற கோஷத்துடன் ஹர ஹர மஹாதேவா என்ற சங்கநாதமும் முழங்கிப் போர்செய்தான். அந்தக் காலம் இருந்த இந்து—முஸ்லீம் ஒற்றுமை எந்தக்காலமும் இல்லை. பஞ்சாபிலிருந்து சீக்கியப்படையும், சில பயங்குளி ஜமீந்தார்களும் ஆங்கிலேயர் பக்கம் சேர்ந்து தேசபக்தர்களைச் சுட்டுத் தள்ளினார்கள். இந்தத் துரோகிகளாலேதான் அந்த மகத்தான போர் முயற்சி தூக்குமேடையேறியது. இந்து—முஸல்மான் ஒற்றுமை

யினுலேதான் போர் எரிமலைபோல் எழுந்தது. நானுவின் தூதர் அகமத்மௌல்வி போன்ற இஸ்லாமியர். "ஆஹா, இந்து முஸ்லிம்சேர்க்கையால் அல்லவா இப்படிப் புரட்சி எழுந்தது. நமது கொடி இங்கே பறக்க வேண்டுமானுல் இந்த இரண்டு சகோதரரையும் பிரித்து வைக்க வேண்டும் என்று லாரென்சும் ஹால்லக்கும் நீலும் கானிங்கு துரைக்கு உபதேசித்தனர். அக்காலம் பகதூர்ஷா "இந்துக்கள் நம் சகோதரர்; நாம் அவர் சகோதரர்; ஆதலால் ஒருவருக்கொருவர் அன்பு வளரவேண்டும்; அருவருப்பான செயல்களைச் செய்யக்கூடாது; இன்று முதல் முஸல்மான்கள் பசுவைக் கொல்லக் கூடாது" என்று கட்டளையிட்டான். முஸ்லிம்கள் பசுக்கொலை தவிர்த்தனர். இந்துக்களுடன் கைகுலுக்கினர். ஒருவர் திருவிழாவில் ஒருவர் பங்குகொண்டனர். மோகரம் பண்டிகைக்கு இந்து புலிவேஷம் போடுவான்.

இப்படியிருந்த சமுதாயத்தைப் பிரிக்க ஓர் அன்னியன் புகுந்தான். "தம்பீ, இந்துக்கள் தெருவில் பசுமாட்டை வெட்டு—பணம் தருகிறேன்; எதிர்த்தால் போடு சண்டை; நானிருக்கிறேன்—பயப்படாதே" என்று தூண்டிவிட்டான். பணத்தாசை பிடித்த சமூகத்துரோகி, அப்படியே செய்தான்; ஹிந்து தர்மத்தை இகழ்ந்தான். பகை மூண்டது. கலகம் வலுத்தது; அன்னியன் அந்தப்பக்கம் சேர்ந்து இந்தப் பக்கம் உள்ளவரை அடித்து நொறுக்கினுன். இந்தக் கலகம் அடிக்கடி வலுத்தது. நாடு சுதந்திரம் வேண்டும்போதெல்லாம் இந்து—முஸ்லிம் சச்சரவைத் தூண்டிவிடுவது அன்னியர் தந்திரம். இக்கலகம் வங்காளத்திலும் சிந்துவிலும். டில்லியிலும் கான்பூரிலும் அடிக்கடி நடக்கும். பாலஸ்தீனில் யூத-அரபியச் சண்டை போல, இந்தியாவில் இந்து முஸ்லிம் சச்சரவு அன்னியர் ஆட்சிக்குக் கொழு கொம்பானது. 1906-ல் கர்ஸான் பிரபு வங்காளத்தைப் பிரித்தான். மேற்கே இந்து—கிழக்கே முஸ்லிம் என்று வகுத்தான்; கிழக்கு வங்காளம் பாகிஸ்தானுனது. அக்காலம் முஸல்மான்கள் இப்பிரிவினையை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர். இந்து முஸ்லிம்கள் கைகோத்து நின்று அன்னிய ஆதிக்கத்தை எதிர்த்தனர். அந்தக்காலம் ஹகீம் அஜ்மல்கான், நவாப் சயத் பஹதூர், ரஹிமத்துல்லாசயானி, பத்ருமீன் யாப்ஜி, ஜின்னு, பிற்காலம் அன்ஸாரி, முகமதலி முதலியோர் இந்து முஸ்லிம் ஒற்றுமையைப் போற்றினர். திலகர் காலத்தில் எவ்விதமான வேறுபாடும் இல்லை. மாந்தலேயிலிருந்து விடுபட்டு வந்த பிறகு திலகர் லக்னே காங்கிரஸில் தோன்றினுர். (சுதேச இயக்கத்தின் தந்தையான திலகர் ஒரு காங்கிரஸிற்குக்கூடத் தலைமை வகிக்காது போனது வருந்தத்தக்கது.) திலகர் இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காகப் பாடுபட்டார்; ஜின்னுவும் அக்காலம் முஸ்லிம்லீக்—காங்கிரஸ் ஒற்றுமையை வற்புறுத்தினுர். 1920-முதலே அவர் மனம் வேறு படத் தொடங்கியது.

காங்கிரஸின் முன் கதையெல்லாம் ஆங்கிலப் பேச்சும் வந்தேமாதரகோஷமும், கைத்தறி ஆடையும், பிரிட்டிஷ் கொடிக்கீழ் உரிமைக்காக மனுச் செய்வதுமாயின. பெசண்டு காலத்தில், இந்தியர் சுதந்தரம் வேண்டும் என்று கையெழுத்திட்ட காகிதமூட்டை கப்பல் கப்பலாக லண்டனுக்குச் சென்றது. அத்தனையும் பலசரக்குக் கடைக்குப் போயிருக்கும். காந்திஜி வந்ததிலிருந்தே காங்கிரஸ் மறுமலர்ச்சி அடைந்தது. பேச்சுச் சுருங்கிக் காரியம் தீவிரப்பட்டது. காங்கிரஸ் பொது ஜனசக்தியாகி, உலக மதிப்பைப் பெற்றது மஹாத்மாவினுலேதான். இன்னது செய்வதென்று தெரியாது விழித்த நாட்டிற்கு, மஹாத்மா சமயசஞ்சீவிபோல சத்யாக்கிரஹத்தைத் தூண்டி அபயமளித்தார். இந்திய ரக்ஷகன் மஹாத்மா காந்தியே. அக்காலம் இராவணகம்ஸ் துரியோதனுதிகளின் கொடுங்கோலைத் தகர்க்க இராமனும் கண்ணனும் வந்தது போலவே இக்காலம் மஹாத்மாகாந்தி அவதரித்தார். அவரைப் போன்ற மஹாபுருஷர் இந்த உலகில் இல்லை; எக்காலத்திலும் இருந்ததில்லை. இந்தியா முழுவதும் ஒரே சமுதாயமாகவாழ மஹாத்மா தம்மையே தியாக பலியாக்கிப் பட்டினி இருந்து தவம் புரிந்தார். ஹரிஜனங்களுக்கு அவரே அன்புத் தந்தை; அவர்களை ஹிந்து சமுதாயத்தில் கௌரவமாக ஐக்கியப்படுத்த அவர் என்றும் அரிய முயற்சி செய்துவருகிறுர். தமது திருவா

இந்தியன் பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்

நார்த் பீச் ரோட், **மதராஸ்.**

●

மதராஸ் ஆபீஸ்கள்:

எஸ்பிளனேட், மவுண்ட் ரோடு,
திருவல்லிக்கேணி, தியாகராயநகர்,
மயிலாப்பூர், புரசைவாக்கம்,
எழும்பூர்.

●

தென் இந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன

●

வழங்கி வாக்களிக்கப்பட்ட முலதனம்	- ரூ. 69,96,600
செலுத்தப்பட்ட முதைனம்	ரூ 50,79,613
ரிஸர்வ் நிதி	- ரூ. 56,87,200

டிபாஸிட் ரூ. 17 கோடிக்குமேல்

●

எல்லாவித பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்.

N. கோபால அய்யர்.
செக்ரெடரி:

சகம் அடங்கிய பத்திரிகைக்கே ஹரிஜன் என்று பெயரிட்டார். இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காக மஹாத்மா செய்த தவம் போல் வேறுயாரும் செய்ததில்லை. ராஷ்டிரபாஷையான ஹிந்துஸ்தானியை அவர் இரு வகுப்பினருக்கும் பொதுவாயிருக்கும்படி திருத்தி அமைத்திருக்கிறார். கடினமான பார்சீ கடினமான சமுஸ்கிருத பதங்களை நீக்கி, பாமர ஜனங்களும் தெளிவாக அறிந்துகொள்ளும்படி சரளமாக ஹிந்துஸ்தானியை அவர் ஆக்கினார். தேவநாகரியுடன் உருதுலிபியும் கற்கும்படி இந்தி மாணவரைத் தூண்டினார். முஸ்லிம்களிடம் அவருக்கிருக்கும் கருத்தும் கவனமும் ஆச்சரியமானவை. இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காக 21 நாள் பட்டினியாயிருந்து முகம்மதலிக்குக் கோதானம் செய்தபிறகும் காங்கிரஸும் லீகும் பிரிந்துபோயின, காங்கிரஸ் எப்போதும் எல்லாருக்கும் பொதுமன்றம். சாதிமத வேறுபாடில்லை; வகுப்புவாத வாடை இல்லை. காங்கிரஸ் தாயின் உள்ளம் பரிசுத்தமான அன்புமயம். அதை அறியாமல் சிலர் வகுப்புவாதத்தில் கிளம்பி இந்திய சுதந்தரத்திற்கு முட்டுக்கட்டைபோட்டது வருந்தத்தக்கது,

1942-ல் காங்கிரஸ் தீவிரமாகக் கிளப்பி "வெளியேறு வெள்ளையா" என்று வீறிட்டது. பலன்? தலைவர்கள் எல்லாரும் சிறைப்பட்டனர். நாடெல்லாம் புரட்சிப் புயல்வீசியது. 1857-க்குப் பிறகு 1942 தான் பெரும் புரட்சியைக் கண்டது. சுபாஷ்சந்திரபோஸின் ஆஜாது ஹிந்து சேனையும் ஜெஹிந்து முழக்கமும் இந்திய சுதந்தரக் கனலை ஆசியாமுழுதும் பரப்பிவிட்டன. நேதாஜியின் சிம்மகர்ஜனை இன்று ஒவ்வொரு இந்திய உள்ளத்திலும் இடிமுழக்கம் செய்கிறது. அவர் சேனையில் இந்து முஸ்லிம் வேறுபாடில்லை. அவர் இன்று இருந்தால், இப்போது நடக்கும் பரிதாபமான கலகங்கள் நிகழ்ந்திரா. காங்கிரஸ் தீவிர இயக்கம் தொடங்கியதும், லீகின் பிடிவாதமும் தீவிரமானது. மகா புத்திமானாகிய ராஜாஜி ஜின்னாவை வசப்படுத்தத் தூது நடந்தார். காந்திஜீயையும் அழைத்துவைத்து ஜின்னாவுடன் பேசச் செய்தார். இந்து முஸ்லிம் ஒற்றுமையின் அவசியத்தை இருவரும் உணர்ந்தே அப்படிச் செய்தனர். அன்று

மட்டும் ஒற்றுமை ஏற்பட்டிருந்தால், இந்தியா இதற்குள் விடுதலைத் திருநாள் கொண்டாடியிருக்கும். காந்தி ஜின்னு பேச்சு எங்கே வெற்றிபெறுமோ என்று அமெரியும் அஞ்சினர். கிலாபத்து இயக்கத்தின்போது இந்து முஸ்லிம் வேறுபாடே கிடையாது. அக்காலம் நான் மசூதியில் வசித்து ஐந்துவேளையும் நிமாசும் பிஸ்மில்லாஹி ஜபமும் செய்தேன். கிலாபத்துக் கூட்டங்கள் மசூதியிற் கூடின. முமம்மது சௌகதலிகள், யாகுப் ஹாஸன், அன்ஸாரி, அபுல்கலாம் அஜாது முதலியோர் மஹாத்மாவின் பஞ்ச பாராக்களாயிருந்தனர். பிறகு ஏனோ சௌகதலி மஹாத்மாவை எதிர்க்கத் தொடங்கினர்! காங்கிரஸ் கிளர்ச்சி பலமாகும்போதெல்லாம், பிரிட்டிஷ் கமிஷன் வருவதும், சீர்திருத்த நாடகம் நடப்பதும், இந்து முஸ்லிம் கலகம் முதிர்வதும் பிறகு கைவிரிப்பதும் வழக்கமாய்விட்டன. ஸைமன் கமிஷன் வந்த பிறகுதான் முஸ்லிம் லீகின் கிளர்ச்சி மும்முரமானது. உப்பு சத்தியாக்கிரகத்திற்குப் பிறகு, பிரிட்டிஷ் சர்க்கார் வட்ட (முட்டை) மேஜை மகாநாடு நடத்தி, காந்தியையும் விடுதலை செய்து லண்டனுக்கு அழைத்துச் சென்றது. அங்கே மஹாத்மா பிரிட்டிஷ் ஆட்சியின் அலங்கோலத்தை வெட்டவெளிச்சமாக்கிப் பூரண சுதந்தரம் கேட்டார். வந்ததும் அடக்குமுறையும் சிறையில் அடைக்கு முறையும் அமளிபட்டன. அந்தக் காலம் முதல் ஜின்னுவின் பாகிஸ்தான் பல்லவி விறுவிறுத்தது. சூழ்ச்சிமேல் சூழ்ச்சி நடந்தது, காங்கிரஸும் காந்தியும் கெஞ்சக் கெஞ்ச லீக் மிஞ்சி மிஞ்சிப்போனது. கிரிப்ஸுடன் வந்த கூப்லாண்டு ஒரு தந்திரத் திட்டம் வகுத்தார். அதுதான் பெதிக்லாரென்ஸ் திட்டத்திற்கு அடிப்படையானது. அதில் நுட்பமாகப் பாகிஸ்தான் அடங்கியுள்ளது. அப்படி இருந்தும் சமாதானம் வரவில்லை. ஒரு சமயம் ஆம், மறு சமயம் இல்லை என்று லீகின் சித்தம் போய்க்கொண்டிருக்கிறது. காங்கிரஸ் இடைக்கால ஆட்சியை மேற்கொண்ட பிறகு, லீகின் நடத்தை அபாயமாய்விட்டது, நேரடிநாளின் கோரக்கொலை நாடகத்தை நினைத்தால் குடல் நடுங்குகிறது. கல்கத்தாவும் நவகாளியும் பாகிஸ்தான் ருசியைக் காட்டிவிட்டன! அதிகம் சொல்வானேன்? 1857-ல் சுதந்தரத்திற்குச் சீக்கியர் முட்டுக்கட்டையிட்டனர். 1946-ல் சுதந்தரம் நிலைக்காமல் லீக் முட்டுக்கட்டைபோடுகிறது. வல்லபாய் படேலும், ஜவஹரும் விஷயத்தைத் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். நாட்டில் குண்டர் சண்டதாண்டவமாடுகிருர்கள். இந்த நிலையிலும் பீஹாரில் முஸல்மான்களை இந்துக்கள் துன்புறுத்தியதைக்கேட்ட மஹாத்மா குடல் பதறி, பட்டினி கிடப்பேன் என்றுர். ஜவஹர்லால் "ஒரு முஸ்லிமைத் தொடுமுன் என்னைச்சுடு" என்று வீறிட்டார். காங்கிரஸின் முஸ்லிம்—அபிமானம் இதிலிருந்து தெளிவாகிறது.

இன்று காந்திமகான் நவகாளி ஜில்லாவிலிருந்து இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காகத் தமது அன்பு மின்சாரத்தைச் செலுத்துகிருர். தொண்டு கிழவர், தடி ஊன்றிக்கொண்டு வீடு வீடாகச் சென்று அபயந்தருகிருர். முஸ்லிம்கள் வீட்டிற்குச்சென்று குரான்சாரத்தை உபதேசிக்கிருர். நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்கிருர். அனுதைகளை ஆதரிக்கிருர். இன்று அனுதரக்ஷகன் என்று ஒருவரைச் சொல்ல வேண்டுமானுல், மகாத்மாவையே குறிப்பிடலாம். மஹாத்மாவின் வாழ்வில் எத்தனையோ நிகழ்ச்சிகள் உண்டு; இன்று அவர் வங்கத்தின் லீக்—மந்திரி சபையையே அன்பினுல் வசப்படுத்திக்கொண்டு, நவகாளியில் செய்து வரும் கருணைத்தொண்டு, ஒப்புயர்வற்றது. உலக சரித்திரத்தில் இதற்கு ஈடான சமரசசேவை கிடையாது. இந்த அன்பைக் கண்ட பிறகாவது நாட்டில் ஒற்றுமை நிலைக்குமா? அதுதானே இல்லை. இதோ லண்டனில் வேவலுடன் சென்ற தலைவர் தூது பலிக்கவில்லை. முன்னே ஒப்பிய ஜின்னு பின்னே உதறித் தள்ளினுர்—இனி வழி! தைரியமே வழி. இந்தச் சமயம் தேசிய முஸ்லிம்கள் திறமையுடன் சேர்ந்து சுதந்தர விரோதிகளை வாயடக்க வேண்டும்.

அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்

ராமய்யா

நேற்று இரவு நானும் அம்மாஞ்சியும் ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகளைச் சந்தித்தோம்! எங்கு, எப்படி என்று கேட்க வேண்டிய அவசியமில்லையே? ஒரு சுனவில்தான் கண்டிருக்கவேண்டும் என்று சூசனையாகத் தெரிந்துகொண்டிருப்பீர்களே? ஸ்வாமிகளைப் பார்த்தவுடன் நானும் அம்மாஞ்சியும் நமஸ்காரம்செய்து, க்ஷேமலாபம் விசாரித்துவிட்டு அடுத்த இரண்டு மூன்று மாதங்களில் அவர் எங்கே தாமசிப்பாரோ, என விசாரித்தோம்.

ஸ்வாமிகள்: நேற்றையதினம்தான் திருவிசநல்லூர் அய்யாவாள் திதி முடிந்தது. வருஷா வருஷம் என்ன ஜோலியிருந்தபோதிலும் அங்கே போகாமல் விடுவதில்லை. அந்த இடத்தில் கொஞ்சம் சிரத்தை இன்னும் உலாவிக்கொண்டிருக்கிறது. ஆகையால் அங்கே சிறிது பசை எனக்கு உண்டு, இனி மெல்ல மதராஸுக்குப் போகலாமென்று நடந்துகொண்டிருக்கிறேன்.

நான்: ரொம்பசரி, மியூஸிக் அகாடமியார் ஒரு பெரிய சங்கீதத் திருவிழா நடத்துகிறார்களாம்—தங்களுடைய ஞாபகார்த்தமாக—அதையும் போய்ப் பார்த்துவிட்டு வரலாம் என்கிற உத்தேசம்போலிருக்கிறது!

அம்மாஞ்சி: அசட்டுப் பிசட்டு என்று உளறாமலிருக்கமாட்டாயா, நார்த்தங்காய்? ஸ்வாமிகள் சொல்வதைக் கேட்போமே!

ஸ்வாமி: மதராஸிலே, மியூசிக் அகாடமியா? ஸ்ரீராம, ஸ்ரீராம! என்னையும் பார்த்து இந்தமாதிரி கேள்வி கேட்கிறாயே, நியாயமா? வாஸ்தவமாக நான் மதராஸ் போவதற்குக் காரணத்தைக் கேட்டாயானால், ரொம்பவும் சந்தோஷப்படுவாய். என்ன தெரியுமா? வீணை தனம்மாள் நாலுநாள் தன்னோடு வந்து இருந்துவிட்டுப் போகும்படியாகக் கேட்டுக்கொண்டாள். அவளுடைய ஜாகைக்கு க்ஷேத்ரஞ்யர் வந்திருக்கிறாராம். அந்தம்மாளுக்குப் பத்து பதங்கள் சொல்லிவைக்கிறாராம். சொல்லிவைத்துக் கொண்டிருக்கும்போது கேட்டால் ரொம்பவும் ருசிகரமாயிருக்கும். நானும் அவைகளை எழுதிப்போட்டுப் பாடம் பண்ணிவிடுவேன். க்ஷேத்ரஞ்யரையும் பார்த்து வெகுநாளாய்விட்டது. அவரோ ஒரு இடத்திற்கும் போகமாட்டார். பட்டணத்தில் வந்தால் தனம்மாளுடைய வீட்டில்தானிருப்பார். அவரும் வேறொருவரையும் தெரிந்துகொள்ளவில்லை. சாதாரண சங்கீதக் கூட்டங்களில் அவருக்கோ இடம் கிடையாது! அவரைப் பார்க்கவேதான் நான் பட்டணத்துக்குப் போகிறேன். தெரிந்ததா விஷயம்?

நான்: புத்தி! புத்தி! தவடையில் போட்டுக்கொள்ளுகிறேன்! ஆனால், ஸ்வாமி, ஒரு கேள்வி கேட்கவேண்டும்! தாங்கள் இன்னும் பாடம் பண்ணப்போகிறேன், என்கிறீரே. தாங்கள்கூட க்ஷேத்ரஞ்யருடைய பதங்களை அவ்வளவு பெரிதாக எண்ணிப் பாடம் பண்ணவேண்டிய காரணம் என்ன?

ஸ்வாமி: காரணமா? சுத்த பித்துக்குள்ளிமாதிரி பேசுகிறாயே. க்ஷேத்ரஞ்யர் எவ்வளவு பெரியவர்? என்ன அனுபவசாலி, எப்படிப்பட்ட மகானுபாவர்? நான் பத்துக் கிர்த்தனைகளில் அமைத்த ரசபாவங்களை அவர் ஒரு பதத்தில் அமைத்துப் போட்டிருக்கிறாரே, தெரியுமா? அவருடைய பதங்களிலிருந்து நான் எவ்வளவு விஷயம் தெரிந்துகொண்டிருக்கிறேன், என்ன! இப்போது எனக்கு முக்கியமாக அவருடைய தோடிபதம் அப்பட்டமாகக் கேட்கவேண்டுமென்று இருக்கிறது. "இன்னாள்ளுவல காதம்மா, மூவ்வகோபால" என்று தோடியில் அமைத்திருக்கும் பதத்தை அவர் வாயாலே பாடிக் கேட்டு ஆனந்திக்கலாம் என்றல்லவோ போகிறேன். தனம்மா வாசித்து நான் கேட்டு ஆனந்தப்பட்டிருக்கிறேன். க்ஷேத்ரஞ்யரே பாடினால் அந்தப் பதம் எப்படி இருக்கும்? அடடா! ஸ்ரீராம! ஸ்ரீராம!

அம்மாஞ்சி: ஸ்வாமி, தோடி பதம் தவிர, சங்கராபரண பதம், ஸஹானா பதம், பைரவி பதம், எது குலகாம்போதி பதம், இவை நாலும்கூடப் பாடச் சொல்லிக்

கேட்டுவிட்டு வாருங்கள். அவர் சுத்தமாகப் பாடி மணம்பெற்ற காற்றுவது சிறிது உலாவிக்கொண்டிருக்கட்டும்!

நான்: அவர் பாடிக்கொண்டிருக்கும்போது அகில இந்திய ரேடியோ அதிகாரிகளைக்கொண்டு ஒலி பரவச் செய்யலாமே, ஐயோ, நல்ல சந்தர்ப்பமாயிருக்குமே!

அம்மாஞ்சி: மடப் பயலே, உளறுதே! ரேடியோ ஒலிபரப்பு, சாத்தியமில்லாத காரியம். க்ஷேத்ரஞ்யர் ரிஹர்ஸலுக்கு ஒப்புக்கொள்ளமாட்டார். அது இல்லாமல் ரேடியோ அதிகாரிகள் சம்மதிக்க மாட்டார்கள்.

நான்: ஐயோ! பரமசிவம்! நான் மறந்துவிட்டேன். அந்தச் சங்கடம் ஒன்று இருக்கிறதே. சீமைக்குப் போகுமுன் அம்மை குத்திக்கொள்ளவேண்டும் என்பதுபோல் இந்த ரிஹர்சல் பிராரப்தம் ஒன்று வந்திருக்கிறதே!

அம்மாஞ்சி: நம்ம ராமய்யா சொன்னானே, மியூசிக் அகாடமியென்று. அதினுடைய ஆதீனத்தில் நடக்கப்போகிற கச்சேரிகளைப்பற்றிப் பத்திரிகைகளில் பார்த்திருப்பீரே! வித்வான்கள், விதூஷிகள் இவர்களுடைய பெயர்களையெல்லாம் கவனித்தீர்களோ?

ஸ்வா: உம். கவனித்தேன். ஏறக்குறைய சரியாகத்தானிருக்கிறது. ஆனால், நம்ம கோவிந்தசாமி பிள்ளைவாள் சிஷ்யன் பாபா வெங்கடராமய்யா பெயரைக் காணோமே, என்ன காரணம் தெரியுமோ?

அம்மாஞ்சி: நானும் கவனித்தேன். முதலில் எனக்கும் ஆச்சரியமாகத்தானிருந்தது. பிறகு விசாரித்ததில், அகாடமியாரைக் குற்றம் கண்டுபிடிக்க முடியாமலிருக்கிறது. குற்றம் சாட்டினால் காங்கிரஸ் மந்திரிசபை மீதில்தான் விழும்.

ஸ்வா: குலாம் காதருக்கும் கோகுலாஷ்டமிக்கும் போலே யிருக்கே! காங்கிரஸ் மந்திரி சபையாருக்கும் அகாடமிக்கும் சம்பந்தம் என்ன?

அம்மாஞ்சி: அதுவா, சொல்லுகிறேன், கேளுங்கள். துணிப் பஞ்சத்திலே ஒவ்வொரு புள்ளிக்கும் ஐந்து கஜம்தான் என்று சொல்லிவிட்டார்களே ராஜாங்கத்தார், அது தெரியுமோன்னோ? அகாடமியார் வித்வான்கள், விதூஷிகள் எத்தனை பெயர்கள் என்று கணக்குப் போட்டு, அவர்களுக்குச் சம்பாவனைக்கு வேண்டிய கணக்கில் ஸ்பெஷல் பர்மிட் ஒன்று வாங்கினார்களாம். பஞ்சகச்சம் கட்டுகிற வித்வான்களுக்குப் புள்ளிஒன்றுக்கு ஐந்து கஜம் வீதம் கிடைத்ததாம். அதாவது, கிழித்தால் ஒரு எட்டுமுழம் வேஷ்டியும், ஒரு இரண்டு முழம் துண்டும் கிடைக்குமோ, அல்லவோ? அந்தமாதிரி கணக்குப் போட்டதில், விதூஷிகளுக்குப் புள்ளி ஒன்றுக்கு 5 கஜம் போதும் என்று கணக்குப்போட்டுவிட்டார்களாம். ஆனால் கடைசியாகப் பெயர் எழுதும்போது, ஒரு விதூஷிக்கு ஐந்து கஜம் போதாது, பத்து கஜம் வேண்டும் என்று கணக்கு ஏற்பட்டதாம். ஆகவே, இரண்டரை கஜம் துண்டு ஒன்றுதான் தனியாக நின்றதாம். பாபா வெங்கடராமய்யர் பெயர் "தெலுங்கு பிராமணர்" என்கிற அடக்கத்தில் ஏகாங்கியாக நின்றதும் அதை யெடுத்துவிட்டு, மாஸ்டர் கிருஷ்ணன் என்கிற சிறிய அரை டிக்கட் பையனுடைய பெயரை "சமஸ்தானம்" என்கிற அடக்கத்தில் 'திருவாங்கூர்' என்கிற ஒடுக்கத்தில் போட்டு, 2½ கஜம் என்று அந்தப் புள்ளிக்கு ஏற்றிவிட்டார்களாம்! என்ன செய்வது? எல்லாம் காலவித்தியாசத்தில் சமயோசிதமாகத்தானே நடத்திவைக்க வேண்டும். இந்தப் பாபா வெங்கடராமய்யரும் கொஞ்சம் பிடிவாதம் பிடித்தாராம். பஞ்ச கச்சத்தை விட்டுவிட்டு, "அடைய வளஞ்சான்" கட்டிக்கொள்ளுங்கள், 2½ கஜம் போதும், என்றால் முடியாது என்றுவிட்டாராம். காந்திஜியைப்போலே இருங்காணும் என்றால், முடியாது, ராஜாஜியைப்போலேதான் இருப்பேன் என்றாராம்! இதுதான் விஷயம்.

நான்: (ரகசியமாக) சபாஷ்! சபாஷ்! என்ன ஸ்வயங்கவனமடாப்பா! என்ன மனோபாவம்!—மதுரை மணி ஸ்வரக் கோவை மாதிரியாகவன்றோ இருக்கிறது, உன்னுடைய சம்பவக் கவனம்!

அம்மாஞ்சி: (ரகசியமாக) வெறுமே யிருடா! அசந்தர்ப்பம்! நான் சொன்னதெல்லாம் சொரை புருடையென்று ஸ்வாமிகளுக்குத் தெரிந்தால், கோபித்துக் கொள்ளுவார். ஏதோ ஊதிவிட்டேன்! நம்பினா நம்பட்டுமே!

நான் : ஸ்வாமி! நாகய்யாவுடைய தியாகய்யாவைப் பார்த்தீர்களோ? அகாடமி விஷயம் போகட்டும்! அதைவிட கொஞ்சம் சுவாரஸ்யமான விஷயத்தைப் பற்றிப் பேசுவோம்!

ஸ்வா : படத்தைப் பார்க்கவில்லை. ஒரு சினிமா கொட்டகைக்கு வெளியே உட்கார்ந்திருந்தேன். அப்பொழுது படத்தில் அடங்கிய பாட்டுகளைக் கேட்டேன்.

அம்மாஞ்சி : எல்லாம் வாலாஜாபேட்டை பத்ததியாயிருந்தது! அப்படித்தானே.

நான் : "நகுமோமோ" மாத்திரம் முசிரி பத்ததி என்று சொல்லலாம்!

அம்மாஞ்சி : சும்மாயிருடா, துஷ்டப் பயலே! ஏன், ஸ்வாமி, உங்களுடைய கீர்த்தனைகளெல்லாம் அந்தப்படத்தில் அடங்கிய மாதிரி கோடு கிழித்ததுபோல் தான் பாடவேண்டுமோ? உதாரணமாக, "எந்தரோ மஹானுபாவு" பாடியிருக்கிறாரே, நாகய்யா. ஐம், என்று, சிராத்தம் பண்ணின பிறகு, பிராமணாள் சாப்பிடுகிறபோது, நாம் திருப்தியாக "அபிச்ரவண" மந்திரம் சொல்லுவோமே, அந்த மாதிரி—என்ன ?

ஸ்வா : ரொம்ப பேர் அப்படித்தான் அபிப்பிராயப்பட்டுக்கொண்டிருப்பதாகக் கேள்வி. தியாகராஜு பாடினதெல்லாம், கமகம் ரொம்ப குறைவாகவும், சங்கதிகள் இல்லாமலும், சாஹித்தியமே பிரதானமாக, பாடினான். பின்னாலே வந்தவாள் எல்லாரும் இஷ்டானுசாரமாகச் சங்கதிகளும் பிருகாக்களும், கமகங்களும் சேர்த்துக்கொண்டார்கள் என்பது அபிப்பிராயமாம். என்னைக் கேட்டால் அதெல்லாம் பிசகு என்றுதான் சொல்லுவேன். எனக்கு இருந்த சிஷ்யர்களில், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருமாதிரி பாடம் பண்ணிவைத்தேன். உமயாபுரத்தாருக்கு நல்ல சாரீரம். அவர்களுக்கு அமோகமாகப் பேசும். அவர்களுடைய சாரீரத்துக்குத் தகுந்தமாதிரி சொன்னேன். வாலாஜாபேட்டை வெங்கடராமனுக்குச் சாரீரப் பேச்சு குறைவு. அதற்குத் தகுந்தமாதிரி சொன்னேன். யார்யாருக்கு எப்படிச் சௌகரியமோ அப்படிப் பாடிக் கொள்ளட்டும். மொத்தத்தில் நான் சொல்வது என்னவென்றால், சங்கீதம் ஒரு பெரிய சமுத்திரம். நவரசமும், தசகமகமும் அடங்கிய சங்கீதம்தான் இனிமையான சங்கீதம்.

நின்றுபோன மாதவிடாய்

குமாரி (TABLETS) மாத்திரையின் உபயோகத்தினால் நின்று போனது நீங்கும். வருங்காலத்திலும் கஷ்டங்கள் நேரிடா. கெடுதலின்றி விரைவில் நலம் கிட்டும். இந்தியாவிலும், வெளி நாடுகளிலும் ஆயிரக்கணக்கானவர்கள் உபயோகிக்கின்றார்கள்.

சாதாரண கேஸ்களுக்கு	...	ரூ 3
நீண்டநாளைய கேஸ்களுக்கு	...	ரூ 5
மிக ஆபத்தான கேஸ்களுக்கு	...	ரூ 8
கர்ப்பத்தடை (6 மாத உபயோகத்திற்கு)	...	ரூ 4

(வி. பி. அணா 12 கூட)

———: தயாரிப்பவர்கள் :———

Mrs. P. DEVEE, F. D. S. (C. M.)

Tollygunge, CALCUTTA.

கீழ்க்கண்டவர்களிடமும் கிடைக்கும்:—

(1) HARRY & SONS, 93, China Bazaar Road, Madras.
(2) RAGHAVAN & Co., Sri Narasimharaja Road, Bangalore City.
(3) Miss D. D. PANDE, Harinivas, Kingsway, Dadar, Bombay.
(4) J. TIRATH & Co., Mahatma Gandhi Road, Karachi.
(5) NATHAM & Co., Mattancheri, Cochin.
(6) L. M. MOOKERJEE & Sons Ltd., 167, Dharmatola Street, Calcutta.

சாஹித்யப் பிரதானத்தில் சங்கீதத்தைக் கொழுவி கொழுவியாக உருட்டப்படாது. சங்கீதப் பிரதானத்தில் சப்த அர்த்தத்தைச் சின்னாபின்னப் படுத்தலாகாது. இந்த இரண்டுக்கும் மத்தியில் எவ்வளவு அழகுகள் ஏற்படுத்தக் கூடுமோ, அவ்வளவு அழகுகளுக்கும் என்னுடைய உருப்படிகளில் இடம் வைத்திருக்கிறேன்.

நான் : ஸ்வாமி, ராஜமந்திரியில் தங்களுடைய நூறாவது ஆண்டுக் கொண்டாட்டம் செய்கிறார்களாமே! தாங்கள் போய்ப் பார்த்துவிட்டு, கோதாவரி ஸ்நானமும் செய்துவிட்டுவரலாமே.

அம்மாஞ்சி ; கோடி நதிலு தனுஷ் கோடிலோ உண்டங்கா, ஏடிகி திரிகவே? ஞாபகமில்லையா, ராமய்யா?

ஸ்வா: அது கிடக்கட்டும்: எனக்கு அங்கேபோகப் பயமாயிருக்கிறதே. நான் நன்றாக இருந்தகாலத்திலேயே சரபோஜி மகாராஜாவைப் பார்க்கவே பயந்து நடு நடுங்கி வேண்டாம் வேண்டாம் என்று சொல்லிக்கொண்டிருந்தேன். இந்த வயசிலே, இரண்டு ராஜாக்கள் சேர்ந்து நடத்தப்போகிறார்களாம். அதாவது விஜயநகரம் ராஜாவும், ஜெய்பூர் ராஜாவும். இந்த இரண்டு ராஜாக்கள் நடுவிலே நான் போய் என்ன பாடுபடுவேனோ, பயமாய் இருக்கிறதேடா, அப்பனே. எனக்கு ஏதுக்கு இந்த விஷப்பரீக்ஷையெல்லாம். பட்டணத்துக்குப் போய், அந்தத் தனம்மாள் வீட்டில், விச்ராந்தியாக க்ஷேத்ரஞ்யரோடு பத்துநாள் இருந்துவிட்டு, அதற்கப்புறம் யோசிக்கலாம்! என்ன, அம்மாஞ்சி, போய்வரட்டுமா?

அம்மாஞ்சி : சௌகரியப்பட்டால், அந்த அகாடமி கூட்டத்துக்கு ஒரே ஒருநாள் வாருங்களேன். திருவையாறு அண்ணாசாமி பாகவதர் தங்களுடைய ஜீவசரித்திரத்தைக் குறித்துக் கதை பண்ணப்போகிறாராம். ஒருவேளை ரசிக்கலாம், தங்களுக்கு. க்ஷேத்ரஞ்யரையும் கூட்டிக்கொண்டு வந்தால்—

ஸ்வாமி : அண்ணாசாமியா? எங்க ஊர் பையன் அவன். நல்ல புத்திசாலி. சில வருஷங்களாக என்னைப் பற்றிய கதைகளை எல்லாம் விசாரித்து எழுதிக்கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். சங்கீதம் நன்றாயிருக்கும். பக்தி, சிரத்தை, வாக்குஸ்பஷ்டம், எல்லாம் உண்டு. நீ போய்க் கேட்டுவிட்டு வா. பிறகு வந்து சொல்லு.

ஸ்வாமிகள் மெல்லச் சென்றுவிட்டார். நானும் விழித்துக்கொண்டேன். கனவு என்று தெரிந்ததும், பல்லைத்தேய்த்து முகத்தைக் கழுவிக்கொண்டு, காபி சாப்பிட்டுவிட்டு, அம்மாஞ்சியிடம் சென்று, நடந்த விருத்தாந்தம் எல்லாவற்றையும் தெரிவித்தேன். சிரி, சிரி என்று சிரித்துவிட்டு கனவிலும்கூட உன் உளறுவாயிலிருந்து சில சமத்காரமான வாக்குகள் வராதா? என்றான், நான் உளறுவாயனோ, கிளறுவாயனோ, உங்களுக்கே தெரியட்டும். என்னுடைய குசலப் பிரச்னைகளால் அல்லவோ வெகு விஷயங்களும் தத்துவங்களும் வெளிவருகின்றன. அதை ஒப்புக்கொள்ளவேண்டாமா?

* * *

இந்த அகில இந்திய ரேடியோ அதிகாரிகள் எவ்வளவோ பணம் செலவழிக்கிறார்கள். நல்ல ஸ்ட்ராடிவேரியஸ் (Stradivarius) பிடில் ஒன்றை வாங்கிவைத்து, பிடில் வித்வான்களெல்லாரும் அதைக்கொண்டே வாசிக்கவேண்டும் என்று சொல்லலாகாதா? நம்முடைய வித்வான்களில் பலர் 3½ ரூபாய் பிடில் ஒன்றை வைத்துக்கொண்டு டர்ரும், பர்ரும், என்று வாசித்து நல்ல உழைப்பையும், சம்பிரதாயதையும் சரிவர வெளிப்படுத்த அவகாசமில்லாமல் இருக்கிறார்களே என்று வருத்தப்படுகிறான் அம்மாஞ்சி. நம்முடைய சங்கீதத்துக்கே இத்தகைய கஞ்சத்தனத்தால் அகௌரவம் ஏற்படுகிறது. பத்துப் பதினைந்துபேர்கள் கேட்கும்படி வாசிக்க இலவசமான பிடில் போதுமாயிருக்கலாம். தற்காலத்துக் கச்சேரிகளில் ஆயிரம் ஜனங்கள் சேரும் கூட்டங்களில் மகத்தான வாத்தியமல்லவோ சோபிக்கும். இந்த விஷயத்தில் சிரத்தையெடுத்துக் கொள்ளாவிட்டால் பிடிலுக்குள்ள ஸ்தானமே சீக்கிரத்தில் போய்விடும். வித்வான் வேங்கடசாமி நாயுடுவின் வாசிப்பில் உள்ள மகிமையில் பாதிக்குப்பாதி அவருடைய வாத்தியத்திலுள்ள நாதமே. அது ஒரு (Stradivarius Copy) என்றும், ஆந்திர தேசத்தில் பொதுஜனங்கள் அவருக்குக் கொடுத்த பரிசு என்றும், தமிழ் நாட்டுப் பொதுஜனங்கள் கவனம்வைத்துக் கொள்ளட்டும் என்கிறான் அம்மாஞ்சி.



சிறுமிகளுக்கு—உஸ்! உன்மிகவும் அழகான பொம்மை தூங்குகிறது. அதைப் பார்த்தால் நிஜக் குழந்தையைப் போலல்லவா இருக்கிறது. ஓ! உன் கைகளைப்பார். அவைகளை லைப்பாய் சோப்பால் சுத்தப்படுத்த வேண்டும். இதுவும் உன் விளையாட்டில் ஒரு பாகந்தான். ஏனென்றால், நிஜமான, பிரிய, சிறிய குழந்தையை ஜாக்கிரதையாக காப்பாற்ற எல்லா வஸ்துக்களையும் கொஞ்சமும் அழுக்கில்லாமல் சுத்தமாக வைத்துக் கொள்வதுதான் முக்கியமென்று பெரியவர்களுக்குத் தெரியும். லைப்பாய் சுத்தம்செய்து கிருமிகளையும், தூசிகளையும் போக்க, ஒருபொழுதும் மறக்காதே. அவ்வாறு நீ செய்தால் உன் தாயாருக்கு மிகவும் ஆறுதல் அளிக்கும். ஆகையால் விளையாட்டை லைப்பாயால் சுத்தம் செய்வதோடு முடி. சாப்பாட்டிற்கு முன்னும் கூட சுத்தம் செய்ய மறக்காதே. "நான் ஏன் லைப்பாய் சோப்பை உபயோகிக்கிறேன்?"

என்ற கேள்விக்கு உங்களுக்கு தோன்றும் பதிலை Dept. B139 P.O. Box 738, Bombay, என்ற விலாசத்திற்கு எழுதுங்கள். உன்னத விடைக்கு மாதமொரு முறை ஒரு பரிசு அளிக்கப்படும்.

பெற்றோர்களே! உங்கள் குழந்தைகள் விட்டிலோ, பள்ளிக்கூடங்களிலோ, தெருக்களிலோ, எங்கு விளையாடினாலும், விஷக்கிருமிகள் கொண்ட அழுக்கின் அபாயத்திற்குள்ளாவார்கள் என்று உங்களுக்குத் தெரியும். குறைந்தது 27 வித நோய்களுக்கு அழுக்கும் தூசியும்தான் காரணம் என்று டாக்டர்கள் சொல்லுகிறார்கள். அழுக்கிலுள்ள கிருமிகளை ஒழிக்க மிகவும் சுலபமானதும், சுகமுமான வழி என்னவென்றால் லைப்பாயினால் நன்றாயும், ஒழுங்காயும் சுத்தம் செய்வதுதான்.



லைப்பாய் ஒரு நல்ல சோப்பைக் காட்டிலும் சிறந்தது. அது ஒரு நல்ல பழக்கம்

L. 85-23-40 TM — LEVER BROTHERS (INDIA) LIMITED

தந்தம்

ஆர். கே. விசுவநாதன்

"யானை இருந்தாலும் ஆயிரம் பொன்
இறந்தாலும் ஆயிரம் பொன்"

என்று தந்தத்தின் மேன்மையைக் கூறும் பழமொழி தமிழ்நாட்டில் வெகுகாலமாக வழங்கிவருகிறது. யானையின் பல்லைத் தான் தந்தம் என்று கூறுகிறோம். நம் நாட்டில் உள்ள ஆண் யானைக்குத்தான் தந்தம் உண்டு. ஆனால் ஆப்பிரிக்காவில் உள்ள ஆண் யானை பெண் யானை இரண்டுக்கும் தந்தம் உண்டு. நன்றாக வளர்ந்த யானையின் தந்தம் சுமார் ஒன்பது அடி நீளம் இருக்கும். அதன் எடை சுமார் நூறுமுதல் நூற்றைம்பது பவுண்டு வரை இருக்கும். தற்காலம் நீர்யானை, காட்டுப் பன்றி முதலிய மற்ற மிருகங்களின் பற்களையும் தந்தம் என்று கூறிவருகிறார்கள். அமைப்பில் தந்தம் எலும்புக்கும் கொம்புக்கும் இடையே இருக்கும். இதை உடைத்து எலும்பைப்போலப் பொடியாக்க முடியாது. இது கொம்பைவிடச் சற்றுக் கடினமாக இருக்கும். இரண்டையும் விட தந்தத்துக்குதான் பளபளப்பு உண்டு. தந்தத்துக்குக் கடினத்துவமும் நெகிழ்ச்சி வன்மையும் ஒருங்கே அமைந்திருப்பதினால் இதில் எவ்வித உருவங்களையும் வெகு சுலபமாகச் செய்துவிடலாம். விக்கிரகங்கள், பொம்மைகள் செய்வதற்கு நம் நாட்டில் நெடுநாட்களாகத் தந்தம் பயன்பட்டு வருகிறது. தந்தத்தில் செய்த ஆலையிலை கிருஷ்ண விக்ரகத்தைக் கெடியாரச் சங்கிலியுடன் பலர் போட்டுக்கொண்டிருப்பதைப் பார்க்கலாம். சீனர்கள், ஜப்பானியர்கள் இவர்கள்தான் தந்த வேலையில் பெயர் போனவர்கள். ஆப்பிரிக்காவிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் தந்தங்கள் ஏராளமாகச் சமீபகாலம்வரை இங்கிலாந்துக்கு ஏற்றுமதி ஆகிவந்தன. அவர்கள் அதில் (Billiard) பிலியர்டு பந்துகள், கத்திப் பிடிகள், ஹார்மோனியம் பியானோ வாத்தியங்களின் கீடுகள், சோப்புப்பெட்டி, பவுடர் பெட்டி, கைவளையல்கள். மோதிரங்கள் முதலிய எண்ணற்ற சாமான்களைச் செய்து விற்றுவந்தார்கள். இவற்றுடன் நீர்யானையின் தந்தங்களால் செய்த குடைகளின் பிடிகள், பொய்ப் பல்லுகள் முதலியவற்றையும் விற்றுவந்தார்கள். இவற்றுக்கெல்லாம் வேண்டிய அளவுக்குத் தந்தம் கிடைக்கவில்லை. தந்தத்தைப்போல் வேறொரு பொருளைத் தயாரிக்க முடியுமா என விஞ்ஞானிகள் சோதனைகள் செய்யலானார்கள். முக்கியமாக Billiard பந்துகள் தயார் செய்யும் தொழிற்சாலைகளுக்குத்தான் தந்தத்தின் மாற்றுப் பொருள் வேண்டியிருந்தது.

1855-ஆம் ஆண்டில் அலெக்ஸாண்டர் பார்க்ஸ் (Alexander Parks) என்பவர் ஸெலுலாயிடு (Celluloid) என்னும் ஒரு செயற்கைப்பொருளைத் தயாரித்தார். இது தந்தத்தின் குணங்களை ஒருவாறு பெற்றிருந்தது. இதில் செய்த விளையாட்டுப் பொம்மைகளை அனைவரும் பார்த்திருக்கலாம். இதில்தான் சினிமா படங்கள் பிடிக்கப்படுகின்றன. கோடிக்கணக்கான பவுண்டு ஸெலுலாயிடு இவ்வேலைக்கு வருடந்தோறும் பயன்பட்டு வருகிறது. ஆனால் இது சீக்கிரம் நெருப்புப்பிடித்து எரிந்துவிடும் தன்மை உடையதாதலால் மற்றக் காரியங்களுக்கு அவ்வளவு பிரபலமாகவில்லை. 1909-ஆம் ஆண்டில் டாக்டர் பேக்லாண்டு (Bakeland) என்பவர் பேக்லைட் (Bakelite) என்ற ஒரு செயற்கைப் பொருளைத் தயாரித்தார். இது ஸெலுலாயிடை விடச் சிறந்ததாக இருந்தது தெரியவந்தது. இப்பொருளை ஏராளமாக உற்பத்தி செய்து பல்வேறு சாமான்களை இதில் செய்து வருகின்றார்கள். Billiard பந்துகள் இதில் செய்யப்படுகின்றன. இதில் செய்த தட்டுகள், கிண்ணங்கள், கோப்பைகள் முதலிய சாமான்களைப் பலர்வாங்கி இருப்பார்கள். தந்தம் உபயோகப்பட்ட இடங்களில் எல்லாம் அதற்குப் பதிலாக, பேக்லைட்தான் உபயோகப்பட்டு வருகின்றது. இதனால் ஸெலுலாயிடு, பேக்லைட் போன்ற எண்ணற்றசெயற்கைப் பொருள்களைத் தயாரிக்கும் வழிகளையும் கண்டு பிடித்தார்கள். இப்பொருள்களுக்கு எல்லாம் பொதுப்பெயர் பிளாஸ்டிக்ஸ்

(Plastics) என்று கூறுவார்கள். ரப்பர், மரம், உலோகங்கள் எல்லாவற்றுக்கும் பதிலாக உபயோகப்படக்கூடிய பலபல செயற்கைப் பொருள்களைத் தயார்செய்து வருகின்றார்கள். சுமார் ஆயிரம் தினுசு செயற்கைப் பொருள்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் இவற்றை எல்லாம் அடிப்படையாக மூன்றுவகுப்புக்களில் அடக்கிவிடலாம். தற்காலம், நாற்காலி, மேஜை முதலியவற்றை மரத்தில் செய்யாமல் இச்செயற்கைப் பொருள்களிலேயே செய்துவருகின்றார்கள். ரேடியோ ஸெட்டு வைக்கப்படும் பெட்டிகளெல்லாம் இதில்தான் செய்யப்படுகின்றன. இவற்றை மரத்தில் செய்வதைவிட இப்பொருள்களால் செய்வது வெகு சுலபமாக இருப்பதாகச் சொல்லுகிறார்கள். மரத்தை உபயோகப்படுத்துவதற்குமுன் அதைப் பதப்படுத்த வேண்டும். இதற்கு இந்தத் தொல்லை இல்லை. மற்றும் மரத்தில் சாமான்களைச் செய்யும்போது சந்துபொந்து இல்லாமல் செய்வது கடினம். இப்பொருளுக்கு அவ்வித இடைஞ்சல் இல்லை. மரச்சாமான்களைவிட இதில் தாயாரித்த சாமான்கள் பகட்டாக இருக்கின்றன. உலோகங்களைப் பெரிதாக நம்பிவந்த காலம் மலையேறிப்போய்விட்டது. ஆகாய விமானத் தொழிற்சாலைகளில் லேசாகவும் உரமாகவும் இருக்கவேண்டிய பாகங்களுக்கெல்லாம் அலுமினியத்தையோ அல்லது கலப்பு உலோகத்தையோ உபயோகப்படுத்துவதற்குப் பதிலாகத் தற்காலம் இச்செயற்கைப்பொருள்களை உபயோகித்து வருகின்றார்கள். ஒளி கண்ணாடியின்மூலம் ஊடுருவிச் செல்லுவதுபோல இச்செயற்கைப் பொருளின் மூலம் ஊடுருவிச் செல்லுகிறது. எனவே கண்ணாடியில் செய்யும் சாமான்களை இச்செயற்கைப் பொருளில் செய்கின்றார்கள். கண்ணாடியைப்போலப் பல வர்ணங்களில் இப்பொருளையும் தயாரிக்கலாம். ரப்பர், கட்டபெர்சா (Gutta percha) என்னும் மரப்பிசினில் செய்து வந்த சாமான்களையும் இச்செயற்கைப் பொருள்களைக் கொண்டே செய்துவருகிறார்கள். டாக்டர்கள் கை விரல்களில் அணிந்துகொள்ளும் மூடி (gloves), ஆபரேஷன் மேஜைமீது போடப்படும் பெட்ஷீட் முதலியவை ரப்பரில்தான் இதுவரை செய்யப்பட்டு வந்தன. தற்காலம் அவை செயற்கைப் பொருளிலிருந்துதான் செய்யப்படுகின்றன. வீடுகள் கட்டுவதற்கும் இச்செயற்கைப் பொருள்களை உபயோகிக்கலாம் என்று கூறுகிறார்கள் கட்டிடங்களுக்கு வேண்டிய இரும்புச் சாமான்கள், மரச்சாமான்கள் இவற்றுக்குப் பதிதாக இச்செயற்கைப் பொருள்களில் செய்த சாமான்களைப் பயன்படுத்தலாம் என்கிறார்கள். இவற்றை உபயோகித்து அறைகளை வெகு நேர்த்தியாக அமைக்கலாம் என்று சொல்லுகிறார்கள். எனவே இச்செயற்கைப் பொருள்களை விஞ்ஞானிகளின் காமதேனு என்று கூறுவது மிகப் பொருத்தம். இவை தயாரிக்கும் விதத்தைப்பற்றி இப்பொழுது பார்ப்போம்.

பிரபஞ்சத்திலுள்ள பொருள்களின் வகைகளைக் கணக்கிட முடியாவிட்டாலும் அவற்றை எல்லாம் தொண்ணூற்றிரண்டு தனிப்பொருள்களிலிருந்து (Elements) பெற்றுவிடலாம் என்று விஞ்ஞானிகள் கண்டார்கள். இரும்பு, வெள்ளி, இரசம், பிராணவாயு இவற்றை எல்லாம் தனிப்பொருள்களுக்கு உதாரணங்களாகக் கூறலாம். ஒவ்வொரு தனிப்பொருளிலும் கோடிக்கணக்கான அணுக்கள் இருப்பது தெரியவந்தது. ஒரு தனிப்பொருளின் அணுக்களும் மற்றொரு தனிப்பொருளின் அணுக்களும் சேர்ந்தால் இரண்டு வகைக்கும் வேறான புது வகை அணுக்கள் கொண்ட பொருள் ஒன்று கிடைக்கிறது. இப்பொருள் சேர்க்கைப்பொருள் (Compound) என்று சொல்லுவார்கள். நாம் அன்றாட வாழ்க்கையில் உபயோகிக்கும் தண்ணீர் ஒரு சேர்க்கைப் பொருள்தான். இதன் அணுவில் ஜலவாயு (Hydrogen) அணுவும், பிராணவாயு (Oxygen) அணுவும் பிணைக்கப்பட்டு இருக்கும். தண்ணீரை மின்சார சக்தியினால் பிரித்தால் ஜலவாயுவும், பிராண வாயுவும்தான் கிடைக்கின்றன. எனவே இவற்றின் சேர்க்கையினால்தான் தண்ணீர் உண்டாயிற்று என்று சுலபமாக அறியலாம். வேறொரு விதத்திலும் சோதனையைச் செய்யலாம். ஜலவாயு, பிராணவாயு இரண்டையும் சேர்த்து அதன் மூலம் மின்பொறியைப் பாய்ச்சினால் தண்ணீர் உண்டாகிவிடுகிறது. விஞ்ஞானிகள் இவ்வாறு

சோதனைகள்செய்து எல்லாப் பொருள்களையும் பிரித்துப் பார்த்து ஒவ்வொன்றிலும் உள்ள தனிப்பொருள்களை அறிந்தார்கள். இயற்கையில் இல்லாத புதுப் பொருள்களைத் தக்க பொருள்களைச் சேர்த்து உண்டாக்க முடிவதையும் தெரிந்துகொண்டார்கள்.

தந்தத்திற்கு மாற்றுப்பொருள் கண்டு பிடிக்கச் செய்த சோதனைகளில் பேக்லாண்டு என்னும் விஞ்ஞானி உபயோகித்த மூலப்பொருள்கள் இரண்டு. அவற்றினுள் ஒன்று கார்ப்பாலிக் ஆஸிட் (Carbolic acid). ஆஸ்பத்திரிகளுக்குச் சென்றவர்கள் இதன் நாற்றத்தை நன்கு உணர்ந்திருப்பார்கள். இதற்குப் பீனல் (Phenol) என்று மற்றொரு பெயரும் உண்டு. இப்பொருளை நிலக்கரியிலிருந்து பெற்றனர்கள். தற்காலம் இதையும் செயற்கைப் பொருளாகப் பெறுகிறார்கள். அவர் எடுத்துக்கொண்ட மற்றொரு பொருள் பார்மால்டிஹைடு (Formaldehyde). இது மரத்திலிருந்து பெறப்படும். ஆனால் இதையும் தற்காலம் செயற்கையாகப் பெறுகிறார்கள். இவ்விரண்டு பொருள்களையும் சேர்த்துக் காய்ச்சினால் அவற்றின் அணுக்களிடையே பலவித இரசாயனச் சேர்க்கைகள் உண்டாகின்றன. இதனால் புதுப் புதுக் கலப்புப் பொருள்கள் உண்டாகின்றன. சேர்க்கையின் கொதிநிலை, இறுக்கம் (Pressure) இவற்றைக் கட்டுப்படுத்திப் பேக்லைட் என்னும் பொருளைப் பெறுவதற்கு வழியைக் காண்பித்தார் பேக்லாண்டு. Billiard பந்துகள் செய்வதற்காகத் தயாரிக்கப்பட்ட இப்பொருள் விஞ்ஞான உலகத்திலேயே ஒரு புரட்சியை உண்டுபண்ணி விட்டது. இது தயாரித்த நிமித்தம் இதுபோன்ற எண்ணற்ற செயற்கைப் பொருள்களைப் பெறுவதற்கு உண்டான வழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இதற்காகத் தொழிற்சாலைகள் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் அநேகம் இருக்கின்றன. இத்தொழிற்சாலைகள் முதன் முதலில் அமெரிக்காவில்தான் ஏற்பட்டன. சமீபத்தில் முடிந்த இரண்டாவது உலகப்போர் நடக்கும்போது இங்கிலாந்துக்கு அயல் நாடுகளிலிருந்து பண்டங்கள் வரமுடியவில்லை. முக்கியமாக ஆகாய விமானத் தொழிற்சாலைகளுக்குவேண்டிய சாமான்கள் ஒன்றையும் வெளியிலிருந்து தருவிக்க முடியாமல் திகைக்கும்போது தான் இத்தொழிற்சாலைகள் இங்கிலாந்தில் பிரபலமாயின.

இத்தொழிற்சாலைகளில் தயாரிக்கும் செயற்கைப் பொருள்களை மூன்றுவகுப்புக்களாகப் பிரித்துக்கொள்ளலாம். நாம் முதலில் பார்த்த Phenol Formaldehyde சேர்க்கை வகை ஒன்று. இரசாயனச் சேர்க்கை நடந்து வரும்போது களிமண், மரத்தூள், மைகா முதலியவற்றைச் சேர்த்துக்கொண்டு கலவையை இறுக வைத்துத் தகடுகளாகச்செய்கிறார்கள். இவ்வகையை வெப்ப—இறுக்கிய (Thermo setting group) வகை என்று கூறுகிறார்கள். ஏனெனில் முடிவாகப் பெறும் பொருள் கடினமாகிவிடுகிறது. இதன் பண்டங்களைச் செய்யும்போது யந்திரங்களைக்கொண்டு செதுக்கியோ அல்லது வெட்டி எடுத்தோதான் சாமான்கள் செய்யமுடியும். இதனால் சிறிதளவு பொருளுக்குச் சேதம் ஏற்படுகிறது. சேர்க்கும் பொருளுக்குத் தகுந்தவாறு (Phenol Furtural, Phenol Asbestos, Cast phenol, Urea) என்ற பெயர்களைக் கொடுக்கின்றார்கள். இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வேலைக்குச் சிறந்ததாக இருக்கும். உதாரணமாக Urea வில் மின்சாரச்சாமான்கள் எல்லாம் செய்யப்படும். Phenol asbestos என்னும் பொருளில் பெரிய குழாய்கள் செய்கிறார்கள். இச்செயற்கைப் பொருள்களில் இரண்டாவது வகைக்கு ஸெலுலோஸ் சம்பந்தப்பட்ட செயற்கைபொருள்கள் என்று பெயர். இவ்வகையை வெப்ப—இளகிய (Thermoplastic group) வகை என்றும் கூறுவது வழக்கம். முதல்வகைப்பொருளில் சாமான்களைத் தயாரிக்கும்போது அதைச்செதுக்கி அல்லது வெட்டி எடுத்துத்தான் தக்க உருவங்களை அதில் அமைக்கமுடியும். இரண்டாவது வகை செயற்கைப் பொருள்களுக்கு இது வேண்டியதில்லை. சூடேற்றினால் அதன் உருவத்தைத் தக்கவாறு மாற்றலாம். இதனால் பண்டங்கள் செய்யும்போது பொருள் சேதமேற்படுவதில்லை. இவ்வகையில் மிகவும் முக்கியமான பொருள்கள் ஸெலுலோஸ் அஸிடேட் (Cellulose acetate) ஸெலுலோஸ் நைட்ரேட் (Cellulose nitrate) இதைல்

செலுலோஸ் (Ethyl cellulose) என்பவை. இவற்றில்தான் மூக்குக்கண்ணாடி பிரேம்கள், பொம்மைகள், பல் தேய்க்கும் புரஷ் பிடிகள், டைப் அடிக்கும் மெஷின்களின் விரல் அமைப்புக்கள், பேனாக்கத்திகள் முதலிய எண்ணற்ற சாமான்களைச் செய்து வருகிறார்கள். மூன்றாவது வகைச் செயற்கைப் பொருள்களை புரோடீன் (Protein) பொருள்கள் என்று கூறுகிறார்கள். இவற்றிலிருந்து எல்லாவித ஊசிகளும் செய்யப்படுகின்றன. குடைகளுக்குப் பிடிகளும் செய்யப்படுகின்றன. செயற்கைப் பொருள்களை நூலாகப் இழுத்துப் பட்டாடைகளும் செய்துவருகிறார்கள், இவ்வாறு எதற்கும் பயன்படும் இச்செயற்கைப் பொருள்கள் இயற்கைப் பொருள்களை இருந்த இடம் தெரியாமல் அடித்து விடுமோ என்று பலர் பயப்படுகிறார்கள். எவ்வித இயற்கைப் பொருளுக்கும் போலியாகச் செயற்கைப் பொருள் தயாரித்து வருவதாக விஞ்ஞானிகளைக் குறைகூறி வருகிறார்கள். இதில் ஓரளவு உண்மையும் இருக்கிறது. கடைசியாக மனிதனையும் செயற்கையாக உற்பத்திசெய்யும் காலம் வந்துவிடுமோ என்று கவலைப்படுகிறார்கள்!

பொதுஜன ஆதரவுக்கு நமது முன்னேற்றமே சான்று

ஏராளமான பாலிஸிகள், இடைவிடாத மகத்தான முன்னேற்றம் அதிகரித்துக்கொண்டே வரும் புகழ், பொதுஜன ஆதரவு — இவைகளுக்குப் போதிய அத்தாட்சி அடியிற் காணப்படும் புள்ளி விபரங்கள்:-

வருஷம்	புதியபாலிஸிகள்	மொத்த ஆஸ்தி	நடை முதலிலிருக்கும் பாலிஸிகள்
1941	1 கோடி 1 லக்ஷத்திற்குமேல்	1 கோடி 95 லக்ஷத்திற்குமேல்	8 கோடி 36 லக்ஷத்திற்குமேல்
1943	2 கோடி 20 லக்ஷத்திற்குமேல்	2 கோடி 50 லக்ஷத்திற்குமேல்	10 கோடி 53 லக்ஷத்திற்குமேல்
1945	3 கோடி 75 லக்ஷத்திற்குமேல்	3 கோடி 41 லக்ஷத்திற்குமேல்	14 கோடி 87 லக்ஷத்திற்குமேல்

1945 புதிய பாலிஸிகள் பெருக்கு:— 1 கோடி 15 லக்ஷத்திற்குமேல்

போனஸ் விகிதம் :-

ஆயுள் பாலிஸிகளுக்கு வருடம் 1-க்கு ரூ 1000-க்கு ரூ 10
எண்டௌமெண்ட் பாலிஸிகளுக்கு வருடம் 1-க்கு ரூ 1000-க்கு ரூ 8

லக்ஷ்மி இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

(தலைமை ஆபீஸ்:- லாகூர்)

மதராஸ் பிராஞ்சு:- 4/105, அரண்மனைக்காரத்தெரு, ஜி. டி. சென்னை.

தொடர் கதை

சித்ரா

கே. சுந்தரம்மாள்

10

காலை பிறந்தது. கதிரவன் வெளிவந்தான். உலகத்தின் இருள் திரை விலகிற்று. சித்ராவின் மனதில் காதல் ஒளி மறைந்தது. பழிக்குப்பழி என்ற அந்தகாரம் சூழ்ந்தது. சூத்திரப்பாவை போல் மற்றவர் ஆட்டிவைக்கும் ஆட்டத்திற்கு உட்பட்டாள். உயர்ந்த பட்டுப் புடவையும் வைர ஆபரணங்களும் அவள் உடம்பைச் சுற்றிப் பிரகாசித்தன. அவள் தோற்றம். லக்ஷ்மியோ சரஸ்வதியோ வென ஐயுறத்தக்கதாக இருந்தது. உள்ளமோ அக்னிஜ்வாலையாகத் தகித்தது.

மணப்பந்தலுக்குள் காலை வைக்கும் பொழுது பலிபீடத்தில் நுழைவதுபோன்று அவள் மனம் பதறிற்று. மாலையை அவள் கையில் கொடுத்தார்கள். கையில் மாலையுடனும் கண்களில் நீர்தளும்ப நின்ற சித்ராவின் தோற்றம் சேகரின் மனதைப் பிளந்தது. சட்டெனக் கேமராவில் அவள் தோற்றத்தைப் பிடித்தான்.

அன்று நாடகத்தில் மாலைபோட்ட நினைவு தோன்ற, பிரபாகரன் எதிரில் நிற்பதாக உணர்ச்சி ஏற்படவே கண்களை மூடிய வண்ணம் உணர்வற்று நின்றாள்.

''மாலையைப் போடு'' என்ற நாராயண வாத்தியாரின் குரலைக்கேட்டுத் திடுக்கிட்டுக் கண்விழித்து மாலையை வீசியெறிந்தாற் போல் போட்டாள். அது அவர் கழுத்தில் விழாமல் காலில் விழுந்தது. யாவர் மனமும் துணுக்குற்றது. சட்டெனக் குனிந்து மாலையை எடுத்துத் தம்கழுத்தில் போட்டுக் கொண்டார் மாப்பிள்ளை. அத்துடன் மாலை மாற்றும் சடங்கு முடிவுற்று, மணையில் உட்கார்ந்தார்கள்.

பிரபாகரன் தந்தை, தம் மடிமீது சித்ராவை உட்காரவைத்துக் கொண்டார். மாங்கல்யத்தைக் கையில் பிடித்தவண்ணம் எதிரில் நின்று மந்திரம் சொல்லும் மாப்பிள்ளை அவள் கண்ணிற்குக் கரியநிற ராக்ஷசனாகத் தோன்றினார். அதுவரை மரத்துப் போன மனதில் பிரபாகரனின் உருவமும் சொல்லும் காட்சியளிக்கவே, அவள் மனம் அளவுகடந்த துக்கத்தை அடைந்தது. சஹிக்கச் சக்தியற்று, ''ஐயோ! பிரபூ!'' என்றாள் வாய்விட்டு. அவ்வளவே உணர்வற்று ராதாகிருஷ்ணய்யரின் (பிரபாகரனின் தந்தை) மார்பில் சாய்ந்துவிட்டாள். கெட்டி மேளம் காதை அடைக்க, ஸீதா லக்ஷ்மியம்மாள் தலையை நிறுத்திப்பிடிக்க, பிரேதத்தின் கழுத்தில் கட்டுவதுபோல் மாப்பிள்ளை கைநடுங்க தாலிகட்டும் சடங்கை முடித்தார். என்ன சைத்யோபசாரம் செய்தும் சித்ரா கண்விழிக்காததினால், அம்மி மிதித்தல் பொரியிடல் முதலிய சடங்குகளை இரவில் நடத்திக்கொள்ளலாமென்று, நாராயணவாத்தியார் சொல்ல அவளை உள்ளே எடுத்துச் சென்று படுக்கையில் விட்டார்கள்.

ஜாகைக்குச் சென்றதும் ''அப்பா! ஏன் தாலிகட்டினீர்! அநியாயம்! துரோகம்! நீர் ஒரு மனிதரா? சூழ்ச்சி! முருகன் பொறுக்கவில்லை'' என்று வாயில் வந்தபடி தகப்பனாரைத் திட்டினான் சேகர்.

''சேகரா! நானே நொந்தேன். நீவேறு புண்ணில் கோலிடாதே. நாராயணவாத்தியார் பேச்சைக் கேட்டேன். அவள் அழகில் மயங்கினேன். அவளையும் உன்னையும் ஏமாற்ற நினைத்தேன். காதல் துச்சமென்று நினைத்தேன். அது எவ்வளவு தெய்வீக சக்தி வாய்ந்தது என்று இப்பொழுதுதான் தெரிந்தது. அவள் கண்விழிக்கட்டும். அவள் இஷ்டம் உன்னிஷ்டம்போல் செய்கிறேன்'' என்று படுக்கையில் சாய்ந்தார்.

ஒன்றுமே சொல்லத் தோன்றாமல் அவரைப் பார்த்தவண்ணம் எதிரில் உட்கார்ந்திருந்தான் சேகர்.

சற்றுநேரம் மௌனம் நிலவியது. அவ்விடம் வந்த நாராயண வாத்தியாரைப் பார்த்து, ''கண்விழித்தாளா?'' என்று கேட்டான்.

அவர் உதட்டைப்பிதுக்கி மண்டையை அசைத்தார்.

''இனிமேலாவது இத்தொழிலை விட்டு விடுகிறீரா வாத்தியாரே'' என்றான் சேகரன்.

''நான் என்ன பண்ணுவேனப்பா. பொம்மனாட்டிகள் பண்ணும் சாகஸம் இப்படி

முடிந்தது. ஸீதாலக்ஷ்மி! தன்பிள்ளை இந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளப் படாது என்பதற்கு, இவ்வளவும் என்னை வைத்து ஆட்டினாள்?'' என்றார்.

''உம்மை யார் கேட்கச்சொன்னது?'' என்று சொல்லி முடிக்குமுன், சுப்பையர் எழுந்து உட்கார்ந்து வாந்தியெடுத்தார். ''என்னப்பா என்ன செய்கிறது?'' என்றான் பதறியவனாக.

''ஐயோ வயிற்றுவலி திருகுகிறது. தலையைச் சுற்றுகிறது. டாக்டர் யாராவது இருந்தால் கூப்பிடு'' என்றார்.

''டாக்டர் வருவதற்குள் இரண்டுதரம் பேதியாயிற்று. டாக்டர் மருந்து கொடுத்தார். எவ்வளவு முயற்சி எடுத்தும் அவர் பிழைக்கமாட்டார் என்ற நிலைமை சாயங்காலம் ஐந்துமணிக்கு ஏற்பட்டுவிட்டது. டாக்டரின் சிகிச்சையினால் உணர்வுபெற்று எழுந்தவுடன் சித்ராவின்காதில் இச்செய்தி கேட்டது. கழுத்தைத் தொட்டுப்பார்த்தாள். மாங்கல்யம் தொங்கினது, புயல் அடித்து ஓய்ந்ததுபோலிருந்தது அவள் மனம் அந்தச் சமயம். சிவகாமி அவ்விடம் வந்து தயங்கி நின்றாள்.

''என்ன சிவகாமி. மாப்பிள்ளை எப்படி இருக்கிறார்?'' என்றாள்.

''சித்ரா! நான்பாவி. என்னை மன்னித்து விடு. அந்தப் படுபாவி பிராணன் போகுமுன் உன்னைப்பார்த்து மன்னிப்புக் கேட்க வேண்டுமாம், உன்னைக் கூப்பிடுகிறான்.'' என்று அழுதவாறு கூறினாள்.

''மன்னிப்பு! ஆஹா! அதுதான் என் அப்பன் கொடுத்துவிட்டானே.'' என்று சொல்லிவிட்டு, ''பாபம் சாகப்போகிறவன் விருப்பத்தைப் பூர்த்திசெய்வது கடமை; வருகிறேன். சிவகாமி எனக்கு அயர்வாக இருக்கிறது. சூடாக ஒரு கப் காபி கொண்டுவா; சாப்பிட்டுவிட்டுப் போகலாம்'' என்றாள்.

அருகில் வந்து நின்ற சித்ராவை நோக்கி, ''சித்ரா.........என்னை மன்னித்து விடு...... காதல்......தெய்வீகம்......என்பதை இன்று ......தா......அறிந்தேன்......பெண்களை...... துச்சமாக எண்ணிவந்தேன்......பெண்கள் ......போற்றத்தகுந்த தெய்வம்......என்பது உண்மை......நீ......உத்தமி.........உன் காதலை அடைந்து சுகமாக வாழ்வாயாக...... உன் உணர்வின்றி.........கட்டின மாங்கல்யத்தை......சமுத்திரத்தில்......போட்டுவிடு. சேகரா!......உன் முயற்சியால் அவள் வாழ்வைச் சீர்படுத்து......சித்ரா! மன்னிப்பாயா ......'' என்று தங்கி வரும் மூச்சுக்கிடையில் கேட்டார்.

''பெரியவரே! ஈசன் உம்மை மன்னிப்பாராக. தாங்கள் எனக்கு ஒரு விதத்தில் நன்மையே செய்தீர்கள். ''விதவை'' என்ற காரணத்தினால் இனிமேல் ஒருவரும் என்னைக் கல்யாணவிர்ப் பந்தம் செய்யமாட்டார்கள். ஸீதாலக்ஷ்மியம்மாள் மனம் நிம்மதி பெறும். அவர் பிள்ளையினிடம், விதவை என்ற குற்றச் சாட்டினால் என்னை விடுவித்துக்கொள்ள அனுக்கிரஹம் செய்தீர். இனி நிம்மதியாகப் படித்து, தேச சேவையில், மக்கள் பணியில், தியாகப் பாதையில் ஆனந்தமாக நடப்பேன். அதனால் நீர் எனக்கு நன்மையே செய்தவராவீர். ஆனால் ஒரு விஷயம் வருந்தத்தக்கது. தாயையிழந்த சேகர் தந்தையையும் இழக்கிறார். என்ன செய்வது? விதியின் கூத்து.'' என்றாள் அமைதியாக.

சுற்றியிருந்த டாக்டர் முதலிய யாவரும் சித்ராவின் தோற்றத்தையும், சொற்களை கேட்டுக் கண்ணீரைத் துடைத்துக்கொண்டார்கள். இரகசியமாகச் செய்த சதி கசுகுசுவென ஊரெங்கும் பரவிவிட்டது. யாவரும் ஸீதாலக்ஷ்மியம்மாளை மனமாரத் திட்டினார்கள்.

சித்ராவின் உரிமையை அவளிடமே விட்டுவிட்டுத் தமது உரிமையுடன், மாலை ஆறுமணிக்கு, ''முருகா! ஷண்முகா! செந்தூர் வேலா!'' என்ற ஸ்மரணையுடன் உலக பந்தத்திலிருந்து விடுதலை பெற்றார் கல்யாண மாப்பிள்ளை.

''அப்பா! இதற்காகவா நான் வந்தேன்'' என்று சேகர் கதறின காட்சி யாவர் மனதையும் பிளந்தது.

''பிள்ளையார் பிடிக்கப்போக குரங்காக முடிந்ததே'' என்று திக்பிரமையடைந்து நின்றாள் ஸீதாலக்ஷ்மி. தனியாக வந்து அகப்பட்டுக்கொண்டேனே என்று கதறும் சேகரனைக்கண்டு அவளும் அழுதாள்.

''இதென்னகஷ்டம்! இப்படியும் ஒருவிதி உண்டா? இந்தக்கல்யாணம் தள்ளுபடி என்று தீர்த்துவிடவேண்டும்'' என்று எண்ணியவாராக நின்றார் ராதாகிருஷ்ணய்யர்.

மரத்துப்போன கட்டைபோல் நின்றாள் காமு.

சித்ரா ஒருவித சலனமுமின்றி அமைதியாக உட்கார்ந்திருந்தாள்.

மேல்நடக்கவேண்டிய காரியங்களில் முனைந்தார் நாராயணவாத்தியார். அங்குள்ள வைதிகக்கூட்டம் ஒன்றுசேர்ந்து "இக்கல்யாணம் செல்லுமா? செல்லாதா? சித்ராவை மனைவியாக வைத்துக் கிரியை நடத்துவதா? வேண்டாமா" என்ற பிரச்னையைக் கிளப்பித் தர்க்கம் செய்தார்கள். "இக்கல்யாணம் செல்லாது" என்றார் ஒரு சாரார். "மாங்கல்யதாரணம் ஆனபடியினால் இந்தக் கல்யாணம் செல்லுபடிதான்" என்று வாதித்தார்கள் மற்றொரு சாரார். இந்தப் பிரச்னையின் முடிவைத் தெரிந்து கொள்ள ஆவலாக நின்றாள் காமு. பெற்ற வயிறு அக்னிஜ்வாலையாகத் தஹித்தது. தனது செல்வத்தின் வாழ்க்கைப்பாதை அவர்கள் வாயினால் வகுக்கப்படவேண்டும். எந்தப் பாதையைக் காண்பிப்பார்களோ? என்ற ஆவல் உச்சநிலையை அடைந்தது. மனம் படபடவென அடித்துக்கொண்டது. "குகனே! சரவணனே! சுப்ரமண்யனே!" என்றெல்லாம் பிரார்த்தனை செய்தாள். தெய்வமும் விதிக்குள் அடங்கிவிடுவது என்பது காலமா? விதிதானா?

கடைசியில் கல்யாணம் செல்லும் என்று மெஜாரிட்டி பார்ட்டி தீர்ப்புக் கூறிவிட்டது. ராதாகிருஷ்ணய்யரும் சேகரும் மன்றாடினார்கள். பிரயோஜனப்படவில்லை.

இதனால் "தன் கௌரவத்திற்குப் பங்கம் வராமல் செய்ய ஒரு நல்லவழி" என்று ஸீதாலக்ஷ்மி ஒருத்தியே திருப்திப்பட்டாள். கடைசியாகத் தீர்மானம் சொன்னவுடன், காமு தலையில் ஓங்கி அறைந்தாற்போல் இருந்தது. அங்கிருப்பவையெல்லாம் ஒரே சுற்றாகச்சுற்றின. துக்கம் அளவிற்கு மிஞ்சிற்று. தன்னை மறந்தாள். தடாலென ஸீதாலக்ஷ்மியின் காலில் விழுந்தாள்.

"அடிபாவி! உன்மனம் குளிர்ந்ததா? ஒருமாதமாக என்னை வாட்டி வதைத்து, என் ஒரே குழந்தையின் வாழ்வைப் பாழ்படுத்திவிட்டாயே. அவள் உன்னை என்ன செய்தாள்? உன்பிள்ளை செய்த அக்கிரமத்திற்கு என்குழந்தையா பலியாகவேண்டும். கெஞ்சி மன்றாடினேனே! உன்மனம் இரங்கவில்லையே, உன் கௌரவத்தைக் காப்பாற்ற, என்குழந்தையைப் பலியிட்டு விட்டாயே, கண்காணாமல் எங்களை விரட்டி விட்டிருந்தாலும் நன்மையாக இருந்திருக்குமே. என்உடலை வாட்டிவதைத்து உனக்கு உழைத்ததற்குப் பலன் என்செல்வத்தை அடியுடன் கெடுப்பதுதானா? பணத்திமிர் ஏழை ரத்தத்தை உறிஞ்சுவதுதான் நீதியோ?" "பாழுந்தெய்வமே, கடமை, நன்றி, என்று இப்பாவியின் வஞ்சகத்திற்கு உட்பட்டு, என் குழந்தைக்குக்கூடத் துரோகமாக நடந்தேனே. அதன் பலன் இதுதானா? சத்யம்! கடமை! நன்றி! இவைகளுக்கு மதிப்பிருந்தால் என்கதி இவ்விதமாகுமா? அக்கிரமமே செய்து, வஞ்சகச் சூழ்ச்சிசெய்த இவளுக்கு நன்மையளித்தாய்! இப்படி விபரீதமான பலன் கிடைத்தால் மக்கள் எப்படிச் சத்யத்தையும், கடமையையும், காப்பாற்றுவார்கள்? முருகனே! குகனே! ஆறுமுகனே! நீ தெய்வமா? வெறுங்கல்லு. சித்ரா! என்கண்ணே! நான் என்னசெய்வேனடி. உன்னை எவ்விதம் வளர்ப்பேன். ஐயோ நேற்றுஇரவு கெஞ்சினாயே! எங்காகிலும் சென்றுவிடுவோம் என்று கதறினாயே! பாவி, கடமை, நன்றி, என்று உன்மனம் நோக, கடிந்து பேசினேனே. இப்படி வந்து சேர்ந்ததே. தாலிகட்டும்பொழுது உணர்வேயில்லை. மாலை கழுத்தில் விழவில்லை. அப்படியிருக்க என்குழந்தை விதவைப்பட்டத்தை ஏன் தாங்கவேண்டும்? அம்மா! பரதேவதே! நீ மனஸு வைத்தால் எல்லாம் நிறைவேறும். செத்தவனுக்கும் சித்ராவுக்கும் சம்பந்தமில்லை. கல்யாணம் நடைபெற்றதாக ஆகாது. பணமிருந்தால் அதைக்கொண்டு இம்மாதிரி செய்துவிடுவாயல்லவா. உன் மனமிரங்கி இந்தஉதவிசெய்" என்று கதறினாள்.

"அதெப்படி முடியும்? அவள்விதி அது. இப்ப செத்தவன் காலை ஆறுமணிக்குச்செத்திருந்தால் இந்த விவகாரமே இருந்திருக்காதே" என்றாள் அமைதியாக.

அவ்வளவே. காமுவின் நிலைமை சொல்லிற்கடங்காததாகிவிட்டது. "பாவி! முடியாதா? இந்த நிலையில் உன் பெண்ணாக இருந்தால் என்னசெய்வாய்? பணமும் மனிதரும் சேர்ந்து தாலியே கட்டவில்லையென்று தீர்மானம் செய்துவிடுவீர்களே! எங்களுக்கு இரண்டுமில்லை. அதனால் நியாயம் கிடையாது. பாவி என் வதை உன்னை விடாது. நீயும் உன் குழந்தைகளும் நன்றாக வாழ்வீர்களா? அந்தப் பாவிப் பழிகாரனைக் கெஞ்சி வேண்டினேனே. நல்ல வார்த்தைகள் சொன்னேனே. என் சித்ராவிடம் வராதே, உன்அம்மா ஒப்பமாட்டாள் என்று முட்டிக்கொண்டேனே. தெரியாமல் வந்து வந்து என் குழந்தைக்கு நம்பிக்கையுண்டாக்கி உறுதி மொழி கொடுத்தானே.

அயோடிசால் IODISAL

(ரத்த சுத்தி மருந்து)

இது தேகத்தில் உஷ்ணம் அதிகமாகி அதனால் ஏற்படக்கூடிய வெட்டை, கிரந்தி, மொழி, முடக்கு, கண்டசூலைகள், வாதம், வாய்வு, மேக ரோகங்களையும், தோலைப்பற்றிய துர்நீர் சம்பந்தமான படை, சொறி, சிரங்கு, தேக அரிப்பு முதலியவைகளையும் குணப்படுத்தி, தேகத்திற்கு ஆரோக்கியத்தையும் கொடுக்கும். ரத்தத்தைச் சுத்திசெய்து மலப்பிரவர்த்தியை ஒழுங்காக்கி இரத்த விருத்தியை உண்டாக்கும்

எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

* * * *

சைபால் CIBOL

முகப் பரு, சேத்துப் புண், சொறி சிரங்கு, வேனல் கட்டி, தீப்பட்டபுண், முதலியவைகளுக்குக் கைகண்ட மருந்து.

பேபி - கிரைப் BABY - GRIPE

குழந்தைகளுக்கு உண்டாகும் வாயு, வயிற்றுப் பொருமல். வயிற்றுவலி, அஜீரணம், மாந்தம், பல் முளைக்கும்போது ஏற்படும் வயிற்றுப்போக்கு முதலிய சகல வியாதிகளையும் போக்கி நல்ல ஆரோக்கியத்தைத் தரும் சிறந்த திராவகம்.

தயாரிப்பவர்கள்

தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி, மதுரை

ஏஜண்டுகள் :

ராஜன் ட்ரக் ஸ்டோர்ஸ் கெமிஸ்ட்ஸ், பி. டி. மதராஸ்.
சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ் ஏஜன்ஸிஸ், பெஜவாடா.
கிரிஜா மெடிகல் ஸ்டோர்ஸ், பெங்களூர் சிடி.

அதன் பலன் நீ பெரிய பாறையைப் புரட்டி எங்கள் மீது வீசினாய்? ஐயோ! என்னால் தாங்கமுடியவில்லையே, ஐயர்களே! நீதி இல்லையா? தர்மமில்லையா? பந்தத்திலிருந்து என் சித்ராவை விடுதலை செய்யமாட்டீர்களா?'' என்று தலையிலும் மார்பிலும் படார் படார் என அடிஅறைந்துகொண்டாள்.

''அம்மா காமு! கலங்காதே, தைரியமாக இரு. இந்த இடத்தில் இந்தச் சமயம் சற்று விட்டுப் பிடிப்போம். பிறகு நமது ஊருக்குச் சென்றுவிட்டால் விதவை என்ற பதத்திலிருந்து விடுதலை செய்துவிட முடியும். இதற்காக இவ்விடம் சித்திராவிற்கு ஒரு தொந்தரவும் இருக்காது. விதி அவர் பிள்ளையைக் கூட்டி வைத்திருக்கிறது. நான் உனக்கு உதவி செய்கிறேன். கவலைப் படாதே'' என்றார் ராதாகிருஷ்ணய்யர்.

''இதென்ன அழுகிற பிள்ளைக்கு வாழைப் பழம் கொடுக்கும் பேச்சு? நடப்பது நடந்துதான் ஆகவேண்டும். வாயை மூடிக் கொண்டு இருங்கள். அவள் துக்கம் வாயில் வந்ததை உளறுகிறாள். விதியை வெல்ல யாரால் முடியும்? இப்படி நடக்குமென்று யார் நினைத்தார்கள்? கல்லுப் பிள்ளையார் மாதிரி நேற்று இருந்தான் பிராமணன். இப் பெண்ணின் துரதிருஷ்டம் அவன் உயிரை வாங்கிற்று'' என்றாள்.

''போரும் வாயை மூடு. உன் அட்டகாசம் எதில் வந்து முடிந்தது? இன்னும் வளரவிட்டால், நான் உலகத்தின் முன் விழிக்கமுடியாது'' என்றார் சற்றுக் கடுமையாக.

''சரி, சரி, போரும் உங்கள் உபதேசம். ஊருக்குப் போய்ப் பேசலாம். வாத்தியாரே! மேல் நடக்கவேண்டியதைப்பாரும்''

''சித்ரா! வந்தவிதிக்கு வழி விட்டுதான் ஆகவேண்டும் பின்னலை அவிழ்த்துத்தலையை விரித்துவிடு'' என்றாள் சீதாலக்ஷ்மி.

''எதற்காக. முடியாது நான்மாட்டேன்'' என்றாள்.

''எதற்காகவா? தலையைக்குனிந்து காட்டினாயே அதற்காக''

''நான் தலை குனிந்து காட்டவில்லை; இனி மேல் உங்கள் ஆதிக்கம் என்னிடம் செலுத்தமுடியாது'',

''என்னடீது விதண்டாவாதம் பேசுகிறாய்? இப்ப என்ன செய்வாய் பார்க்கலாம்'' என்று அவள் அருகில் சென்று பின்னலை அவிழ்க்கப்போனாள்.

காமு ''அடி சண்டாளி! என்குழந்தைமீது கையை வைக்காதே. உன் ஒரு பிள்ளையும் நன்றாக இருக்கவேண்டுமானால் என் செல்வத்தைத் தொடாதே'' என்று வெறி கொண்டவள்போல் எழுந்து சீதாலக்ஷ்மி கையைப் பிடித்து இழுத்து உட்கார வைத்துவிட்டு, ''முருகா! முருகா! முருகா!'' என்று பக்கத்திலிருந்த கருங்கல் தூணில் டணார் டணார் என முட்டிக்கொண்டாள். அவளுடைய இந்தச் செய்கை யாவரையும் திடுக்கிடச்செய்தது. அதிர்ச்சியினால் மூளை கலங்கிவிட்டது என்றார் டாக்டர்.

அவளைச் சமாதானம் செய்ய ஒருவரும் துணியவில்லை. ''அடி சித்ரா! அவள் பிராணனும் போய்விடும்போலிருக்கு. துடைகாலிப் பெண்ணே! அவளும் போனால் உன் கதி என்ன? பார்த்துக்கொண்டு மரம்போல் நிற்கிறாயே. அவள் முட்டுவதை நிறுத்தி, சமாதானம் செய்'' என்றாள் சீதாலக்ஷ்மி.

''அம்மா! வேண்டாம்! எதற்காக இப்படிச் செய்கிறாய்' என்னைப்பற்றிய கவலையை விடு. இனிமேல் நாம் ஒருவருக்கும் அஞ்சவேண்டாம். ஒருவருக்கும் அடிமையில்லை. நமது காலம் இனி அமைதியாகச் செல்லும்'' என்று தாயாரை அணைத்துக் கொண்டாள். பொட்டின்மேல் மண்டை பிளந்து ரத்தம் கசிந்து முட்டாக்கை நனைத்திருந்தது. அதைப்பார்த்த சித்ரா ''அம்மா!'' என்று அலறிவிட்டாள். ''சித்ரா, கடமை, கடமை என்று உன்னைப் பாழாக்கிவிட்டேன், என் ஆத்மா சாந்தியடையாது. கடமையுமில்லை, மண்ணுமில்லை. நீ ஒருவருக்கும் பயப்படாதே. உன் இஷ்டப்படி நடந்துகொள். அவன் இதைக் கேட்டால் சஹிக்கமாட்டான். இவள் செய்த அக்கிரமத்திற்குப் பழியாக, அவனை உன் வசமாக்கிக்கொள். அவன் உன்னோடு எங்கு வேண்டுமானாலும் வருவான். இருவரும் சுகமாக வாழ்வீர்கள். இது என் மனப்பூர்வமான ஆசி. தலையைச் சுற்றுகிறது. மாரை அடைக்கிறது. என்னமோ சொல்லமுடியாத வேதனை செய்கிறது. நான் தவித்துச் சாவதுபோல் அவளும் சாகட்டும். என் உயிர் நில்லாது, அம்மா... அப்பா.........முருகா.........''என்று மாரை அழுத்திப் பிடித்துக்கொண்டாள். பிறகு வார்த்தைகள் நாக்கு உளரியபடி வெளி வந்தன, சித்ரா............முருகா............ சித்ரா.........முருகா.........என முணகினாள். கடைசியில் முருகா என்ற சொல்லுடன் வாய்மூடிற்று. அவள் துன்பத்தின் எல்லைக் கதவும் மூடிற்று. கீழே சாயும் தாயைத் தாங்கி, தன்மடிமீது தலைவைத்துப் படுக்கும்

படிவிட்டாள். கண்விழித்துச் சித்ராவை ஒருமுறை நோக்கினாள். அவ்வளவே துன்பக்கூட்டிலிருந்து விடுபட்டது அவளது உயிர்ப்பறவை. பக்கத்திலிருந்த டாக்டர் அவள் முடிவை நிச்சயப்படுத்தினார் அதிர்ச்சி தாங்காமல் பிராணன் போய்விட்டது என்று,

''அம்மா! கடமை! கடமை! என்று கடமைக்கே உன் வாழ்நாளை அர்ப்பணம் செய்துவிட்டாயே! எனக்குச் செய்யவேண்டிய கடமை முடியவில்லையே. அம்மா! நீ ஒருத்தி இருக்கும்பொழுதே நான் இந்தக் கதிக்கு ஆளானேனே, நீயும் போய்விட்டாய். நான் இனி யாரை அடைக்கலம் புகுவேன்? இனி எப்படி உலகத்தில் காலம் கடத்துவேன்? வஞ்சகம் நிறைந்த உலகத்தில் தன்னந்தனியாக எப்படி இருப்பேன்? எனக்கு ஒரு வழியும் காட்டாமல் சென்றுவிட்டாயே. அம்மா என் துன்பமே உனக்கு முடிவை உண்டாக்கிவிட்டது. ஐயோ! ஷண்முகா! உன் தரிசனம் என்று எவ்வளவு ஆவலுடனும் குதூகலத்துடனும் புறப்பட்டு வந்தேன். என் வாழ்வைக் குலைத்து, என் தாயை இழந்து அனாதையாகத் தவிக்க விட்டாயே. இதுதான் உன் கருணையா? அம்மா! அம்மா! எனக்கு ஒன்றுமே தெரியவில்லையே. என்ன செய்வேன் அம்மா!'' என்று சித்ரா அலறும் காட்சி யாவரையும் வாய்விட்டுக் கதறும்படி செய்துவிட்டது.

காமுவின் எதிர்பாராத மரணத்தினால் ஸீதாலக்ஷ்மியின் மனம் விவரிக்க முடியாத வேதனையை அடைந்தது. "தான் மஹா பாதகத்திற்கு உள்ளாகி விட்டாள்" என்ற கிலிபிடித்துக்கொண்டது. காமு ஒரு தெய்வம்போல் அவள் மனதிற்குத் தோன்றினது. சித்ராவை ஆதரித்து அன்பாக நடத்துவது தனது பாபத்திற்குப் பிராயச்சித்தம் என்று நினைத்தாள்.

கதறும் சித்ராவை எடுத்து அணைத்துக் கொண்டு "சித்ரா! இப்படி எல்லாம் வருமென்று நான் நினைக்கவேயில்லை. உன்னைப் படுகுழியில் தள்ளவென்று நான் செய்யவில்லை. அந்தப் பிள்ளையின் பிடிவாதத்தினாலும், என்னை அறியாமல் என்ன நடந்துவிடுமோ வென்ற அறியாத பெண்புத்தியினாலும், உன்னை வஞ்சித்து அழைத்து வந்தேன். வயதுகூட என்பதைத் தவிர இந்த இடம் நீ நன்றாக வாழக்கூடிய இடம். உன்னை வேண்டியமட்டும் படிக்க வைக்கிறேன் என்று ஒப்புக்கொண்டார். அதனால் நன்றாக இருப்பாயென்றே செய்தேன். ஆனால் நீ உத்தம குணமுள்ளபெண்: உன் மனம் ஒருவனை விரும்ப மற்றவனுடன் வாழ உன் ஹ்ருதயம் ஒப்பவில்லை என்பது மாங்கல்யதாரணம் நடந்தபொழுது தான் என் மனதில்பட்டது. "அன்பு தெய்வீகம்'' சித்ரா! காமு உத்தமி, தெய்வமாக அவளை வணங்கவேண்டும். பெத்த பெண்ணென்றுகூட நினைக்காமல், கடமை என்று கடைசிவரையில் உறுதியாக நடந்தாளே! அவள்ளு உத்தமி! சித்ரா! என்ன செய்வேன் என்று கதருதே காமுவைக் கொடுக்கமுடியாது. மற்றபடி உனக்கு ஒரு குறையுமில்லாமல் என் ஸௌதாவைப் போல் பார்த்துக்கொள்ளுவேன். உனக்கு இஷ்டமானவரை படிக்கவைத்து விடுகிறேன், கதருதே'' என்று தேற்றினாள்.

''சித்ரா! உனக்கு நான் என்ன சமாதானம் சொல்வது? இனி எனக்கு நீ மூன்றாவது குழந்தை. அவ்வளவுதான் நான் சொல்லமுடியும். 'விதவை' என்றசொல் உனக்கு இல்லை. உன் அம்மா கதறிக் கேட்டுப் பிராணனை விட்டாள், அவள் பலிக்குப்பின் நான் செய்கிறேன். கல்யாணம் நடக்கவில்லையென்று செய்துவிடுகிறேன். வருந்தாதே'' என்றார் ராதாகிருஷ்ணய்யர்.

கோர இரவு மறைந்தது. இக்கோரக் காட்சியைக் காண விரைந்து வெளிவந்தான், பாவபுண்யங்களைப் பார்த்துவரும் பாஸ்கரன், உலகின் அந்தகாரம் நீங்கிற்று. சித்ராவின் வாழ்நாள் அந்தகாரம் இன்னும் இருண்டு காட்சியளித்தது. ஒரே சமயம் இரு பிரேதங்கள் புறப்படுவதென்றால் அதைவிடக் கோரகாட்சி உலகில் வேறு என்ன? திருச்செந்தூரே அல்லோலகல்லோலப்பட்டது. காலை தாலிகட்டி, மாலை தாலி இழந்த சித்ராவிற்கு வருந்தாதவரும், காமுவின் அளப்பரிய அன்பின் மரணத்திற்கு அவளை "உத்தமி! உத்தமி'' எனப் போற்றாத நாக்குமில்லை. "நமக்காக அவள் செய்த தியாகத்திற்குப் புவனமே ஈடாகாது. ஆனாலும் என் கடனைத் தீர்க்க நானே அவளுக்கு ஈமக்கடனை முடிக்கிறேன்'' என்று தீச்சட்டியை ஏந்திச்சென்றார் ராதாகிருஷ்ணய்யர்.

மறுநாள் கிரியைகளை முடித்துவிட்டு யாவரும் புறப்பட்டார்கள்.

"சித்ரா! தற்சமயம் இவ்விடம், நாம் இருவருமே பெற்றோரை இழந்து, நம்மனிதர் என்பவரில்லாது அனாதைகளாகித்தன்னந்தனியாக நிற்கிறோம். ஆனால் நான் ஆண்பிள்ளையாதலால் தேறவழியுண்டு. நான் உன்னை என் சஹோதரியாகவே எண்

ணுகிறேன். தாம் செய்த தீமைக்குத் தாமே தண்டனையடைந்தார் என் தந்தை. நீ என்னுடன் வந்தாயானால் உன்னைப் பட்டணம் ஹாஸ்டலில் சேர்த்து வேண்டிய ஏற்பாடு செய்கிறேன். கல்யாணம் நடந்ததாக நான் சொல்லப்போவதில்லை. என் தங்கை உன்னை மிகவும் அன்பாக ஆதரிப்பாள். தற்சமயம் படித்துக்கொண்டிரு. முயற்சிசெய்து உன் காதலனிடம் சொல்லி உன்னை ஏற்கும்படி சொல்கிறேன். நிச்சயம் நீ அவனை அடைவாய்'' என்றான்.

''சேகர்! உங்கள் அன்பிற்கு வந்தனம். நாம் நினைப்பதுபோல் ஒன்றும் நடப்பதில்லை. தற்சமயம் உங்கள் இஷ்டப்படி நடக்க முடியாமை பற்றி வருந்துகிறேன். என் அன்பனை உத்தேசித்துத் திடீரென்று இவர்களை உதறி நான் கிளம்பக்கூடாது. படிப்பும் பாதியில் நிறுத்தமுடியாது. தற்சமயம் இவர்களுடன் சென்று படிக்கிறேன். இச்செய்தி எட்டினால் அவர் நிச்சயம் வருவார். பிறகு அவர் இஷ்டப்படி நடக்கிறேன். உம் தந்தை மீது எனக்கு வருத்தமில்லை. இவர் செய்த உதவியினால், அவரைப் பெற்றோர் மனப்படி நடக்கவேண்டிக் கொள்ள வழியேற்பட்டது என்று நிம்மதியுறுகிறேன். காதல், கல்யாணமென்று இவர்களை விரோதித்துக்கொண்டு படும் சுகத்தைவிட 'விதவை' என்ற பட்டத்தைத் தாங்கி நிம்மதியாகக் காலங்கழிக்கலாமென்று முடிவு செய்துவிட்டேன். எனது உபாத்தியாயினி, மாசிலாமணி வேண்டிய உதவிசெய்வாள். சமயம் நேர்ந்தால் உங்கள் உதவியை நாடுகிறேன். இந்தாருங்கள், உங்கள் பொருள். இதைப் பார்க்கவே என் மனம் ஒப்பவில்லை'' என்று ஒட்டியாணம், வயிரத்தோடு, காசுமாலை, மூன்றையும் கழற்றி அவன் முன் வைத்தாள்.

"சகோதரீ! எனது பரிசாக இவைகளை ஏற்றுக்கொள்ளக்கூடாதா?''

"உங்கள் உதவியை ஏற்றுக்கொள்ளுகிறேன். ஆனால் இவைகள் என் கண்ணிற்குக் கோர ரூப பிசாசங்களாகத் தோன்றுகின்றன, மன்னிக்கவும்.''

''சரி எனக்கும் அவைகளைக் காணக் கண் கூசுகிறது. நம்மை இந்த நிலைமைக்குக் கொண்டுவந்த, இந்த ஷண்முகத்துக்கே இவைகளைப் பரிசாகக் கொடுத்துவிடுகிறேன்.''

''அப்படியே செய்யுங்கள்''



குலதனம்

போலக் கேசதனமும், சில குடும்பங்களில் பரம்பரையாக வருவதுண்டு. கேசதனம் படைத்தவர், அது நஷ்டமாகாமல் கேசவர்த்தினியைக் கொண்டு காப்பாற்றுங்கள். படைக்காதவர் கேசவர்த்தினியைக் கொண்டு அதை அடையுங்கள். சிறு வயது முதல் கேசவர்த்தினி ஒன்றையே உபயோகித்து வருவதால், இள நரை வழுக்கைகளைத் தடுத்துக் கேச ஆரோக்கியத்தையும் கேச சம்பத்தையும் தவறாமல் பெறுங்கள்.

மெலிந்து இளைத்த சிறுவனும் தேகப் பயிற்சி, ஆகாரங்களால் பருத்து அழகிய சதைக்கட்டைப் பெறுவதுபோல, அற்ப கூந்தல் படைத்தவரும் கேசவர்த்தினியைக் கொண்டு அபரிமிதமான கூந்தலைப் பெறலாம்.

குழந்தையின் கூந்தலைக் கேசவர்த்தினி கொண்டே விருத்தி செய்யுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

விலை அணா 12

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்

தென் இந்திய ரஸாயன சாலை

கோயமுத்தூர்.

"அந்தச்சமயம் அவ்விடம் வந்த ஸீதா லக்ஷ்மி, நகைகளை என்ன செய்யப்போகி றீர்கள்?" என்றாள்.

விஷயத்தைச் சொன்னான்.

"செய்யலாம். ஆனால் இப்பொழுது செய் யக்கூடாது. யாரிடமாவது கொடுத்துவை, வருஷம் கழிந்த பின்பு, கொண்டுவந்து போடலாம்" என்றாள்.

"அப்படியானால் நீங்களே வைத்துக் கொண்டிருங்கள். சித்ரா நல்ல நிலைமையி லிருக்கிறாள் என்று கேள்விப்பட்டபிறகு நான் வந்து இவைகளை வாங்கி, காணிக்கை செலுத்துகிறேன்" என்றான்.

சேகரன் அப்படியே பட்டணம் சென் றான். மற்றவர்கள் ஊர்வந்து சேர்ந்தார் கள். சித்ரா கண்டிப்பாக ஸீதாலக்ஷ்மி வீட் டிற்கு வரமாட்டேனென்று சொல்லிவிட் டுத் தன் வீட்டிலேயே தங்கினாள். பாட்டி இச்செய்தி கேட்டுத் துடித்தாள். சித்ரா விற்கு ஆறுதல் சொல்லிச் சமாதானப் படுத்திவந்தாள். தினம் ஸீதாலக்ஷ்மியும் ராதாகிருஷ்ணய்யரும் காலையும் மாலையும் வந்து ஆறுதல் சொல்லிப் போவார்கள். சாப்பாடு காபி முதலானவைகளை ஆள் வசம் அனுப்பி வந்தார்கள்.

முதல்நாள் பத்திரிகையில், கோர சம்பவம் "இஷ்டமில்லாத கல்யாணம். காலை தாலி கட்டும் சமயம் பெண் மூர்ச்சையானாள். மாலையில் மாப்பிளை மரித்தார். உலகம் போற்றும் உத்தமி, தியாகி, கலியுக பத் தினி, செல்வத்தின் சீரழிவைக் கேட்ட தக்ஷணமே உயிரை நீத்தாள். பணக்கார ரின் சூழ்ச்சி வறுமையின் வீழ்ச்சி. அனி யாய மரணம்" என்றெல்லாம் வெளிவந்த தைப் பார்த்த ராதாகிருஷ்ணய்யர் மனம் நொந்து இரண்டு ஆயிர நோட்டுக்களைப் பத்திரிகை ஆபீஸ்களுக்கு வீசினார். மறு நாளே.

"ஓர் தவறுதல்; வருந்துகிறோம்."

திவான் பகதூரைப்பற்றித் தாறுமாறாக அறியாத ஒருவர் தகவல் அனுப்பிவிட்டார். உண்மை வேறுவிதம். அவரைநேரில் பேட்டி கண்டு, தெரிந்தவிஷயம், பெண் சம்மதத் துடனே தான் கல்யாணம் ஏற்பாடு, ஆனால் மாலைமாற்று முன்னே, அப்பெண் மூர்ச்சை யாகிவிட்டாள். ஏதோ வியாதியென்று டாக் டர் அபிப்பிராயப் பட்டார். கல்யாணம் நின்று விட்டது. மாலை வாந்திபேதி யினால், மாப்பிள்ளையும், பெண்ணின் தாயாரும் இறந்தார்கள். திவான்பகதூர் உதாரகுணத்தினால் தமது வேலைக்காரிக்குத் தாமே ஈமக்கடன் செய்தார். இறந்த சுப்பய்யரின் புதல்வன் வந்திருந்தபடியி னால் யாவும் ஒருமாதிரியாகப் போய் விட்டது. திவான்பகதூரும், அவர் மனைவி யும் இனி அப்பெண்ணைத் தங்கள் பாதுகாப் பில் வைத்து, சம்ரக்ஷணை செய்யப்போகி றார்கள். உலகத்தில் இதுபோல் எல்லாத் தனவந்தர்களும் நடந்தார்களானால் ஏழை மக்கள் கண்ணீர் சிந்தப் பிரமயமே இருக்காது" என்று பக்கம் பக்கமாகத் தின சரிகள் வெளுத்துவாங்கின.

நாராயண வாத்தியார் சொன்னபடி ஏதோ ஒருவிதமாக அவர்கள் பெயர் பத் திரிகையில் வெளிவந்தன.

* * *

எட்டுமணி குண்டின் சப்தம் சிந்தனையி லாழ்ந்த வண்ணம் ஈஸிச்சேரில் சாய்ந்து கொண்டிருந்த பிரபாகரனைத் தட்டி எழுப் பியது. அன்று விடிந்தது முதல் அவன் மனம் சொல்லமுடியாத ஒருவித வேதனை செய்தது.

முதல்நாள் "இன்று சாயங்காலம் உங்கள் அம்மாவுடன் லக்ஷார்ச்சனையின் நிமித்தம் திருச்செந்தூர் செல்லுகிறேன். வந்தபின்பு அங்கு பார்த்தவைகளைப்பற்றி எழுது கிறேன். அன்று கோபித்துக்கொண்டா லும், எனது வாக்கை நம்பினார் போலும். இன்று அன்பாகப் பேசினார். உங்கள் தாய் சொல்லுவதைக் கேட்க நான் கடமைப்பட் டவள்தானே. எனக்கு அதைப்பற்றி யா தொரு வருத்தமுமில்லை" என்று சித்ரா கடி தம் எழுதியிருந்தாள். எழுந்து உட்கார்ந்த வன் புஸ்தகத்தைப் பிரித்து அக்கடிதத்தை மறுமுறை படித்தான். "முந்தாநாள் வந் திருந்தால் சேகரை அவளுக்கு அறிமுக மாக்கிக் கடிதம் எழுதியிருக்கலாம்" எனச் சொல்லிக் கொண்டான். பிறகு புஸ்த கத்தைப் பிரித்தான். மனம் ஓடவில்லை. என்ன இது! ஒருநாளுமில்லாது மனம் சஞ்சலமுறுகிறது என்று எண்ணியவாறு ரேடியோவைத் திருப்பினான். "பண்டித மோதிலால்நேருவைப்பறிகொடுத்தோமே" என்று பாடிற்று. "சட் இதென்ன அழுகை" என்று இன்னொரு ஸ்டேஷனைத் திருப் பினான். "விதியதாம் மாறு" என்று ஆரம் பித்தது. "ஐயோ விதியே" என்று மற்றொரு ஸ்டேஷனைத் திருப்பினான். "தனியனானேனே" என்று முகாரியில் ஒருவர் அழுதார். "இது என்ன சோதனை" என்று ரேடியோவை மூடிவிட்டு, இங்கு மங்குமாக உலாவினான். சினிமாவுக்காவது

போய் வரலாமென்றால் சேகர் இல்லை. இரண்டாம் காட்சிக்குப் போனால் கஷ்டம். என்ன செய்வது? சமுத்திரக்கரையில் போய் உட்காரலாமா? என்று நினைத்து, ஷாலை எடுத்துப் போர்த்திக்கொண்டு, கதவைத் திறந்தான். படியில் ஆள் ஏறிவரும் பூட்ஸ் சப்தம் கேட்கவே நின்றான். சேகர், கையில் பையுடன் நுழைந்தான். முகம் வெளிறிப்பார்க்கப் பயங்கரமாக இருந்தது.

'அப்பாடா!'' என்று பையை நாற்காலி கையில் மாட்டிவிட்டு ஈஸீச்சேரில் சாய்ந்தான்.

''என்ன சேகர்! ஒரு மாதிரியாகக் காணப்படுகிறாயே? உனது லக்ஷ்யமணம் சுபகரமாக நடந்ததா, உன் தந்தை ஹனிமூன் கிளம்பிவிட்டாரா? நீ இவ்வளவு சீக்கிரத்தில் திரும்பிவிட்டாயே'' என்று கேட்டவண்ணம் எதிரிலுள்ள நாற்காலியில் உட்கார்ந்தான்.

''பிரபாகரா! என்னவென்று சொல்லுவேன். விதி, அதை நம்புகிறாயா?''

''என்ன புதிர் போடுகிறாய்? நம்பித்தான் ஆகவேண்டியிருக்கிறது. என்ன விஷயத்தைச் சொல்லு. ஏற்கனவே என் மனம் இன்று காலை முதல் சொல்லொணா வேதனைப்படுகிறது. உனது சொல் இன்னும் என்னை வாட்டுகிறது.''

''ஆம் நானும் நம்பவேண்டியவனாகிவிட்டேன். என் தந்தை திரும்பாத என் தாயுடன் ஹனிமூனுக்குத் தேவலோகம் சென்றிருக்கிறார்'' என்றான்.

''என்ன?'' என்றான் பதறியவனாக.

''பிரபாகர்! சொல்லுகிறேன் அமைதியாகக் கேள்.'' என்று தான் சென்று தந்தை சித்ரா சம்பாஷணை கேட்டது முதல் புறப்படும் வரை நடந்தவற்றைச் சொல்லி முடித்துவிட்டு, 'ஐயோ அப்பெண்ணின் பரிதாபம் என்னால் சகிக்கவில்லை, தந்தையின் காரியம் முடிந்ததும் அவன் காதலனைத் தேடிப் பிடித்து அவளை ஏற்றுக்கொள்ளுமாறு செய்துவிட்டே மறுவேலை'' என்றான்.

அதுவரை அமைதியுடன கேட்டவன் ''படம் பிடித்தேன் என்றாயே. கிளீன்செய்தாய்விட்டால் காண்பி பார்க்கலாம்'' என்றான்.

''காலையில் முதலாக அதைத்தான் செய்தேன். இந்தா', என்று ஐந்தாறு படங்களை எடுத்து மேஜைமீது வைத்துவிட்டு, 'ஒன்று அப்பெண் மாலையுடன் நின்றசமயம், மற்றொன்று தாயார் இறந்ததும் தலைவிரி கோலமாக நின்றகாட்சி, மூன்றாவது சாகும் தறுவாயில் என் தந்தையுடன் கம்பீரமாக நின்று பேசியது, மற்றது அவள் தாய், திவான்பகதூர், அவர் சம்சாரம், வாத்தியார்'' என்றான்.

அவர்களின் பெயர்களைச் சொல்லவில்லையே'' என்றவாறு படங்களைக் கையிலெடுத்தான்.

பெண்ணின் பெயர் சித்ரா என்று சொன்னதும், பிரபாகர் படத்தைப் பார்க்கும் சமயமும் ஒன்றாய் நிகழவே, அவன் மேலே சொல்லுமுன், ஐயோ! சித்ரா! நீயா! சித்ரா! சித்ரா என் சித்ராவிற்கா இந்தக் கதி'' என்று அலறினான். அடுத்தகணம் உணர்வற்று விழுந்து விட்டான்.

எதிர்பாராத இச்சம்பவத்தைக் கண்ட சேகர் பதறிப்போனான். ''பிரபாகர்! உன் சித்ராவா, ஐயோ அறியாமல் போனேனே'' என்று புலம்பியவாறு அவனது மூர்ச்சையைத் தெளிய வைத்தான்.

''சேகர்! என் கண்மணி எப்படி இருக்கிறாள்? ஐயோ இப்படியே புறப்படலாமென்றால் வண்டி கிடையாதே. என்னைப் பெற்றவர்களே சதி செய்துவிட்டார்களே! காமாக்ஷியம்மா, நீ எவ்வளவு தடவை என்னிடம் கெஞ்சி மன்றாடினாய்? என்னை மனமாரத் திட்டியிருப்பாய் ஐயோ கடமைக்காக உயிரைத் தியாகம செய்தாளே. சேகர்! காமாக்ஷியைப்பற்றி உன் தந்தை சொன்னது சுத்தப்பொய். கட்டுக்கதை. அவள் நடத்தை தூயது. என் தகப்பனாரும் பரநாரி சஹோதரர். உலகத்தில் காமாக்ஷிக்காகவே மழைபெய்கிறது என்று சொல்லுவேன். நான் சித்ராவை மணம் செய்துகொள்ளக்கூடாது என்பதற்காக என் தாயார் செய்த சூழ்ச்சி. உண்மைக் காதலின் தன்மையை அறிந்திருப்பார்களா? என் சித்ரா உணர்வற்று விழுந்தபின் தாலிகட்ட உன் தந்தை எவ்விதம் சம்மதித்தார். காமாக்ஷியம்மா! தெய்வமாக நின்று பார்த்துக் கொள்ளுங்கள். சித்ராவைத்தான் நான் ஏற்றுக்கொள்ளுவேன்'' என்று வாயில் வந்தவிதமெல்லாம் புலம்பிவிட்டு, ''சேகர் நீ கோழை, போலீஸில் ஏன் தகவல் கொடுக்கவில்லை.''

''பிரபாகர்! என் நிலைமையில் நீயிருந்திருந்தால் இவ்விதம்தான் நடக்கமுடியும். அவள் காதலன் ஜம்ஷட்பூரில் இருக்கிறான் என்று சொன்னதினால் உன்னைப்பற்றின சிந்தனை ஏற்படவில்லை. போலீஸில் தெரியப்படுத்தினால், நான் ஒருவன், அவர்கள் அனைவருமாக ஒன்றுசேர்ந்து சொல்லுவார்கள். சித்ராவும் சம்மதத்துடன் சென்றிருக்

கிறாள்; அவள் தாயார் என்னிஷ்டம் என்றால்? சித்ராவும் அப்படியே சொல்லிவிட்டால்? என் பேச்சை யார் கேட்பார்கள்? ஒன்று செய்திருக்கலாம். அவளை மறைத்துக் கல்யாணத்தை நிறுத்தியிருக்கலாம். அது விஷயத்தில்தான் விதியை நம்பவேண்டி வருகிறது. அவளைப் பார்க்கமுடியாமல் போய்விட்டது'' என்றான்.

''சரி. இனி நீ என்னசெய்யப்போகிறாய்?''

''தங்கைக்கு அன்றே தந்தி கொடுத்து விட்டேன். சித்தூருக்கு வந்திருப்பாள். நாளைக்காலை வண்டியில் அவ்விடம் சென்று, தந்தையின் காரியங்களை முடித்துவிட்டுப் பழையபடி வந்து படிக்கவேண்டியதுதான்''

நீயும் நாளை மாலை புறப்பட்டுப்போ. அப்பெண் உன்னைத் தெய்வமாகப் போற்றுகிறாள். அளவற்ற நம்பிக்கை வைத்திருக்கிறாள். உன்னைப்பார்த்தால் அவள் துக்கம் கொஞ்சம் குறையும். உன் பெற்றோருடன் இப்பொழுது சண்டை போடாதே. அமைதியாகக் காரியத்தைச் சாதி. உன் தாயும் இச்சம்பவத்தினால் அருண்டு போய்விட்டாள். அதிக எதிர்ப்பு இருக்காது. என் மனோரதம் இந்தவிதமாகப் பூர்த்தியாகும் என்று எதிர் பார்க்கவில்லை. ஜம்ஷட்பூர் செல்லவிருந்தேன்.''

''விதிதான் உன் நாவைத்தடுத்துவிட்டது. சித்ராவிடம் உன் அன்பன் எவ்வூரிலிருக்கிறான் என்று கேட்கத் தோன்றவில்லையல்லவா?''

''முன்னால் பார்த்துக் கேட்டிருந்தால் தானே பிரயோஜனம்?''

''சரி, போனதைப்பற்றி பேசிப்பயனென்ன? நடப்பதைப்பற்றியோசிக்கலாம், சாப்பிடப்போகலாம் வா.''

''சார் தந்தி'' என்று சேவகன் உள்ளே நுழைந்தான்,

இருவரும் பதறியவண்ணம் தந்தியைப் பிரித்தார்கள்.

''சேகரா நீயேபார். என் விதி எதைக் கொண்டுவந்திருக்கிறதோ. என்னால் தாங்க முடியவில்லை'' என்றான்.

''ஸௌதா பலஹீனமாக இருப்பதினால், எனக்கு லீவு கிடைக்காததினால் தக்க துணைகளுடன் வருகிறாள். நாளைக்காலை சென்டரலுக்கு வந்து அழைத்துப் போகவும்.

ராகவன்.''

என்றதைப் படித்ததும் ''அப்பாடா'' என்று இருவரும் நீண்ட மூச்சுவிட்டார்கள். ஒரு ரூபாயை எடுத்து வீசினான் தந்திச்சேவகனிடம் பிரபாகர்.

''ஸௌதா வருவதும் ஒரு நன்மையே. சித்ராவிற்கு விதி இப்பொழுது நன்மையே செய்கிறது'' என்றான்.

பாத்ருடுவின்

பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

48 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறுதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

1, தெற்கு மாடவிதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—	திருச்சி கிளை :—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.	15, புகழியபிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

ப்ரேம ப்ரகாசம்

கே. வரதாச்சாரி

[விதியின் சூழ்ச்சி; பிரதாபஸிம்மரைப் பகைத்துக்கொண்டு பாத்ஷா அக்பரிடம் உதவிநாடி வந்த சக்தஸிம்மர் சிறையிலடைக்கப்பட்டுச் சிரச்சேதத்துக்குத் தயாராகிறார். தமக்குள் சிந்தித்துக்கொண்டிருக்கிறார்.]

சக்தஸிம்மர்:— கழிகிறது இரவு, அதனுடனே என் அல்ப ஆயுளும், கொழுத்துக் களித்த இவ்வுடல் இனி நாய்க்கும் நரிக்கும் உணவாம், ஒழுகி ஓடும் உதிரவெள்ளத்தை யாவரும் காண்பார்கள் காலை. ஆனால் நான் மட்டில் காணமாட்டேன். ஆம். இந்த 'நான்' என்பது யார்? பௌதிக சாஸ்திரத்திலும் பதில் இல்லை. வேதாந்த விசாரத்திலும் விளக்கம் இல்லை. யார் இந்த 'நான்?' நாற்பது ஆண்டுகளுக்குமுன் எங்கிருந்தேன். நாளை எங்கிருப்பேன்? நேரில் காண்பேனோ நாளை?

(கையில் தீவர்த்தியுடன் முகமூடி அணிந்த முகலாயப்பெண் சிறைக்குள் நுழைகிறாள்.)

சக்த: யார்? (மரியாதையாக எழுந்து நிற்கிறார்.)

ஸ்திரீ: யாராக இருந்தால் என்ன? புறப்படும்.

சக்த: எங்கே?

ஸ்திரீ: எங்காவது செல்லும். உமக்கு விடுதலை அளிக்கவந்தேன். தப்பி ஓடும்.

சக்த: தப்பி ஓட நான் விரும்பவில்லை. அப்படி உயிர்வாழவேண்டாம் எனக்கு.

ஸ்திரீ: உயிரில் விருப்பமில்லையா? உண்மை தானா? இனிய உலகம், இளம் பிராயம், விட்டுச்செல்ல மனம் வருமா?

சக்த: பார்த்துப் பார்த்து அலுத்துவிட்டது அம்மணி. உளுத்துவிட்டது உடல், மறுமையிலாவது புதுமை உண்டா என்று காண ஆவல் உண்டாகி இருக்கிறது.

ஸ்திரீ: அவ்வளவு உதாசீனமா? தம்மை நம்பி வாழ்பவர்கள் நிலை என்ன ஆவது?

சக்த: என்னை நம்பி வாழ்பவர் யாருமில்லை அம்மணி. நான் எவரையும் நேசித்ததில்லை. இவ்வாழ்நாளில் என்னையும் ஒருவர் நேசித்ததில்லை. கடன் பட்டதும் இல்லை; கடன் கொடுத்ததும் இல்லை. வரவு செலவு எப்பொழுதுமே நேர். பாக்கி என்பதே இல்லை. (தமக்குள்) ஒன்று மட்டில் பாக்கி இருக்கிறதே! பழிவாங்காமலே போய்விடுகிறேனே! சலீமுக்குப் பதிலுக்குப் பதில் செய்யாமலே போய்விடுவதா? ஐயோ!

ஸ்திரீ: சரி. தங்களுக்கு உயிர் தப்பவேண்டியது அவசியமில்லை என்றால் நான் போகிறேன். (போகிறாள்)

சக்த: அம்பணி, அம்மணி! ஒரு நாளைக்கு மட்டில் எனக்கு உயிர்வேண்டும். விடுதலை வேண்டும், சுதந்திரம் வேண்டும். பிறகு தானாகவே இங்கு வந்து சிரச்சேதத்தை ஏற்றுக்கொண்டுவிடுகிறேன். ஒரே ஒரு நாளைக்கு எனக்கு விடுதலை அளியுங்கள்.

ஸ்திரீ: டேய் காவல்! இவர் தளைகளை நீக்கு. நீர் இனி சுதந்திரர். எங்கு வேண்டுமாயினும் போகலாம், என்ன வேண்டுமாயினும் செய்யலாம். பிரியப்பட்டால் தங்களிடம் தன் ஹிருதயத்தைப் பறிகொடுத்த முகலாயப் பெண்மணியையும் மணந்து கொள்ளலாம்.

சக்த: ஹிந்துவா முஸல்மானியப் பெண்ணை மணப்பது? சாஸ்திரத்தில் இடமில்லையே! மேவார் வம்சத்துச் சம்பிரதாயம் மறுக்குமே!

ஸ்திரீ: உங்கள் மூதாதை பப்பா ராவல் முஸல்மானியப் பெண்களை மணந்துகொண்டாரே!

சக்த: அது ராக்ஷஸ விவாஹம்.

ஸ்திரீ: ராக்ஷஸமோ, பிராம்மணமோ, விவாஹமாயிற்றல்லவா? விவாஹத்துக்குச் சாஸ்திரம் பிரேமைதான். அன்பில் வளர்ந்து ஆர்வத்தில் பெருகி அன்பொடு இயங்கும் கட்டுக்கு உமது வேதசாஸ்திர வசனம் என்ன செய்யும்? சமுத்திரத்தில் ஓடிச் சென்று கலந்து நிற்கும் நதிகளுச்கு எந்தப் புரோகிதருடைய உபாத்தியாயம்? மரத்தைச் சுற்றித்தழுவி நிற்கும் செடிகளுக்கு எந்தக் காஜியின் அனுமதி?

சக்த: நான் நாஸ்திகன்தான். சாத்திரத் தடை எல்லாம் எனக்கு இல்லை,

ஸ்திரீ: பின்?



LTS. 136-23-40 TM

சக்த: (தமக்குள்) இதுவும் ஒரு வேடிக்கை தானே! அதையும்தான் பார்ப்போமே! என்ன நஷ்டம்? பெண்கள் போக்கையும் தான் பார்ப்போமே.

ஸ்திரீ; சம்மதமா? சொல்லும்.

சக்த: சம்மதம்.

ஸ்திரீ: ஈச்வர ஸாக்ஷியாக.

சக்த: ஈச்வரன் இருப்பதாக நான் ஒத்துக் கொள்வதில்லையே,

ஸ்திரீ: உம் அனுமதியின்றியும் அவர் இருக்கலாம் அல்லவா? அதனால் ஈச்வர ஸாக்ஷியாக என்று சொல்லும்.

சக்த: ஈச்வர ஸாக்ஷியாக.

ஸ்திரீ; சரி வாருங்கள் வெளியே. குதிரை தயாராகக் காத்துக்கொண்டிருக்கிறது (இருவரும் போகிறார்கள்.)

2

பின்ஸகராக் கோட்டை, சக்தஸிம்மர் தனியாக.

சக்த. ஸலீம்! தெரிகிறதா? இவ்வளவு நாட்களில் என்ன செய்துவிட்டேன் என்று புரிகிறதா? பெரும் படை திரட்டிவிட்டேன். கோட்டையைச் செப்பனிட்டுக் கொண்டுவிட்டேன், அண்ணன் பிரதாபஸிம்மருடன் சேர்ந்துகொண்டுவிட்டேன். சிதறிக்கிடந்த ராஜபுத்ர சக்தியை ஒன்று கூட்டிவிட்டேன். ஏன் என்று தெரிகிறதா? பழிக்குப் பழிவாங்க. உன் ஒரு உதைக்கு, நூறு உதை; அசல், வட்டி, வட்டிக்கு வட்டி தெரிகிறதா? ஒரு நபருக்குச் செய்த அவமானம் ஒரு சாம்ராஜ்யத்தையே திரும்பி வந்து தாக்கிச் சிதறடிக்கப் போகிறது தெரிகிறதா? உன் செல்வத்துக்கும் செருக்குக்கும் அடிப்படையான வியாபார ஸ்தலங்களைச் சூறையாடப் போகிறேன். நாளைக்கே புறப்படுகிறேன்.

(தௌலத் உன்னிஸ்ஸா வருகிறாள்)

சக்த. என்ன? என்ன வேண்டும் உனக்கு?

தௌலத் (ஒன்றும் தோன்றாமல் நிற்கிறாள்)

சக்த: என்னவேண்டும்.? ஏன் இங்கு வந்தாய்?

தௌலத்: நாதா! (மேலே பேசமுடியாமல் நிற்கிறாள்)

சக்த: இது ஏதடா கஷ்டம்! சொல்ல வந்ததைச் சொல்லித் தொலைக்காமல் "நாதா" என்று நின்றால், இந்தக் கடும் வெய்யிலில் இவ்வளவு தூரம் இங்குவந்தது இதற்குத் தானா? இந்தவேளையில் இந்த அன்பு விளி! உச்சிவேளையில் கொதிக்கும் வெய்யிலில் 'ப்ராணேச்வரா!' 'ப்ரியதமா!' என்று எப்படித்தான் உனக்குக் கூசாமல் கூப்பிடத் தோன்றுமோ? அல்லது இன்று தான் நமக்கு மணம் முடிந்திருக்கிறதா? ஒருவருடத்துக்கு மேற்பட்டும் இன்னமும் நீ "ப்ராணநாதா" என்றழைத்துக்கொண்டிருந்தால்—

தௌலத்: ஒரு வருடமானால் என்ன? நூறு வருடமானால் என்ன? எங்கள் அன்பு என்றும் ஒரே நிலையில் நிற்பது, நாட்களால் நலைபடாது; பழக்கத்தால் புளிக்காது; என்றும் புதிது; எப்பொழுதும் இனிது. புருஷர்கள் எப்படி மாறுகிறார்களோ, பெண்கள் பிரேமைக்கு என்றும் மாறுதலில்லை, நாதா—

சக்த: ஓ, அப்படியானால், புருஷர்கள் போக்கிரிகள், விடர்கள், ஆசையைத் தீர்த்துக்கொண்டு விலகிவிடுகிறார்கள் என்கிறாயோ? பெண்கள்—என்றால் ஆசை அவர்களுக்குத் தீர்வதே இல்லையோ?

தௌலத்: நாதா! ஸ்திரீ புருஷ ஸம்பந்தம் இது தானா?

சக்த; வேறு என்ன ஸம்பந்தம்? புரோஹிதர் இரண்டு மந்திரவாக்கியங்கள் சொல்லிவைப்பதால் என்ன ஆகிவிடும்? நமக்கு அதுகூடக் கிடைக்கவில்லை. உலகம் நம்மை வெறும் காதலர்கள் என்றுதான் கருதும் ஏன் உன்முகம் திடீரென்று சிவந்துவிட்டது? நான் என்ன அப்படிச்சொல்லிவிட்டேன்?

தௌலத்: நாதா!

சக்த: போதுமே. போ உள்ளே. ஸ்திரீகளின் அதராம்ருதத்தைப் பானம் செய்வதைவிடச் சிறந்தவேலை புருஷர்களுக்கு உண்டு. போ உள்ளே. (தலை குனிந்து தௌலத் மெள்ள உள்ளே செல்கிறாள்)

சக்த: ஸ்திரீகளே இவ்வளவுதான். அல்ப ஜந்துக்கள்! நம்மோஹம் அவர்களை அழகு படைத்தவர்களாகக் காட்டுகிறது. மிருகங்கள் நாம். கொழுக்கக் கொழுக்க அழகு தான். கடைசியில் எல்லாம் மண்! இதற்குத் தான் தங்கப்பூச்சு, தத்வப் பேச்சு.

* * *

3

ஒரு மாதம் கழித்து அதே பின்ஸகராக் கோட்டை வெளிப்பாகம்.

சக்தசிம்மர்: கொலே! கொலே!! கொலே!!! இவ்வுலகமே கசாய்க் கடைதாஞ? பஞ்சம் பிணி பூகம்பம் வெள்ளம். போதாதென்று நாமாக வேறு உதிரவெள்ளத்தைப் பெருக்க வேண்டுமா? பாப புண்யம் வேண்டாம், நாகரிகம் வேண்டாமா? ஒருவனேக் கத்தியால் குத்திஞல் அது குற்றம் என்று வரையறுத்திருக்கும் சமூகம் பலரைச் சேர்ந்தாற்போல் வாளுக்கு இரையாக்குவதை வீரமென்று வாயாரப் புகழ்கிறதே! இது என்ன நியாயம்? (பீரங்கி கர்ஜிக்கிறது) ஆரம்பித்துவிட்டது காலனின் கோலாஹலம், இனி ஓயாது. பெரும்படையுடன் மஹபத்கானே நேரில் வந்து விட்டான். என்னே வெல்லாமல் மீளான்.

(கோட்டைக் காவலாளி வருகிருன்; நமஸ்கரிக்கிருன்.)

கோட்டை: கீழ்ப்புறத்துச்சுவர் விழுந்து விடும்போலிருக்கிறதே. காக்கவழி தெரியவில்லேயே!

சக்த: ராணுஜீயிடம் இருந்து ஏன் இன்னும் தகவல் வரவில்லே? கோட்டை சூழப்பட்ட விவரம் அனுப்பப்பட்டதல்லவா?

கோட்டைக்காவல்: அனுப்பியிருக்கிருேம். இவ்வளவுநாள் துணேயும் வந்திருக்கலாம் ஏனே ஒன்றும் தெரியவில்லே. பதிலும் இல்லே, உதவியும் இல்லே.

சக்த: நடப்பது நடக்கட்டும். மிஞ்சியிருக்கும் படைகளேத் திரட்டிவாரும். "ஜௌஹர்" ருக்குத் தயராகிவிடுவோம்.

(காவலாளி நமஸ்ரித்துவிட்டுப்போகிருன்)

சக்த: கெட்டிக்காரன் மஹபத்கான். கிழண்டைச் சுவர்தான் பலவீனமானது

என்று உடனே கண்டுகொண்டுவிட்டான். அதனுல் என்ன? சாகப்பயந்தவர்களுக்கு அன்ருே கவலே? க்ஷத்திரியர்கள் ஒத்து

வாழத் தெரிந்து கொள்ளாவிட்டாலும் ஒன்றுபட்டு இறக்கத் தெரிந்தவர்கள்.

(தலைவிரிகோலமாய்த்தௌலத்வருகிருள்)

சக்த: ஐயோ, என்னஇது? ஏன் இங்கு வந்து விட்டாய்?

தௌலத்: நாதா! எங்கே புறப்பட்டுவிட் டீர்கள்? இன்னும் விடியக்கூட வில்லையே.

சக்த: சாகப்புறப்பட்டபின் வேலையைப் பார்ப்பானேன்? "ஜௌஹருக்கு" தயாராகி விட்டேன். ஏன் விழிக்கிருய்? தெரியவில்லையா? ராஜபுத்ர வழக்கம், தங்கள்கோட்டையைக் காப்பாற்ற முடியாவிட்டால் எதிரி கையில் கோட்டை சிக்குவதற்குமுன் போர்க்களத்தில் எதிரியைத் தேடிச்சென்று தாளுகவே கத்திக்கு இரையாவது. அதை அனுஷ்டிக்கப்போகிறேன். தெரிகிறதா?

தௌலத்: நாதா!

சக்த: சரிதான்போ! சாகப்போகையிலுமா இது? அதோ கேட்கிறதா பீரங்கி! பீரங்கிக்குமுன் வீரம் உண்டோ? மண்ணும் ஒன்றுதான், மனிதனும் ஒன்றுதான். ஓடிந்து விழுந்து மடியவேண்டியதுதான். போ உள்ளே.

தௌலத்: நாதா! நானும் வருகிறேன்.

சக்த: என்ன! எங்கே வருகிருய்? போர்க்களத்துக்கா? கொலைக்களம் இது. காதலர் கூடும் நறுமணச் சோலையல்ல, எழில் மிகு பொழில் அல்ல, பிணக்காடு.

தௌலத்: எனக்கும் சாகத்தெரியும்.

சக்த: என்தெரியாது? பெண்கள்தான் தினம் ஒன்றுக்குப் பத்துத் தடவை "செத்தேன், செத்தேன்" என்று செத்துக்கொண்டிருப் பார்களே! ஆனல் அந்தச் சாவு இல்லை இது. பிரணய கலகமல்ல, காதலர் பிணக்கல்ல, உயிர்ப்பலிகொள்ளும் வஞ்சப்போர் இது.

தௌலத்: ரணகளம் எனக்குப் புதிதல்ல நாதா! மூகலாய வீரப்பெண் நான். நானும் தங்களுடன் கூடவே இறக்கிறேன்.

சக்த: என்ன? நிஜமாகவா? நீ எதற்காக அதற்குள் சாகவேண்டும்? ஏன் இவ்வளவு அவசரம் உயிரைவிட? உடல் நலம் பேணும் பருவமிது உனக்கு.

தௌலத்: போதும்.

சக்த: என்ன இது? ஏன் இந்த மாறுதல்? இதுவரையில் கண்ட தௌலத்தாளு

இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபிஸ்: மாயவரம் ★ ஸெண்ட்ரல் ஆபிஸ்: மதராஸ்.

வாக்களிக்கப்பட்ட மூலதனம் ரூ. 25,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் ... ரூ. 18,75,000
ரிஸர்வ் பண்டு ... ரூ. 7,75,000
மொத்த ஆஸ்தி ... ரூ. 5 கோடிக்குமேல்

ஸிட்டி ஆபீஸ்கள்:

சைளுபஜார், மாம்பலம், மயிலாப்பூர், பெரியமேட், திருவல்லிக்கேணி

அமதலவால்ஸா	கும்பகோணம்	திருநெல்வேலி ஜங்ஷன்	ராமநாதபுரம்
அனகாபள்ளி	சாளூர்	திருச்சிளுப்பள்ளி	மதுரை
அம்பாசமுத்திரம்	சிதம்பரம்	திருவாரூர்	மாருடேரு
ஆம்பூர்	சித்தூர் (கொச்சி)	தென்காசி	விழுப்புரம்
ஈரோடு	சீயாழி	நாகப்பட்டணம்	விருதுநகர்
கடலூர் N. T.	தஞ்சாவூர்	பரமக்குடி	விஜயநகரம்
கடலூர் O. T.	தாடபள்ளிக்கூடம்	பாலக்காடு	வேலூர்
காஞ்சீவரம்	திலாறு R. S.	பார்வதிபுரம்	வேதாரண்யம்
காரைக்குடி	திருநெல்வேலி டவுன்	புதுக்கோட்டை	

பிக்ஸட் டிபாஸிட்கள்:- ஒரு வருஷம் நூற்றுக்கு வட்டி ... ... $2\frac{3}{4}\%$ விதம்
இரண்டு ,, ,, ... 3% ,,
சேவிங்ஸ் பாங்கு கணக்கு வாரம் ரூ. 250/ வாங்கக்கூடியது ரூ. 5000/ வரை வட்டி $2\frac{1}{2}\%$,,
கரண்ட் கணக்கு .. .. $\frac{1}{4}\%$,,

தங்கம், வெள்ளிபார், கவர்மெண்ட் பாண்டு, கடன் பத்திரங்கள், ஷேர்கள், வியாபாரச் சரக்குகள் முதலியவைகளின் பேரில் கடன்கள் கொடுக்கப்படும்.

எல்லாவிதமான பாங்கு நடவடிக்கைகளும் நடத்தப்படும்

எஸ். என். என். சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்.

இவள்? திடீரென்று இவள் முகத்தில் உறுதி, கண்களில் கனல், உடலில் முறுக்கு, ஏன் இது? தௌலத்! நீ இன்னும் இளம் பிராயத்திலிருப்பவள். சாகப்பார்க்காதே! யாராவது ஓர் சுதந்தரப் புருஷனைக்கூடி...

தௌலத்: (தலைநிமிர்ந்து கர்வமாக) நாதா! இது என்னபேச்சு? தங்களைப்போன்ற அறிவாளிகளுக்கு ஏற்றதா இது? ஸ்திரீ ஒரு தடவை ஒரு புருஷனை தன் ஹிருதயேச்வரனாக வரித்துவிட்டால் அவரே அவளுக்குத் தெய்வம். சாவோ வாழ்வோ, இம்மையோ மறுமையோ, விருப்போ வெறுப்போ, வேறொருவரை மனதாலும் நினைக்கமாட்டாள். அன்பு, என்பது, நாதா! ஆசையல்ல. பித்தத்தில் உதித்தெழும் உணர்ச்சியல்ல. உள்ளத்தை உருக்கி உயிருடன் உலவும் உத்தம தர்மம். போற்றுவீர்களோ, புறக்கணிப்பீர்களோ, தங்களையன்றி எனக்குவேறு தெய்வமில்லை.

சக்த: சரிதான்போ! பகவத்கீதையைப் பாராயணம் செய்துவிட்டு, புத்தி தடுமாறிப் பிதற்றுகிறாய். எனக்கென்ன? சாகவேண்டுமானால் சாகு! பீரங்கிக்கு ஒருவரானால் என்ன இருவரானால் என்ன? சளைத்து விடாது. அதோ கேட்கிறதா சப்தம்? (பீரங்கி கர்ஜிக்கிறது.)

தௌலத்: சரி, இருங்கள், வீர ஆடை அணிந்து வருகிறேன். தங்களுக்குத்தக்க துணைதான் என்று தோன்றும் அப்பொழுது. இதோ வருகிறேன்.

சக்த: (சிரித்து) வாய்ப்போர் அல்லவே. கத்தி முனையில் அல்லவா தெரியவேண்டும் துப்பாக்கிக் குண்டு வந்து அன்பு முத்தம் அளித்து விடப்போகிறது, ஜாக்ரதை! (தௌலத் போகிறாள்.)

சக்த: உண்மையாகத்தான் இவள் என்னுடனேயே இறக்கப்போகிறாளா? ஏன் இவள் இறக்கவேண்டும்? ஏன்? ஆனால் பெண்ணின் பிரேமை வெறும் விலாசம் அல்லவா? உல்லாசத்துக்கு மட்டில்தான் உரியவள் என்று நினைத்தேனே! இல்லையா? இது ஏதடா கஷ்டம்! ஒரு பெருங் கலக்கத்தை உண்டுபண்ணிவிட்டாள்.

(கோட்டைக் காவலர் வருகிறார்.)

கோட்டை: சேனை தயாராக நிற்கிறது.

சக்த: சரி புறப்படுவோம்.

* * *

— 4 —

ஓடிந்துவிழும் கோட்டை மதில்மீது வீர உடையில் தௌலத்தும் சக்தஸிம்மரும்.

சக்த: அதோ பார்த்தாயா அவர்கள் படைகளை? எப்படி அணிவகுத்து நிற்கிறது, பார்! நமது சிறு சேனையுடன் நாம் அவர்கள்மீது பாயவேண்டும். சின்னாபின்னம் செய்ய வேண்டும். சாகவேண்டும், தெரியுமா?

தௌலத்: நிச்சயம் வாருங்கள்.

சக்த: நிச்சயம் மரணம், திரும்பிவருகிற ஆசை வேண்டாம்.

தௌலத்: இல்லவே இல்லை. வீரசுவர்க்கம், பதிலோகம்.

சக்த: சரி புறப்படு; ஏன் தயங்குகிறாய்? பயம் வந்துவிட்டதோ?

தௌலத்: பயமா? தாங்கள் இருக்கையில் எனக்கென்ன பயம்? யாவையும் தங்களிடம் அர்ப்பணம் செய்துவிட்டபின் எனக்குப் பயம் ஏது?

சக்த: பின் ஏன் தயக்கம்?

தௌலத்: தயக்கமில்லை. நம் வாழ்நாளின் இறுதியையும் இன்றுடன் அடைந்துவிட்டோம். இவ்வளவு நாட்களில் என்றாவது தாங்கள் என்னை 'என் அன்பே' என்றழைத்ததுண்டா? ஆசை நிரம்ப நோக்கியதுண்டா? மனமார மகிழ்ந்ததுண்டா? என்றாவது ஒருநாள் என்னை வாயார என் செவிகளிக்க அழைப்பீர்கள் என்ற ஆசையால்தான் இவ்வளவு நாட்களும் வாழ்ந்தேன் நாதா! இப்பொழுதாவது சொல்லுங்களேன். (சக்தசிம்மரைத் தன் இரு கைகளாலும் பற்றித் தனக்கு நேரே நிறுத்திக்கொண்டு) இந்த ரணகளத்தில், கோரமிருத்யுவின் கோரப் பற்களின் நடுவே, எதிரிகளின் எக்களிப்புக்கு எதிரே, உயிரும் சாவும் கூடும் சந்தியாவேளையில் ஒரே ஒரு தடவை "என் தௌலத்" என்று என்னை அழையுங்கள். 'என் அன்பே' என்று கூப்பிடுங்கள் பார்ப்போம்.

(யுத்த முழக்கம். பீரங்கிச் சப்தம் கேட்கிறது.)

சக்த: தௌலத்! நான் அப்பொழுதே சொல்லவில்லையா? காதலர் கூடும் பூங்காவனமல்ல இது. கோரமிருத்யுவின் நர்த்தன சாலையம்மா இது.

தௌலத்: இருக்கட்டும். இத்துர்ப்பாக்கியவதியின் இச்சிறு ஆசையைப் பூர்த்தி செய்யக்கூடாதா? என் உற்றார், உறவினர், சுற்றம், சுகம் யாவையும் துறந்து தம்மையே சரணமாக வடைந்த ஓர் எளியவளின் இவ் அசட்டு ஆசையை நிறைவேற்றலாகாதா? தங்களிடமிருந்து ஓர் அன்புச் சொல்லுக்கு

ஏங்கி நிற்கும் என்னை இன்றும் உதாசீனம் தான் செய்யவேண்டுமா? நாதா!

சந்த: என் கண்ணை என்னவோ மறைக்கிறது, என்னவோ செய்கிறதே. வேண்டாம் தௌலத்.

தௌலத்: இல்லை இல்லை, இதுதான் சமயம். சொல்லுங்கள், சொல்லுங்கள். ஓர் அன்புச் சொல், ஓர் அமுதவசனம்.

சந்த: வேண்டாம் தௌலத்! கண் நீர் நிரம்புகிறது, தொண்டை அடைக்கிறது. நா எழுவில்லை.

தௌலத்: (காலில் விழுந்து) ஒரு தடவை சொல்லிப்பாருங்கள், பிறகு தானாக வரும்.

சந்த: ஐயோ! வாயால் சொல்லிவிட்டால் போதுமா? நம்பிவிடுவாயா? என்னை என்னவோ செய்கிறது. வேண்டாம்.

தௌலத்: தங்களை நம்பாமலா என் குலத்தையும் தர்மத்தையும் விட்டுத் தம்முடன் வந்தேன். பொய்யாகத்தான் சொல்லுங்களேன், போதும். ஒரு சொல் சொல்லுங்கள் போதும். இதுவே பற்றுசாகக் கொண்டு வாழ்ந்தேன். சந்தேக ஆக்ஷேபமோ தர்க்க விதர்க்கமோ செய்தறியேன். பெண்ணின் பிரார்த்தனை இது. பெண்ணின் பூரிப்பு இது. இது இன்றி எவ்வாறு சாகத்தான் முடியும்? ஒரே ஒரு வார்த்தை. அதுவே சுவர்க்கம். சொல்லுங்கள், மனமாரச் சொல்லுங்கள்.

சந்த: தௌலத்! இவ்வளவு அழகில் உன்னைக் கண்டதில்லை. ஸ்வர்க்கஜ்யோதி உன் முகத்தில் திகழ்கிறது. மதுரகீதமெனப் புறப்படுகிறது உன் வாக்கு. இவ்வளவு காலமும் இதைக்கண்டும் அறிந்துகொள்ளமுடியாமலே இருந்து விட்டேனே. தன் நலமும் தன் மதிப்பும் என்னைக் குருடனாக்கி வைத்துக்கொண்டிருந்துவிட்டன. கண்டும் காணாத மூர்க்கன் நான். என்னைக்கொண்டு உலகை மதிப்பிட்டுவிட்டேன். யாவரும் தம் நலக்காரர் என்று எண்ணி ஏமாந்துவிட்டேன். தௌலத்! இப்பொழுதுதான் கண் விழித்தது. உன் அபூர்வ அழகும் உயரிய பண்பும் இன்றே கண்டேன். ஏன் இவ்வளவு நாள் தாமதித்துவிட்டாய் தௌலத்!

தௌலத்: இப்பொழுதாவது சொல்லுங்களேன். (மண்டியிட்டு) ஒரு வார்த்தை சொல்லுங்கள், ஒரு தடவை அன்பாக அழையுங்கள்.

சந்த. ஒரு தடவையா, நூறு தடவை ஆயிரம் தடவை அலறுகிறேன். வாயால் மட்டுமல்ல. என் ஒவ்வொரு எலும்பும் ரத்தக்குழாயும் உயிர்க்கும் மூச்சும் உத்கோஷிக்கின்றன. என் அன்பே, என் அருமை தௌலத்! இது காறும் மலையருவி எனப் புரண்டு ஓடவேண்டிய உணர்ச்சி வெள்ளத்தை, தற் பெருமை என்னும் பாறை அமுக்கி அடைத்துக்கொண்டிருந்துவிட்டது. உன் அன்பு அப்பாறையைப் புரட்டிவிட்டது, இன்று மடை திறந்தது வெள்ளத்துக்கு. என் தௌலத்! என் ஹிருதயேச்வரி, என் மமதையைக் களைந்து, சோக்கத்தைப் பெருக்கி, ஹிருதயத்தைத் திறந்துவிட்டு, என்னை ஒரு மனிதனாக இன்றுதான் ஆக்கினாய். ஐயோ, முன்பே இதை நீ எனக்கு அறிவுறுத்தியிருக்கக்கூடாதா, என் அன்பே, என் அன்பை எப்படி நடத்திக் காட்டுவேன். ஆரம்பமானவுடனேயே அஸ்தமித்துவிடவேண்டியதா? ஈசா!

தௌலத்: ஆஹா! இதுவே ஆனந்தம். என் நாதன் என்னை அன்போடு அழைத்துவிட்டார். இனி என்னகுறை எனக்கு? நாதா! எனக்கு ஒரு முத்தம் கொடுப்பீர்களா?

சந்த: (ஆர்வத்தோடு தழுவிக்கொண்டு) தௌலத், தௌலத்!

தௌலத்: போதும் போதும், தமது தழுதழுத்தகுரல் ஒன்றேபோதும். புத்தியின் கரட்டு முரட்டையெல்லாம் கரைத்துக் கொண்டு அன்பு பெருக்கெடுத்துவிட்டது. ஆனந்த வெள்ளத்தில் ஆகாயம்சேர்வோம். வாருங்கள் இதே மோஹத்தில் யுத்தரங்கத்தில் குதிப்போம், வீரசுவர்க்கம் சேருவோம். சுவப்னம் கலைந்துவிடப்போகிறது, வாருங்கள்,

சந்த: வா, வெறிகொண்டு அலறும் பீரங்கிகளை நமது உடலைக்கொண்டு அடக்குவோம்,

(போகிறார்கள்)

5

(வெற்றி முழக்கத்துடன் ராணாப்ரதாப சிம்ஹர் வருகிறார். ராணாப்ரதாபஸிம்ஹகி ஜேய் என்ற வாழ்த்தொலி வானைப்பிளக்கிறது)

ப்ரதாப்: எல்லாம் அம்பாள் அருள்.

ப்ருத்விராஜர்: மஹாபத்கானே கைதியாகி விட்டானே.

கோவிந்த: அவ்வளவு முகலாயப்படையும் எப்படித்தான் மடிந்ததோ?

ப்ரதாப்: சக்தன் ஏன் இன்னும் வரவில்லை?

ப்ருத்வி: அதோ விரைந்து வருகிறாரே—(சக்தசிம்மர் வருகிறார்)

ப்ரதாப: வா, வா, இன்னும் சற்றே தாமதித்து நான் வந்திருந்தால் உன்னை உயிருடன் கண்டிருக்க முடியாது; அன்னை அருள் மறுபடியும் உன்னைக் காணப்பெற்றேன். வா, என்னைத்தழுவிக்கொள் (இருவரும் கட்டிக்கொள்கிறார்கள்)

சக்த: அண்ணா! என்னை என்னவோ காப்பாற்றி விட்டீர்கள்—ஆனால் என் ஸர்வஸ்வமும் போய்விட்டது, உயிரற்ற உடல் தான் இனி நான்.

ப்ரதாப: என்ன? சக்தா, என்ன போய் விட்டது?

சக்த: என் மனைவி, என் தௌலத் உன்னிஸ்ஸா போய்விட்டாள்.

ப்ரதாப: மனைவியா? தௌலத் உன்னிஸ்ஸாவா உனக்கு மனைவி?

சக்த: ஆம், என் மனைவி, என் அருமைத் தௌலத்தைப் பலியிட்டு விட்டேன்.

ப்ரதாப: சக்தா! ஒரு முஸல்மானியப் பெண்ணையா மணந்தனை?

சக்த: ஆம், அண்ணா!

ப்ரதாப: (ஸ்தம்பித்து நிற்கிறார்) ஆ! (தலையில் அடித்துக்கொண்டு) ஐயோ, கஷ்டமே, என்னடா செய்துவிட்டாய்? எதை இழந்தாலும் நம் குல கௌரவத்தை இழக்கக் கூடாதென்றுதானே இவ்வளவு காலமும் அந்யனுக்கு அடிபணியாது விதர்மியுடன் உறவாடாது காடும் மலையுமாகக் காலம் கழித்து வந்தோம், அந்தக் குல கௌரவத்தையும் நீ இப்படி அழித்துவிட வேண்டுமா? (பெருமூச்சுடன்) சக்தா, குலத்துக்கு நீ கொணர்ந்திருக்கும் களங்கத்தை அறிந்தனையா? வேண்டாம். என்ன நேரிடினும் என் ஜாதி அபிமானத்துக்குக் குறைவுவரச் சகிக்கமாட்டேன். போ. நீ என் தம்பியல்ல. இன்றுமுதல் நம் தொடர்பு அற்றுவிட்டது. ராஜகுலத்துக்கும் உனக்கும் ஒருவித சம்பந்தமுமில்லை. உன்னைத் துண்டித்து விட்டேன். மேவாருக்கும் உனக்கும் ஒருவித உறவும் இனி இல்லை. நான் உள்ளவரையில் என் குலம் களங்கமுற விடமாட்டேன்.

ப்ருத்வீ: ராணாஜ், ராணாஜீ! என்ன இது! வேண்டாம்.

ப்ரதாப: ப்ருத்விராஜ்! எனக்குத் தெரிகிறது. நான் என்ன செய்கிறேன் என்பது எனக்குத் தெரிகிறது. போ சக்தா போ. இன்றுடன் அற்றுவிட்டது நம் உறவு.

ப்ருத்விராஜ்: ஐயோ! (கோபாவேசத்தில் தம் கண்களையும் தலையையும் மூடிக்கொண்டு விம்முகிறார்) விதி. விதி!

கோவிந்: ராணா, ராணா!

ப்ரதாப; வேண்டாம் ஒரு வார்த்தையும் வேண்டாம். உயிரைத் திரணமாக மதித்து இவ்வளவு நாளும் நாம் போராடியது எதற்காக? பெண் இழந்தேன் பெண்டாட்டியை இழந்தேன், பிள்ளையையும் பறிகொடுத்தேன். எல்லாம் எதற்காக? என் வம்ச பரிசுத்தி இவ்வாறு அழியவா? இவ்வளவு துயரமும் துன்பமும் ஏற்றது இதற்கா?

ப்த்ருவி: ராணாஜீ! இந்த யுத்தத்தில் நமது வெற்றிக்குக் காரணம் சக்தசிம்மர்தான்.

ப்ரதாப: எனக்குத் தெரியாதா? இந்த யுத்தத்தில்மட்டும் அல்ல; சென்ற சில ஆண்டுகளாகவே அவனது உதவியால்தான் ராஜஸ்தானமே ஒன்றுபட்டு உயர்ந்துவிளங்க வழிதேடிக்கொண்டது. என் வலது கையே அவன். ஆனால் இன்று அழுகிவிட்டது ஆதலால் அறுத்துத்தான் எறியவேண்டும். சக்தா! போ வெளியே.

ப்ருத்வீ: ராஜஸ்தானத்தின் தலைவிதி. (போகிறார்கள்)

சக்த: எல்லோரும் போய்விட்டார்கள், என்னைத் துறந்துவிட்டார்கள்! அண்ணா, நான் தம்மைத் தேவதையாகப் போற்றி வருகிறேன். ஆயினும் இந்த விஷயத்தில் உமது ஆணையைப் புறக்கணித்துத்தான் ஆக வேண்டும். தௌலத் உன்னிஸ்ஸாவைத் துறக்கமாட்டேன், என்னைத் துறந்து விடுங்கள் கவலையில்லை. அவள் என் மனைவி, மந்திரம் படிக்காவிடினும் அக்னி வளர்க்காவிடினும் என் மனைவிதான் அவள். மனமுவந்து ஏற்றுக்கொண்ட மனைவி. இன்றுதான் அவள் பெருமையை அறிந்துகொண்டேன். அவள் மேன்மையை உணர்ந்துகொண்டேன். ராணாஜீ! நீர் தேவதைதான். ஆனால் அவள் தேவி. புருஷர்களுக்கு ஆதர்சம்தாம், ஸ்திரீகளுக்கு ஆதர்சம் என் தௌலத். வீரமாண்பை விளக்கினீர் நீர்,

தந்நலத் துறவெனும் தூயமார்க்தர்சி நீர், ஒப்புஉயர்வற்ற உத்தம புருஷர் நீர். ஆனல் அவளோ அன்பின் ஆதர்சம், அருளின் வடிவம், ஆத்மாவின் ஆனந்தம். ஸ்திரீகளே துச்சம், அல்பம், அஸாரம் என்று எண்ணிநடந்து வந்த எனக்குத் தன்னையே தந்து, தன் பெண்மையின் பெருமையால் தன் ஜாதியையே தூக்கி நிறுத்தினவள். இன்று காலையில்தான் கண்டறிந்தேன் அவள் முகத்தில் தவழும் திவ்யஜ்யோதியை. அனேக பிறவிகளாகச் சேர்த்துக்கொண்டு வந்த புண்ணியத்தின் பொலிவு அது; புனிதத்தின் பாக்யமது; கொடுமையின் கோலாஹலத்துக்கு இடையே, ம்ருத்யுவின் நர்த்தனத்துக்கு நடுவே, அவலட்சணத்தின் அட்டஹாஸத்தின் ஊடே, கண்டேன் கண்டேன் என் கண்மணியை, அன்பின் அருவியை, அமுதை, அவளை இனி எவ்வாறு மறந்துவாழ்வேன். எங்ஙனம் மறுப்பேன். ஏன் துறப்பேன்? என் தௌலத்! இறந்து என் இதயத்திற்குள்ளே உயிர் பெற்ற என் தௌலத்! என்னை ஆட்கொள்.

[துவிஜேந்திரலால் ராய் அவர்களது வங்க நாடகத்தைத் தழுவி எழுதியது.]



பெரீஸ்பிஸ்கட்ஸ்
ஆரோக்கிய உணவு
PERRY & Co., USILAMPATTI.

Agent for Tanjore Dt.

K. ராகவேந்திர ராவ்,
சந்திர விலாஸ்,
கும்பகோணம்.

மனக் கோட்டை

வை. சுப்ரமண்யன்

இரவிலும் பகலிலும் எந்தநேரத்திலும் அமைதி குடிகொண்டு காணப்பட்ட அந்த மலைக்காட்டில் 'கிண் கிண்' ணென்று கருங்கல் உடைபடும் சப்தம் ஒருநாள் கிளம்பியது. அன்றுமுதல் அந்தக் காட்டின் பல பாகங்களிலும் உளிகள் ஏகமாக மலைகளைத் தகர்க்கும் அசாதாரண சப்தமே எதிரொலிக்கத் தொடங்கியது!

மண்ணும் கல்லும் மனிதனின் தேவையாயிருப்பது இந்த நாட்களின் சகாப்தத்தில் சாதாரண விஷயம். ஆனால் ஒருமாறுதல் ஏற்பட்டு மலைக்கற்கள்—வைரம் பாய்ந்த கருங்கற்கள்—சின்ன சின்ன சல்லிகளாக மாறி அப்போதைய முக்கியத் தேவைக்கு இன்றியமையாதவையாக ஆகிவிட்டன. யுத்தம் ஆரம்பித்து ஆங்காங்கு யுத்தமுயற்சிகள் நடந்துகொண்டிருந்த காலம். முக்யமான பாகம் என்று கருதப்பட்ட அந்தப் பிரதேசத்தில் ஒரு விமானக் கூடத்தை உருவாக்க, சர்க்கார் திட்டமிட்டனர்.

அப்போதுதான் மாரியின் வாழ்வில் ஒரு புதிய சகாப்தம் தோன்றியதென்று சொல்லவேண்டும். சங்கராபுரத்திற்கு அடித்த அதிர்ஷ்டத்தைப்போலத் தனக்கும் அதிர்ஷ்டம் வந்துவிட்டதாகக் கருதித்தான் அவன் அன்றுமுதல் உற்சாகத்துடன் காணப்பட்டான். ஆனால், உண்மையில் சங்கராபுரத்திற்கு மாரியின் சம்பந்தப்பட்டவரை 'அதிர்ஷ்டமே' தவிர அன்றைக்குத்தான் அந்த ஊருக்குச் சனியன் பிடித்தது என்று சொல்லவேண்டும். சாதாரணமாகப் புஞ்சை விளைச்சலினாலேயே அந்தப் பிரதேசம் அங்கிருந்த குடிகளின் பிழைப்புக்கு ஈடுகொடுத்துவந்தது. வானம் பார்த்த பூமியே கதியென்றிருந்த அந்த மக்களுக்குச் சோதனைக்காலம் தோன்றிய நாளில்தான் மாரியின் மனம் உற்சாகத்தையும் அடைந்தது.

விமானக் கூடத்திற்காக அந்தக் கிராமத்தின் வடக்குக் கோடியை ஒட்டிச் சில அதிகாரிகள் இடம் பார்த்தனர். அவர்கள் வகுத்த எல்லையில் அநேகமாகக் கிராமத்து மக்களின் ஜீவாதாரமாயிருந்த பெரும்பாலான புஞ்சை நிலங்களும் உள்ளடங்கிவிட்டன. மாசூல் காலத்திலேயே அதிகாரிகள் அந்த இடத்தை ஆக்ரமிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டபடியால் வேறு வகையின்றி ஊர்வாசிகள் அவரவர்களுக்குச் சர்க்காரால் கொடுக்கப்பட்ட மாசூல் மதிப்புப் பணத்தை மட்டும் வாங்கிக்கொண்டு, திருப்தியுற வேண்டியதாயிற்று. பின் வேறு என்ன செய்யக்கூடும்? எது செய்யத் துணிந்தாலும் அரசாங்கத்துக்கு விரோதமாய்க் குற்றம் செய்ததாகிவிடுமே!

அதன் பிறகு பணக்காரன்—ஏழை என்ற வித்தியாசமின்றி வயிற்றுப் பிழைப்புக்கு ஊரார்கள் எல்லாருமே கூலி வேலைக்கு ஆயத்தமாகிவிட்டனர். விமானக் கூட வேலைகள் தொடங்கியதும் சர்க்காரில் இவர்களுக்கு அபரிமிதமான வேலைகள் கொடுக்கவாரம்பித்தனர். பணத்தை நிரம்பக் கொடுப்பதன்மூலம் ஏழைகளிடம் நல்ல உழைப்பைப் பிரதியாகப் பெற்றனர் அவர்கள்.

மாரியின் வாழ்வில் கல் உடைப்பது புது அனுபவமாயிருந்ததால் எத்தகைய கடினமான வேலை என்பதையும் பொருட்படுத்தாமல் அதை அலக்ஷியமாக மதித்துச் செய்தான். பெரிய கருங்கல்லின் ஒவ்வொரு பாகத்திலும் அவன் உளி 'டண் டண்' என்று விழும்போதெல்லாம்— ஒவ்வொரு சல்லியாகப் பெயர்ந்து அப்பால் தெறித்து விழும்போதெல்லாம்—அவன் மனம் சந்தோஷத்தையடையும். அவ்வளவும் பணம்! மதிப்பேயற்ற பாறாங்கல் சல்லிகளாகப் போனபின் அதற்கு எவ்வளவு மதிப்பு? ஏற்கனவேயே அன்றாட வாழ்விற்கு மிகவும் சிரமப்பட்டு வந்த மாரியின் முன்னே அதிகாரிகள் தோன்றி, விமானக் கூடத்திற்குத் திட்டமிட்ட அன்று அவன் ஏதோ ஒரு புதிய அனுபவத்தை அடைந்தான். வீடும்—வெளியும், நிலமும் நீச்சுமின்றித் தனிமனிதனாய்த் திரிந்த மாரிக்கு அன்றாடத்தேவையான உணவுப் பிரச்னை தீர்க்கமுடியாத பிரச்னையாய் இருந்தது. பக்கத்திலிருந்த நகரத்திற்குச் சென்று கூலிவேலை செய்தால் அன்றன்றைக்கும் இரண்டுகாசு சம்பாதித்துக்கொண்டு வந்துவிட முடியும். அதையே நிரந்தரமாகக்கொண்டால் அவன் வாழ்க்கையும் ஒரு திட்டத்தில் அமைந்துவிடும். ஆனால், அதை விரும்பவில்லை அவன் மனம்.

நாள் பூராவும் உடம்பை வருத்தி வேலைசெய்துவிட்டு, கடைசியில் பெறும் கூலியையும்—இந்த ரீதியிலேயே அமையும் வாழ்க்கையையும் அறவே வெறுத்தான் அவன். அதைத் தவிர அவன் உள்ளத்தில் தோன்றிய அடக்கமுடியாத ஆவல் மற்றொன்று. அவன் தன் வாழ்க்கையைச் சீர்படுத்திக் கொள்ள நினைத்தான். கிராமத்தில் சுற்றித் திரிந்து வீண்பொழுது போக்கிக்கொண்டிருந்த காலம் ஒன்றுண்டு; அப்போது அவன் மனதில்பதியும்படி போதித்துக் "குடியும் குடித்தனத்துடனும் நீ வாழ வேணும்னு நினைச்சா நாலு காசு சேர்த்துக் கையிலெ வைச்சுக்க வேணும் தம்பி" என்று நாட்டாண்மைக்காரர் கூறியதைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு அந்த நாலுகாசு சேர்க்கும் எண்ணத்திலேயே நாட்டம் கொண்டான். கூலிவேலையில் அவன் அடைவது எவ்வளவு? மீதம்பிடிப்பது எவ்வளவு? வாழ்நாளிலேயே ஈடேருத விஷயம் என்று எண்ணினான்.

இன்னும் அவனுடைய வாழ்வில் ஒரு முக்கியமான—மகத்தான—சம்பவம் நடந்தேற வேண்டும். அவன் குறியில் எத்தனையோ வருஷங்களுக்குமுன் தென்பட்ட ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ள அவன் விரும்பியபோது அவனிடம் எவ்வளவு பணமிருக்கிறது என்று ஒரு கேள்வி எழுந்து, அப்போதைக்கு ஒன்றும் நடக்காதவாறு செய்து விட்டது. கூலிவேலையில் பணம் மிச்சப்படுத்தி கல்யாணம் முடிப்பது என்பது நடக்காமல் போய் விடக்கூடிய விஷயம்; ஆகவே, வேறு எந்த வகையிலாவது நிறையப் பணம் சம்பாதிக்க வேண்டும். இதுவே அவன் குறிக்கோள்.

சங்கராபுரத்து வாசிகளின் மனம் அந்த அதிகாரிகளைச் சபித்துக் கொண்டிருந்த தினத்தில்தான் மாரி அவர்களை வாயார வாழ்த்திக் கொண்டு, கல் உடைப்பதற்காக உளியைக் கையில் ஏந்தினன்.

ஊருக்கு ஏழெட்டுமைல் தூரத்தில் அமைந்திருந்தது சங்கராபுரம் மலைக்காடு. அங்கே விசேஷமாக ஒன்றும் இல்லையெனினும், அந்த இரண்டு மைல் விஸ்திரணமும் சின்னதும் பெரிதுமாய்க் கருங்கல் குன்றுகள் வியாபித்து நின்றன. வேறு மனிததேவைக்கு முக்கியமானவை யொன்றும் அந்தக் காட்டில் கிடையாது. இதுவரை அக்காடு அவ்வளவு சமீபத்திலிருந்தும் ஊர்ஜனங்கள் அந்தப் பக்கமே போய்ப் பார்த்ததில்லை. எனவே செப்பனிட்ட பாதைகளோ, வண்டிச் சோலைகளோ காட்டிற்குள் ஏற்பட[illegible]ல்லை.

ஆனல், முதன் முதலாக இரண்டு கூட்டாளிகளுடன் மாரி ஒருதினம் காட்டிற்குள் சென்று, அவனுக்கு வாகாகப்பட்ட ஒரு சிறு குன்றில் துவாரம் இட்டு வெடிமருந்தைக் கிடித்து அதிர்வெடியைக் கிளப்பினன். ஒன்றிரண்டு வெடிச்சத்தத்திற்குப் பின் தொடர்ந்து வந்த பல வெடிச்சத்தங்களும் சங்கராபுரம் ஜனங்கள் அத்தனை பேரையும் காட்டிற்குள் கொண்டு வந்து விட்டன. அவ்வளவுதான். அன்று முதல் கும்பல் கும்பலாகச் சேர்ந்து கொண்டு ஆண்களும் பெண்களும் வாலிபர்களும் கிழவர்களும் சிறுவர்களுமாகக் கற்களைப் பெயர்த்து, சல்லி சல்லியாகச் சேர்த்து, குவித்துக் கொண்டிருந்தனர்.

கற்குன்றுகள் நின்றவிடங்களில் சிறிது காலத்திற்குள்ளேயே சிறு சிறு பள்ளங்கள் ஏற்பட்டு ஜலம் தேங்கி நிற்கவாரம்பித்தது. பக்கங்களில் குவியல் குவியலாகச் சல்லிகள் சேர்ந்துவிட்டன. ஏதோ ஒரு அளவுள்ள பெட்டியைப் போட்டு அளந்து தனித்தனி முட்டுக்களாகக் கட்டியிருந்தனர். முட்டுக்களின் பரிமாணம் அதிகம் ஆக ஆக அந்தந்தக் கற்குவியல்களையும் சேர்த்த ஜனங்களின் மனதில் அத்தனைக்கத்தனை நம்பிக்கை வளரவாரம்பித்தது. காரணம் அவ்வளவும் பணம்!

விமானக்கூட வேலைகள் பல வகையிலும் துரிதமாக முன்னேறிக்கொண்டு வந்த போதுதான் சங்கராபுரம் காட்டுக்குள் செல்லுமாறு பாதைகள் ஆங்காங்குச் செப்பனிடப்பட்டு வந்தன. பெரிய பெரிய மோட்டார் வண்டிகளும் லாரிகளும் காட்டுக்குள் வரத்தக்க வகையில் சோலைகள் அமையவாரம்பித்தன. சல்லிமேடுகள் சேரச் சேர லாரிகள் வந்த வண்ணமும் அவைகளை ஏற்றிச்சென்ற வண்ணமுமிருந்தன.

மாரியின் மனதில் திடமான ஒரு நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. ஒரு வைராக்யத்துடனேதான் கல் உடைத்துவந்தான். உரம் பாய்ந்திருந்த அவனுடைய கைகள் உளியை அநாயாசமாக ஏந்தி, வைரம் பாய்ந்த கல்லையும் சிதற வைத்துக்கொண்டிருந்தன. அவ்வப்போது சேர்ந்த கற்களை அளந்து விற்றுவிட விரும்பவில்லை அவன். நிரம்பிய அளவுக்குச் சேர்த்து ஒரேயடியாக விற்றுவிட வேண்டுமென்றிருந்தது அவனுக்கு.

மாரியின் கூட்டாளிகள் அவனிடம்கூலிக்குத்தான் வேலை செய்தனர். இரண்டு

ஆட்களுடன் மாரி ஒருவன் ஆக மூன்றுபேர்களுமாக ஒரு தனிக் கும்பலாக இருந்து கொண்டு மற்றவர்களுடன் ஒத்துழைக்காமல் இருந்து வந்தனர் இவர்கள். கல் உடைப்பதில் அனுபவம் சிறிது வாய்ந்தவர் மற்ற இருவரும். அவர்களுக்கு ஒரு நாளைக்கு இருவருக்குமாக ஐந்து ரூபாய் சம்பளம். ஆனால் அன்றன்றைக்கும் கைமேல் கூலி கிடையாது; கடைசியில்தான் சேர்ந்தாற்போல் கொடுப்பதென்று பேசியிருந்தான் மாரி.

தங்களுடன் மாரி ஒத்துழைக்காத காரணமும் ஒரே நோக்குடன் தனிக் கட்சியாய் நின்ற மாரியின் ஆட்களும் மாரியும் ஏராளமான முட்டுக்கள் சேர்த்து வைத்திருந்ததும் ஒரு பொருமை உணர்ச்சியைத் தூண்டியது மற்ற ஜனங்களுக்கு. அத்தனை நிலங்களும் மாசூல்களும் போய்விட்டதற்குத் தங்கள் பக்கம் சிறிதும் அனுதாபம் காட்டாத மாரியை ஆரம்பமுதலே வெறுத்து வந்தனர் அவர்கள்.

அவன் முயற்சியில் அவ்வளவு கற்களைக் குவித்து வைத்திருந்ததைப் பார்த்த அவர்கள் மனதில் ஒருவித பொருமை உணர்ச்சிதான் தோன்றியது. அவ்வளவு கற்களுக்கும் பண மதிப்பும் போட்டுப் பார்த்தபோது அவன் அவ்வளவு பணத்தையடைவது அவர்களுக்கு நியாய விரோதமான செய்கை எனப் பட்டதுபோலும். மாரியின் கூட்டாளிகள் இருவரும் வேலை முடிந்து மாலையில் வீட்டுக்குத் திரும்பும் போது சிலர் அவர்களுடன் கலந்து கொண்டு சம்பாஷிக்க விரும்பினர். அவர்களுடைய ஒத்துழைப்பு மாரிக்கு ஏற்பட்டுள்ளதைக் குறித்து அவர்கள் வெறுப்பு உணர்ச்சியடைந்து எப்படியாவது அவர்களுடைய சேர்க்கையைக் களைந்துவிட விரும்பினர். நாள் பூராவும் கல் உடைக்கும்பொழுதெல்லாம் அவர்கள் சம்பாஷணையில் இடம்பெற்ற முக்யமான விஷயம் மாரியைப் பற்றியதுதான். ஊர் ஜனங்கள் அத்தனைபேரையும் எதிர்த்து நின்று தனிக்கட்சியாயிருப்பது அவர்கள் எல்லோர் மனதிலும் ஆத்திரத்தைத் தூண்டியது. எப்போதுமே குதூகலத்துடன் மற்ற இருவர்களுடன் சம்பாஷித்துக் கொண்டு உறுதியுடனும் ஒரே நோக்கமுடனும் அவன் தன் வேலையைச் சாதித்துக் கொண்டிருந்ததைக் கண்டு அவர்கள் மன

நான்கோ பிரிண்ட் இங்கி

•

இந்தியா, சென்னை, பீஹார், மைசூர், திருவாங்கூர் சர்க்கார்களாலும், சென்னையிலும், வெளியூர்களிலும் உள்ள பிரிண்டர்களாலும் மிகவும் உபயோகிக்கப்படுகிறது.

•

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:

S. நாராயணன் & கம்பெனி,

1. கிண்டி ரோடு, அடையாறு, சென்னை.

தில் ஒரு விபரீத எண்ணமும் தோன்றாமல் இல்லை. அவனுக்கு அந்த இன்பம் அப்படியே நீடித்து இருப்பதை அவர்கள் விரும்பவில்லை, என்றைக்காவது ஒரு நாள் இவர்களைத் தேடிக்கொண்டு இவர்களின் துணையைக் கோரி அவன் வரும் நாளை ஆர்வத்துடன் எதிர்நோக்கியிருந்தனர். அத்தகைய காலம்கூட மாரிக்கு வரத்தான் செய்தது. ஆனால், அவன் அப்போதும் தனி மனிதனாய் நின்றுவிட்டானே தவிர ஊரார் ஒருவரிடமும் சென்று அவர்கள் எதிர்பார்த்தபடி அவர்கள் ஆதரவை நாடவில்லை.

மாரியின் கூட்டாளிகளில் ஒருவனுடன் ஒரு தினம் கிராமத்து முக்யப் பிரமுகனாய்க் கருதப்பட்ட ஒருவன் பேசிக்கொண்டே ஊரை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான். மாரியின் அபிமானத்திற்குப் பாத்திரமாகி அவனுக்காக உண்மையுடன் உழைத்து வந்த கூட்டாளியின் மனதை மாற்றி வரும் முயற்சியில் இறங்கியிருந்தான் அந்தக்கிராமத்து ஆள் அன்று. வீடுபோய்ச் சேரும் வரை அவனுடைய உபதேச மொழிகளைக் கேட்டுவிட்டு ஏதேதோ எண்ணிக்கொண்டே ஒரு முடிவுக்கு வந்தான் மாரியின் கூட்டாளி.

மறுநாள் முதல் அவ்வளவு சிரத்தையுடன் மாரியின் கூட்டாளிகள் வேலைசெய்தனர் என்று சொல்லமுடியாது. அயர்ச்சி என்று அவர்கள் காரணம் கூறியது மாரிக்கு வாஸ்தவமாகப்பட்டதே ஒழிய அவர்கள் மனதில் திடீர் மாறுதல் ஏற்பட்டுவிட்டதை உணரக்கூடவில்லை மாரியால்,

விமானக்கூட வேலைகளில் சங்கராபுரத்து மக்கள் எல்லோருமே ஈடுபாடுகொண்டிருந்தனர் என்று சொல்லவேண்டும். பல வகைகளிலும் வேலைசெய்து பணம் சம்பாதிப்பதில் குறியாயிருந்தனர். மாரியைத் தவிர அநேகமாக எல்லோருமே நல்ல பணம் சம்பாதித்துவிட்டனர். வேலைகள் ஆரம்பித்து மூன்றுமாத காலம் ஆகியும் மாரி ஒரு பைசாகூட தான் உடைத்த கல்லின்மூலம் பணம் பெறாமல் வேறு வகைகளில் சாப்பாட்டிற்குமட்டும் பார்த்துக்கொண்டான் எப்படியோ.

சிறிது நாட்களாய்த் தன் கூட்டாளிகள் சிரத்தையுடன் வேலை செய்யாததைக் கவனித்துக்கொண்டுதான் வந்தான் மாரி. இது விஷயமாய் அவர்களைத் தானாக ஒன்றும் கேட்க அவன் விரும்பவில்லை. அவர்களாகக் கேட்கக் கூடியவற்றை ஒருவாறு மனதில் சித்திரித்துக்கொண்டு அவர்களுக்குப் பதில் சொல்வதற்கும் தயாராயிருந்தான்.

நாட்கள் சென்று கொண்டிருந்தன. மாரியின் சந்தோஷமான நாட்களுக்கு முற்றுப் புள்ளியாய் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அன்று கிராமத்து ஜனங்கள் விரும்பியபடி அவன் அடைந்து வந்த இன்பம் அதற்குமேல் நீடிக்கவில்லை. அவன் மேற்கொண்டிருந்த தொழில் எத்தகைய தொழில் என்று உணராமலே அவன் தன் காரியங்களில் சிரத்தைக் குறைவுடனே ஈடுபட்டிருந்தான். அதன் விளைவு?

அந்த விளைவைத்தான் விரும்பினர் மற்ற ஜனங்கள். அத்துடனில்லாமல் அவன் தங்களிடம் துணைகோரி வருவதையும் எதிர்பார்த்தனர்! அது வீணாயிற்று.

விமானக் கூடத்து வேலைகள் முடிவுறும் தறுவாயில் இருந்தன. இன்னும் சில தினங்களே பாக்கி. மாரியின் சொந்த முயற்சியில் தயாரான எண்பது யூனிட்—கிட்டத்தட்ட ஆயிரரூபாய் மதிப்பான—கருங்கல் சல்லி குவிந்திருந்தது. அவ்வளவும் இன்னும் சில தினங்களுக்குள்ளாக விற்பனையாகிவிட வேண்டும். விற்பனையாகி விடும். மாரியின் வாழ்வில் பெறமுடியாத பேற்றை அவன் பெற முடியும். பாடுபட்டு உழைத்த பணத்தைக் கொண்டு என்னென்ன செய்யலாம்? முக்கியமாக அவன் தன் வாழ்வை ஒரு கல்யாணம் செய்து கொண்டு விடுவதன் மூலம் சீர்படுத்திக் கொண்டு விடலாம். முன்பு கல்யாணத்திற்குத் தேவையாயிருந்த பணம் இப்போது கைக்கு வந்த மாதிரிதான். பிறகு?

மனக்கோட்டைகள் மலைக்குன்றுகள் போல் உயர்ந்தன மாரியின் மனதில். இன்னும் சிறிது தேவையாயிருந்த சிலயூனிட்டுகளுக்கு வேண்டியிருந்த சல்லிக்காக ஒரு புதுக்கல்லில் துவாரம்போட்டான் மாரி. மருந்தைப்போட்டுக் கெட்டித்து, பிறகு பந்தத்தைக் கொண்டுபோய் மருந்தின்மீது வைத்துவிட்டு இப்பால் ஓடிவந்தான். ஒரு நிமிஷம் இரண்டு நிமிஷம்சென்றது; வெடிச்சப்தத்தைக் காணோம். மறுபடியும் பந்தத்துடன் சென்று மாரி, ஒருவேளை துவாரமிட்டது போதவில்லையோவென்ற சிறிது சந்தேகத்துடன் கல்லின் அருகில் முகத்தைக் கொண்டுபோனான். அவ்வளவுதான் எதிர்பாராதபடி 'திடீரென' ஒரு வெடி கிளம்பி அவனை அப்பால் தூக்கியெறிந்தது. உணர்விழந்து போன மாரியைச் சுற்றிக்கூடினர் ஜனங்கள். ஒரே ஆர

வாரம். அவன் கண்ணுக்கு ஆபத்து வந்து விட்டது.

மாரியின் நிலை தேறிக்கொண்டு வந்தது. பக்கத்திலிருந்த ஒரு நகரத்தில் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்தான் மாரி. அவனுடைய நினைவில்-பிரக்ஞை வந்தபின் அவனுக்குண்டான முதல் நினைவில்-தோன்றிய விஷயம், அவன் குவித்து வைத்திருந்த ஜல்லிகளைப்பற்றியதுதான். தான் ஏற்பாடு செய்திருந்தபடி முதலியார் கண்ட்ராக்டரிடம் அவ்வளவு நாட்களுக்குள் சல்லி மேடைகளை அளந்து விட்டுப் பணத்தைநீ கையில் வாங்கியிருக்கவேண்டும். பாழும் சோதனை இப்படி வந்தது. இப்படி எண்ணிக் கொண்டே ஆஸ்பத்திரியில் காலத்தைக் கழித்து வந்தான்.

அவன் சிந்தனையைத் தாண்டிய ஒரு சம்பாஷணையை உற்றுக் கவனித்தான் அவன். அதற்கு மறுநாள் அவனை வீட்டுக்கனுப்புவதற்கிருந்தனர் ஆஸ்பத்திரியில். பக்கத்து வார்டில் வந்திருந்த ஓர் அதிகாரியின் சம்பாஷணைதான் அவன் கவனத்தைக் கவர்ந்தது. மற்றொரு குரல் முதலியார் கண்ட்ராக்டருடையது போன்றிருந்தது. உற்றுக் கவனித்தான்.

வெகுநேரம் அவர்கள் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டபின் அவன் மனதில் வேரூன்றிய சொற்கள் இவைதான். "...எனவே, இன்னும் ஒரு வாரத்திற்குள் சல்லி தயார்பண்ணி நீங்கள் வேலையை முடித்துவிடுங்கள். மற்றதை நான் கவனித்துக்கொள்கிறேன்." என்று அதிகாரி சொன்னபோது உடனே முதலியாரின் வாயிலிருந்து அதெல்லாம் தயாராயிடுத்துங்க. கிட்டதட்ட நூறு யூனிட் சல்லி இப்போதான் வாங்கி வைத்திருக்கிறேன். நீங்க ஆஸ்பத்திரிலேருந்து வந்து சேருங்க சௌக்கியமாகி. பின்னாடி பாத்துக்குவோம்" என்ற சொற்களைக் கேட்டவுடன் மாரிக்குத் திக்கென்றது.

அவன் மனம் பறந்தது. அவன் வேலைத் தளத்தில் சென்று அலைந்தது. அப்படியே இருந்த அவன் சல்லி மேடைகளைக்கண்டு ஆனந்தமடைந்தது. அவ்வளவையும் விற்று விடவேண்டும் நாளை என்று நினைத்தது அவன் மனம்.

ஆனால்—

உண்மையாக மறுதினம் அவன் வேலைத் தளத்தையடைந்தபோது உற்சாகத்துடன் நிரம்பியிருந்த அவன் மனதில் சொரேலென்றது. காரணம், அவன் கட்டிவைத்திருந்த சல்லி மேடைகள் நின்ற விடத்தில் ஜலம் தேங்கிக்கிடந்தது. ஒரு எண்ணிக்கை சல்லிகூட அவன் திருஷ்டியில் படவில்லை. அவ்வளவும் எங்கே போய்விட்டது? அதே சமயம் அவன் பின்னாலிருந்து கேட்ட குரலினின்றும், "மாரி; உன்னுடைய கூட்டாளிகள் செய்த வேலை. நீ அவங்களுக்கு கூலி கொடுக்கவேயில்லையாம். அதனால் சல்லி மேடை பூராவையும் சர்க்காருக்கு அளந்து விட்டுவிட்டானுங்க பாதி விலைக்கு. ராவுக்கு ராவே காரியத்தை நடத்திவிட்டு ஆளுங்களும் ஊரைவிட்டுப் போய்ட்டானுங்க. அநியாயம். அநியாயம்" என்ற வார்த்தைகள் நாராசம் மாதிரி விழுந்தன.

மாரிக்கு ஒன்றுமே புரியவில்லை. கட்டிக் கட்டிக் காத்திருந்த கோட்டையெல்லாம் உளியால் தெறித்து ஓடும் சல்லித் தூள்கள் மாதிரி, சிதறிப் போய்விட்டதை நினைத்து உருகினான். உற்சாகத்துடன் உழைத்த அவனுடைய உழைப்பு, கடைசியில் இப்படி வாழ்க்கையில் நிராசையை உண்டுபண்ணியதை எண்ணி, கல்லுடன் கல்லாய்ச்சமைந்து நின்றான்.

காவேரி புதிய சந்தா விகிதம்

சந்தா விபரம்	உள்நாடு	ஸிலோன் பர்மா & மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு
ஒரு வருஷம்	6 0 0	7 8 0
அரை வருஷம்	3 0 0	3 12 0
தனிப்பிரதி ஒன்றுக்கு	0 8 0	0 10 0

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாஸிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர்,
பெஸன்ட் ரோடு, கும்பகோணம்.

கப்பலோட்டும் பம்பரம்

நா. கி. நாகராசன்

நாம் சிறுவயதில் விளையாடிய பல விளையாட்டுக்களைப் பெரியவர்கள் ஆனபின் அறவே மறந்துவிடுகிறோம். பம்பரம் சுழலுவதைக் கண்டு, அது கீழே விழாமல் எவ்வாறு சுழலுகிறது? என்பதை நாம் எண்ணப் புகுந்தால் மிகச் சிக்கலான பூதநூற்றுறை ஆராய்ச்சியை அடைவோம். ஏனெனில் பம்பரத்தின் சுழற்சியை எளிதில் விளங்காத கணிதநூல் முறைகளால்தான் விளக்க முடியும். இதன் தத்துவத்தைக் கையாண்டு பலவாறு பயன்படும் நுண்ணிய கருவியொன்று அமைக்கப்படுகிறது. இதன் வேலையை அறிதல் எளிதே. மிக வேகமாகவும், சீராகவும் சுழலும் பம்பரம் போன்ற இக்கருவி இக்காலத்தில் பல எந்திரங்களின் கண் எனுமாறு முதன்மையான உறுப்பாகும். இதைச் சுழல் கருவி (Gyroscope) எனலாம்.

பம்பரம் சுழலும்போது அதன்மேல் தொழிற்படும் பல சத்திகளின் விளைவாய் அது கீழே விழாது நேர்குத்தாக நிற்கிறது. அப்போது அதைச் சிறிது பக்கவாட்டில் தள்ளமுயன்றாலும் அது சாய்வதில்லை. அப்போதும் அதன் இருசு நேர்குத்தாகவேயிருக்கும். சுழலும் பொருள்கள் எல்லாம் இவ்வாறு தம் இருசு மாறுவதை எதிர்க்கின்றன என்னும் உண்மை இதிலிருந்து தெளிவாகும். சுழலும் பம்பரத்தைக் கையிலெடுத்துக்கொண்டு அதை மேலுங் கீழுமாகவோ, பக்கங்களிலோ அசைத்தல் எளிதாயிருக்கும். ஆனால் கையை ஒரு பக்கமாகச் சாய்த்து அதன் இருசின் திசையை மாற்ற முயன்றால்,கையில், ஓர் எதிரான சத்தி தொழிற்படுவது தெரியும். அப்போதும் பம்பரம் நேராகவே நின்று சுழலும்.

இதைத் தவிர நாம் இன்னுமொரு உண்மையும் பம்பரத்தினால் அறியலாம். அதாவது பம்பரத்தின் எதிர்ப்பையும் மீறி, அதை ஒரு பக்கமாகச் சாய்க்கமுயன்றால் அப்போதும் அது அப்பக்கத்தில் சாயாது அதற்கு நேர்குத்தான திசையில் சாய்வது தெரியும். இவ்வாறு சாய்ந்து அது மேலும் கீழும் அசைந்து சுழல்கிறது, அதாவது அதன் இருசு ஒரே திசையில் இல்லாது வட்டமாகச் சுற்றுகிறது. இதையே 'இருசுச் சுழற்சி' (Precersion) என்பர். பம்பரத்தை மேற்கு நோக்கித் தள்ள, அதன் இருசு அது சுழலும் திசைக்கேற்பத் தெற்கிலோ வடக்கிலோ சாய்கிறது.

சுழலும் பொருள்களை நன்றாக ஆராயு முன்பே மேற்கூறிய நிகழ்ச்சி தெரிந்திருந்தது. நம் புவி கதிரவனைச் சுற்றிவருவது அதன்மீது தொழிற்படும் கவர்ச்சியினால் என்பது எல்லோரும் அறிந்ததே. இவ்வாறு சுழலும் புவிக்கோளத்தின் இருசு ஒரே திசையை நோக்கியிருக்கும். இதனால் தான் பருவங்கள் ஆண்டுதோறும் ஒரே சமயத்தில் நிகழ்கின்றன. ஆயினும் புவியின்மீது தொழிற்படும் வேறு சத்திகள் அதன் இருசின் திசையை மாற்ற முயல்கின்றன. அதனால் இருசு சாய்ந்து சுழல்கிறது. இதன் விளைவு நமக்குப் புலப்படாவிடினும், பல நூற்றாண்டுகளில், பருவங்களின் வருகையை அறிந்தால் அவை வருங்காலம் மாறுவது தெளிவாகும். ஆண்டில் இருமுறை இரவும் பகலும் ஒரே அளவுடையதாக இருக்கும். இவை சம இராப்பகல்கள் (Equinoxes) எனப்படும். தற்போது இந்நாட்கள் மார்ச்சு 20, செப்டம்பர் 23 ஆனால் பல ஆண்டுகளின்பின் இவற்றின் தேதி மாறியிருக்கும். இது புவியின் இருசு சுழற்சியின் விளைவு. புவியின் இருசு சாய்ந்து ஒருமுறை சுழல 26,000 ஆண்டுகளாகும். எப்பொருளும் சுழலும்போது மேற்கூறிய இரு தன்மைகளையும் கொண்டிருக்கும். சுழல் கருவிகள் இவற்றையே அடிப்படையாகக் கொண்டவை.

முதன்முதல் புவியின் சுழற்சியைக் காட்டச் சுழல் கருவி பயன்பட்டது. 1852ஆம் ஆண்டில் பிரான்சில் போக்கோ

உங்கள் தினசரி உபயோகத்திற்கு

பனிமலைத் தென்றல் போன்று குளிர்ச்சி வாய்ந்ததும், அரிய மலர்களின் நறுமணம் போன்று களைப்பாற்றுவதுமான டாடா ஓடிகொலோன் உங்கள் தினசரி உபயோகத்திற்காயினும் சரி, ஜுரத்தால் வேகும் நெற்றித் தடத்தை குளிரப் பண்ணுவதற்காயினும் சரி உகந்ததுதான்.

எப்பொழுதும் ஒரு பாட்டில் வீட்டில் கையோடு காவலாய் வைத்திருங்கள்.

டாம்கோ விற்பனை இலாகா 19A, வாணியர் தெரு, தபால் பெட்டி நெ. 31, மதராஸ்.

(Foucault) என்னும் விஞ்ஞானி புவியின் சுழற்சியைக் காட்ட மிக உயரமான ஓர் கோபுரத்திலிருந்து நீளமான கம்பியொன்றினால் ஓர் எடையைக் கட்டி, அது பல மணி நேரம் ஊசலாடுமாறு செய்தார். அது ஊசலாடும் தளத்தை முதன்முதல் குறித்துக்கொண்டார். நெடுநேரத்திற்குப்பின், புவியின் சுழற்சியினால் எடை ஊசலாடும் தளம் மாறியிருந்ததைக் காட்டி அங்குக்குழுமியிருந்த மக்களுக்குப் புவியின் சுழற்சியைத் தெளிவாக்கினார். அவர் இத்துடன் அமையாது ஒரு சுழல் கருவியினுதவியாலும் இதைக் காட்டினார். ஒரு சிறு சக்கரம் முதலில் நேர்குத்தான அச்சில் சுழலுமாறு அவர் அமைத்தார். புவி சுழலும்போது சுழல் கருவியைத் தன்னுடன் கொண்டு செல்கிறது. ஆனால் வானவெளியில் ஒரு திசையை நோக்கியிருந்த சுழல் கருவியின் இருசு அதே திசையைக் கொண்டிருக்கும். ஆகையால் சிறிது நேரத்திற்குள் சுழல் கருவி ஒரு பக்கமாகச் சாயும். இவ்வாறு முதலில் நேர்குத்தாயிருந்த இருசு ஒரு பக்கமாகச் சாய்வதை அவர் காட்டினார். நேர்குத்தாக அமைக்கப்பட்ட ஒரு சுழல் கருவியின் இருசு ஆறுமணி நேரத்திற்குப்பின் படுகை மட்டத்திற்கு வரும்.

இவ்வுண்மையைப் பயன்படுத்தி மிகத் திருத்தமான கடிகாரமொன்று செய்யலாம். இது சுழல் கடிகாரம் எனப்படும். இதில் வேகமாகச் சுழலும் ஒரு சக்கரத்தின் இருசு ஒரு வளையத்தில் பொருத்தப்படும். வளையம் தன் வயமாக அசையுமாறு இன்னொரு வளையத்தில் பொருத்தப்படும். இது அசையாத ஒரு சட்டத்தில் இணைக்கப்பட்டிருக்கும். சக்கரம் மின்சாரத்தினுதவியால் தொடர்ந்து சுழன்று கொண்டிருந்தால் நேர்குத்தாகவிருந்த அதன் இருசு, சீராகப் படுகை மட்டத்திற்குச் சாய்வதைக் காட்டும் ஒரு முள்ளின் அசைவினால் நேரத்தை அறியக் கூடும். ஆயினும் இதன் இருசு பொருத்தப்பட்டுள்ள இடங்களின் உரைப்பினால் (Friction) இது சரியாக வேலை செய்வதில்லை.

கடலிற் செல்லும் கப்பலின் அசைவினால் பல தொல்லைகள் விளையக்கூடும். இதைக் குறைக்கச் சுழல் கருவி பயன்படுகிறது. கப்பலின் கீழ்த்தளத்தில் ஒரு சிறு சுழல் கருவி அமைக்கப்படும். கப்பல் ஒரு பக்கமாகச் சாய்ந்தால், சுழல் கருவியின் இருசும் இதற்கேற்ப நேர்குத்தாய்ச் சாய்ந்து, இத்துடன் பிணைக்கப்பட்டிருக்கும் மின்சார விசையொன்றைத் திருப்பி, மற்றொரு பெரிய சுழல் கருவியை இயக்குகிறது. இது சுழலத் தொடங்கிக் கப்பலின் சாய்வை எதிர்த்து அதை நிலைப்படுத்துகிறது. கப்பல் பழைய நிலையையடைந்ததும் சிறிய சுழல்கருவி, மின்சாரத் தடைகளைப் போட்டுப் பெரிய சுழல் கருவியை நிறுத்தும். இவ்வாறு கப்பல் ஆடும்போதெல்லாம் சுழல் கருவிகள் இதை நிலைப்படுத்துகின்றன. இவ்வமைப்புச் சிலவகைச் சண்டைக் கப்பல்களில் மட்டும் வழங்குகிறது.

ஆனால் சுழல் கருவி தற்காலத்தில் அதிகமாகப் பயன்படுவது சுழல் திசைகாட்டி (Gyro-Compass) யாகத்தான். ஒரு சுழல் கருவியின் இருசு துருவ நட்சத்திரத்தை நோக்கியிருக்குமாறு அமைக்கப்பட்டு அது சுழலும்போது, எவ்வளவு அசைந்தாலும் அதன் இருசுமட்டும் திசை மாறாமல் இருக்கும். இதைப் பயன்படுத்தி அதை ஒரு திசைகாட்டியாக அமைக்கலாம். தற்காலத்தில் கப்பலகளிலும், விமானங்களிலும் இது பயன்படுகிறது. பழங்காலத்தில் வழங்கிய காந்தத் திசைகாட்டி அருகிலுள்ள இரும்பு முதலியவற்றால் பாதிக்கப்படும். தவிர அது சரியான வடக்கைக் காட்டாது. புவியின் காந்தப் புலத்தின் திசையையே காட்டும். ஆனால் சுழல் திசைகாட்டியில் இக்குறைகள் இல்லை. இதில் ஒரு சுழல் கருவி படுகையிலுள்ள ஒரு இருசில் சுழலுமாறு அமைக்கப்படும். இருசின் முனைகள் பாதரசம் நிரம்பிய ப-வடிவமான குழலோடு பொருத்தப்பட்டிருக்கும். இப்போது இது சுழன்றால், புவியின் இயக்கத்தினால் இருசு ஒரு பக்கமாகச் சாயும். இதனால் குழலிலுள்ள பாதரசம் ஒரு பக்கத்தில் அதிகமாகப் பாய்ந்து அப்பக்கத்தைக் கனமாக்கி, இருசை அப்பக்கமாகக் கீழே தள்ள முயலும். ஆனால் இருசு இதை யெதிர்த்து நேர்குத்தான திசையில் சாயும். இவ்வாறு நிகழ்ந்து கடைசியில் கருவியின் இருசும் ரசக்குழலும் புவி சுழலும் திசைக்கு நேர்

குத்தாகத் தெற்கு-வடக்காகத் திரும்பி நிற்கும். கருவியின்மேல் வட்டமான திசை காட்டும் அட்டை யொன்றைப் பொருத்திவிட்டால் இது திசையை அறிவிக்கும். சுழல் திசைகாட்டியின் சக்கரம் நிமிடத்திற்கு 6000 முறை சீராக மின்சாரத்தினல் சுழற்றப்படுகிறது.

திசை காட்டுவதோடு இக்கருவி இன்னெரு வேலையையும் செய்கிறது. கப்பலின் அடித்தளத்தில் ஒரு பெரிய சுழல் கருவியும், இதனடிமைகள் போன்ற பல சிறு சுழல் கருவிகளும் அமைக்கப்படும். ஒரு குறிப்பிட்ட திசையில் சுழலுமாறு வைக்கப்பட்டுள்ள ஒரு சுழல் கருவியின் இருசு, கப்பல் தன் பாதையிலிருந்து சிறிது விலகினுலும் உடனே ஒரு மின்சாரச் சுற்றை மூடி அதன் வழியே ஓடும் மின்னேட்டத்தைக் கப்பலைத் திருப்பும் மோட்டாரிற் பாயச் செய்கிறது. மோட்டார் இயங்கிக் கப்பலை நேரான பாதையில் திருப்புகிறது. இத்தகைய கருவியினுல் கப்பல் சென்ற பாதையை ஒரு படத்தில் குறிக்குமாறும் செய்யலாம்.

இதே முறையைக் கையாண்டு எப்பொருளும் நேரான பாதையில் செல்லுமாறு அமைக்கலாம். விமானங்களிலும், டார்ப்பீடோ (Torpedo)க்களிலும், நீர்மூழ்கிகளிலும், பறக்கும் குண்டுகளிலும், வெகு உயரங்களையடையும் வாணங்களி (Rockets)லும், சுழல் கருவி இவ்வாறு பயன்படுகிறது. விமானங்களில் இதனுதவியால் விமானி எத்தகைய வானநிலையிலும் அச்சமின்றிப் பறக்க இயலும்.

நிமிடத்திற்குப் பத்தாயிரம் முறை சுழலும் இரு கருவிகள் விமானத்தில் அமைக்கப்படுகின்றன. இதில் ஒன்று விமானம் திரும்பும்போதெல்லாம் இயங்கி அது திரும்பும் திசையையும், அதன் வேகத்தையும் காட்டும். மற்ருென்று செயற்கைத் தொடுவானம் (Artificial Horizon) எனப்படும். இதனுதவியால் விமானம் கீழ்நோக்கியோ, மேனேக்கியோ செல்வதை அறியவும், குறிப்பிட்ட ஒரு உயரத்திற்கு வந்ததும் விமானம் அதே உயரத்தில் பறக்குமாறு அமைக்கவும், இயலும்.

ஆனல் இதைவிட வியத்தற்குரிய ஒரு செயலையும் சுழல் கருவி விமானங்களில் செய்கிறது. இதனுதவியால் ஒரு விமானம் விமானியின்றியே ஒரு நேரானபாதையில் குறிப்பிட்ட ஓர் உயரத்தில் செல்லுமாறும், எதிரி விமானங்கள் இதைத் துரத்தி வரும்போது அவற்றிலிருந்து தப்ப வளைந்து வளைந்து செல்லுமாறும் அமைக்கலாம். விமானத்தில் நிகழும் மாறுதல்களை எல்லாம் சுழல்கருவி திருத்தி, அது தானகவே பறக்கச் செய்கிறது. இது எவ்வளவு சிறப்பாக வேலை செய்கிறது என்பதை விளக்கப் பின்வரும் சம்பவம் போதுமானது. இங்கிலாந்தின் மேல் வந்த எதிரி விமானமொன்று, அதன் விமானிகளால் வானத்திலே கைவிடப்பட்டது. இதன் பின்னரும் அது, அதைத் துரத்திய சண்டை விமானங்களிடமிருந்து தப்பி, சுமார் 600 மைல் பறந்து, இங்கிலாந்தையே கடந்து, கடலுக்குள் கடைசியாய் வீழ்ந்தது. இதை இவ்வளவு திறம்பட ஓட்டியது சுழல்கருவியே.

அறிவுள்ள மானிடனைவிடப்பல செயல்களைத் திறனுடன் செய்யும் இக்கருவியின் தத்துவம் இயற்கையில் கையாளப்படுகிறது என்பது தற்போது தெரியவருகிறது. ஈ, கொசு முதலிய சிறு பூச்சிகள் விரும்பிய திசையில் பறக்கவும், அவ்வாறு பறக்கும்போது விரும்பியவாறு திரும்பவும், சுழலும் அமைப்பொன்று பூச்சிகளின் உடலில் உள்ளது. இதை எடுத்துவிட்டபிறகு பறக்கும்போது, மதுவுண்டதைப்போல் தள்ளாடித் தவிக்கிறது. இயற்கையின் இவ்விநோதத்தை அறியுமுன்பே மனிதன் இதைப் பயன்படுத்திவிட்டான் என்பது அவன் அறிவு வளர்ச்சிக்கொரு புகழுரையாகும்.



தற்கால கட்டிட நிர்மாணம்

தொழிற்சாலைகள்.

தற்சமயம் இந்தியாவில் மிகுந்த தொழிலபிவிருத்தி ஏற்படப் போகிறது. அதற்கு சாசுவதமான, சிக்கனமான, நெருப்பினுல் பாதிக்கப்படாத தொழிற்சாலை கட்டிடங்கள் நாடெங்கும் அவசியம். ரியின்போர்ஸ்ட் கான்கிரீட்—பல விதத்திலும் உபயோகப்படக் கூடிய கட்டிடசாதனம்—மேற் கூறிய குணங்களெல்லாம் பொருந்தியிருப்பதால் விரைவில் திருப்திகரமாய் இந்தியாவை தொழிலபிவிருத்தியடையச் செய்ய உபயோகமாயிருக்கும்.

அது போலவே, தொழிலாளர்களுக்கு அவசியமான சௌகரியங்களுடன் கூடிய சுகாதாரமான வீடுகள் அமைத்து அதன் மூலம் அவர்களுடைய ஆரோக்கியத்தையும் தொழில் திறமையையும் விருத்தி செய்வதில் ரியின்போர்ஸ்ட் கான்கிரீட் முக்ய சாதகமாயிருக்கும்.

கான்கிரீட்டை நன்கு பயன்படுத்திக் கொள்ள கான்கிரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியாவின் (199, மவுன்ட்டு ரோடு, மதருஸ்) உதவி எப்பொழுதும் கிடைக்கும்.

தி ஸிமெண்ட் மார்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்.

CM. 199

ஜிஸியா வரி

எஸ். வைத்தியநாதன்

ஹிந்துஸ்தானத்தில் மொகலாயர் ஆதிக்கம். ஹிந்துக்கள் பட்ட கஷ்டங்கள் பல. முக்கியமாக விக்ரஹ ஆராதனை செய்வோருக்கு விளைந்த இன்னல்கள் கணக்கிலடங்கா. பஹிரங்கமாக விக்ரஹ ஆராதனை செய்தோருக்கு விழுந்தன சவுக்கடிகள். இரகசியமாக விக்ரஹ ஆராதனை செய்தவர்கள் கைது செய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டனர். கரங்குவித்துக் கடவுளைத் தொழுதவர்களின் கைகளில் விலங்குகள் ஏறின. அவைமட்டுமா? ஆலயங்களில் விக்கினம் அடையாத விக்ரஹங்களே இல்லை. சிற்சில ஆலயங்களில் விக்ரஹங்கள் வேரோடு பிடுங்கி எறியப்பட்டன. விக்ரஹங்களைச் செய்வோரின் கைகள் துண்டிக்கப்பட்டன.

உலோகத்தாலும், கல்லாலும், மரத்தாலும், காரைச்சாந்தாலும் செய்யப்பட்ட விக்ரஹங்களைத் தொழுதல் மதியீனம். மதியீனமான காரியங்களைச் செய்யும் மக்களைத் தண்டிக்க அரசாங்கத்திற்கு உரிமை உண்டு; அதிகாரமும் உண்டு. இதுவே மன்னனின் கொள்கைஎன்று மொகலாயர்கள் கொக்கரித்தனர். விக்ரஹ ஆராதனையின் நன்மைகளைத் தைரியமாக எடுத்துச் சொல்ல எவருமே முன் வரவில்லை. மொகலாயர்கள் மிதமிஞ்சிய ஆர்ப்பாட்டம் செய்து வந்தனர்.

இவ்வளவு இன்னல்களுக்கிடையிலும் ஹிந்துக்கள் வெகு இரகசியமாக விக்ரஹ ஆராதனையைச் செய்து வந்தனர். இவர்களுக்கெல்லாம் தலைமைவகித்து, காரியங்களைப் பரம இரகசியமாகச்செய்து வந்தவர் ஜயசங்கர் என்ற யோகி. டில்லிமாநகருக்குப் பத்து மைலுக்கப்பால் ஓர் நந்தவனத்தில், விமலாதித்தன் என்ற ஸிஷ்யனோடு வசித்துவந்தார். நந்தவனத்தின் நடுவே அடர்ந்த புஷ்பச் செடிகளால் சூழப்பட்டு நின்றது அன்னை பவானியின் சின்னஞ்சிறிய கோவில். அன்னை பவானியே ஜயசங்கரின் இஷ்டதேவதை. மொகலாயர்களின் அட்டூழியங்களிலிருந்து அன்னையைக் காப்பாற்ற, அச்சிறு கோவிலை ஒரு கொட்டகையினுள் அடக்கிவிட்டார் ஜயசங்கர். பவானி தேவியின் அடிதொழுது, தினந்தோறும் ஏராளமான களிமண் பொம்மைகளைச் செய்வார். எல்லாப் பொம்மைகளும், பகவானின் பல திருவிளையாடல்களையும், அவதாரங்களையும் எடுத்துக் காட்டுபவையாய் இருந்தன.

செய்த பொம்மைகளைச் சூளையில் இட்டுச் சுட்டு, பக்குவப் படுத்தி, விமலாதித்தன் மூலம் வேண்டிய இடங்களுக்கு அனுப்பிவிடுவார். பொம்மைகளை, வெளியே தெரியாத வண்ணம், புல் கட்டிற்குள் வைத்துக் கட்டி எடுத்துக் கொண்டு போவது விமலாதித்தனின் வழக்கம். யாருமே சந்தேகப்பட முடியாதல்லவா? டில்லியில் ஒரு பெரிய ஹிந்து பிரபுவின் வீட்டிற்கு இரவு வேளைகளில், வாரத்தில் நான்கு முறை இப் புல்கட்டு தவறாமல் போய்க் கொண்டிருக்கும். பிரபுவின் வீட்டை அடைந்ததும் புல் கட்டு புனிதமாகக் கருதப்படும். நொடிப்பொழுதில் வேண்டிய இடங்களுக்குப் பொம்மைகள் போய் விடும். விமலாதித்தனும் வெற்றியுடன் தன் இருப்பிடம் சேர்வான், இப்படியே நாட்கள் சென்று கொண்டிருந்தன.

மொகலாயர்களின் கெடுபிடி ஜாஸ்தியாகும் பட்சத்தில் பொம்மைகளைக் கிணற்றிலோ அல்லது நதியிலோ எறிந்துவிட வேண்டும். புதுப் பொம்மைகள் அவ்வப்போது அனுப்பப்படும் என்பது ஜயசங்கரின் வேண்டுகோள். எல்லாரும் அவ் வேண்டுகோளுக்கு இணங்கியே நடந்து கொண்டனர். மொகலாயர்களின் கண்ணில் படாமலும், யாதொரு இடையூறுமின்றியும் பொம்மையைத் தொழுதல் பெரும் புண்ணியமாகக் கருதப்பட்டது. அதிலும் ஜயசங்கரின் பொம்மைகளைத் தொழுதலைப் பெரும் பாக்கியமாகவே கருதினர் பலர். விக்ரஹங்கள் இல்லாக் குறையை மண் பொம்மைகள் போக்கின. கையெழுத்து மறையும் நேரம். கனத்த புல் கட்டைத் தலையில் சுமந்து கொண்டு டில்லிமாநகரின் ஓர் வீதிவழியே விமலாதித்தன் சென்று கொண்டிருந்தான். ஒரு மொகலாயன் வலுவில் வந்து, புல்கட்டிற்கு விலை பேசினான். விமலாதித்தன் 'புல்கட்டு விலைக்கு அல்ல' என்று கூறிக்கொண்டே மேலே நடந்தான். ஆனால் அவனோ விடுகிற வழியாய் இல்லை. விமலாதித்தனைத் தொடர்ந்து மேலும் கட்டாயப்படுத்தினான். விமலாதித்தன்பாடு சங்கடமாய்

விட்டது. வாடிக்கைக்காரர்களுக்கு வழக்கமாகக் கொண்டுபோகும் புல்லே, வழியில் விற்கமாட்டேன் என்று கூறினன். 'நான் உன்னை மேலே நடக்க விடமாட்டேன்' என்று கூறி வழியை மறித்தான் அவன். என்ன வெல்லாமோ சொல்லிப்பார்த்தான் விமலாதித்தன். ஆனல் ஒன்றும் பலிக்கவில்லை. வாக்குவாதம் முற்றவே, அவன் கோபமடைந்து, புல் கட்டைக் கீழே தள்ளி விட்டான். எல்லாம் வெட்ட வெளிச்சமாகி விட்டது. விமலாதித்தன் விரைவினில் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டான். எல்லாம் விபரீதமாக முடிந்து விட்டதே என்று உள்ளங் கலங்கினன் விமலாதித்தன்.

விமலாதித்தனின் வருகையை எதிர் பார்த்து எதிர்பார்த்து ஏமாற்ற மடைந்த ஜயசங்கர் பெரிதும் வேதனை அடைந்தார். விமலாதித்தனுக்கு என்ன ஆபத்து நேர்ந்து விட்டதோ என்று எண்ணி அஞ்சினர். அவர் மனது சமாதானம் அடையாமல் தத்தளித்தது. அன்னை பவானியைத் தொழுது, அவனுக்கு ஒன்றும் நேரக் கூடாது என்று பல முறை வேண்டிக் கொண்டார். அப்பொழுது தேவியின் அருகிலிருந்த அகல் விளக்கு அணைந்து விட்டது. அந்த அபசகுனத்தைக் குறித்து அவர் உள்ளங்கலங்கியது அந்த அன்னைக் குத்தான் தெரியும். பவானியின் மீது பாரத்தைப் போட்டுவிட்டு, இரவு முழுவதையும் தியானத்தில் கழித்து ஒருவாறு சமாதானம் அடைந்தார்.

பொழுது புலர்ந்தது. டக் டக் என்ற குதிரைக் குளம்புகளின் சப்தம் நந்தவனத்தின் அருகில் கேட்டதை அறிந்து ஜயசங்கர் கலவரமடைந்தார். ஆஜானுபாஹுவான மொகலாய வீரர் ஐவர் குதிரைகளினின்று கீழே குதித்து வந்து, ஜயசங்கரைக் கைது செய்தனர். அப்படியே அவரைக் குதிரையின் மீது ஏற்றிக்கொண்டு டில்லிக்கு விரைவில் சென்றனர். அன்னை பவானியின் சிறிய கோவில் அவர்கள் கண்ணில் படாமல் இருந்தது, ஜயசங்கரின் அதிர்ஷ்டமே! அதைக் குறித்து அவர் அளவிலா ஆனந்தமடைந்தார்.

* * *

அன்று விசாரணை தினம். ஜயசங்கரும், விமலாதித்தனும் மொகலாய மன்னன் முன் நிறுத்தப்பட்டனர். விசாரணையும் ஆரம்பமாயிற்று. மொகலாய மன்னன் ஜயசங்கரை நோக்கி, 'உருவமற்ற ஆண்டவனுக்கு நீங்களாக உருவம் கொடுப்பது நியாயமா? அப்படியே உருவம் கொடுத்து விக்ரஹங்களைச் செய்தாலும், அவற்றிற்குச் சக்தி எங்கிருந்து வரும்?' என்று கேட்டான்.

அதற்கு ஜயசங்கர், 'அரசே! பிரார்த்தனையில் மனதை ஈடுபடச்செய்ய அல்லது லயிக்கச்செய்ய விக்ரஹம் பெரிதும் உதவி புரிகிறது. விக்ரஹங்களெல்லாம் பகவானின் திரு அவதாரங்களையே நினைப்பூட்டி, மனதை நிலைபெறச் செய்கின்றன. விக்ரஹங்களுக்குச் சக்தி உண்டு. அச்சக்தி மந்திரங்கள் மூலம் ஏற்படுகிறது' என்று பணிவுகலந்த குரலில் பதில் அளித்தார்.

'நல்லது. விக்ரஹங்களுக்குச் சக்தி உண்டென்பதைத் தாங்கள் அரசசபையில் நிரூபிக்க முடியுமா?'

'நிரூபிக்க முடியும், வேந்தே. ஆனல் நினைத்த மாத்திரத்தில் முடியாது. சில நாட்கள் பிடிக்கும்.'

'சரி, எவ்வளவு நாட்கள் பிடிக்கும்?'

'சுமார் பதினைந்து நாட்கள் பிடிக்கும்,'

'அப்படியா? இன்றைக்குப் பதினைந்தாவது நாள் தாங்கள் இச்சபையில் விக்ரஹ சக்தியை நிரூபிக்க வேண்டும். இல்லையேல் ஆயுள்பரியந்தம் சிறைவாசத் தண்டனை அனுபவிக்கவேண்டும். சம்மதம்தானு?'

'சம்மதமே.'

'நல்லது ஹிந்துமத யோகி என்ற முறையில் உங்களுக்கும், உங்கள் சிஷ்யனுக்கும் விடுதலை அளிக்கிறேன்.'

'சந்தோஷம், அரசே'

* * *

ஜயசங்கரும் விமலாதித்தனும் விடுதலையடைந்து, நந்தவனத்திற்கு வந்து விட்டனர். நந்தவனத்தைச் சுற்றி மொகலாய வீரர்களின் கண்கொட்டாக் காவல் இருந்து வந்தது. அரசசபையில், விக்ரகத்தின் சக்தியை எப்படி நிரூபித்துக் காட்டுவது என்பதே ஜயசங்கரின் கவலை. அந்தக் கவலையில் நாட்கள் ஐந்து போன விதம் தெரியவில்லை, இன்னும் எண்ணிப் பத்து நாட்களே இருந்தன.

'எந்த விதத்தில் அரசனுக்கு விக்ரஹ சக்தியைக் காட்டுவது? என்ற கேள்வி அல்லும் பகலும் ஜயசங்கரின் மனதை அரித்துக்கொண்டே யிருந்தது. ஆனலும் வழி ஒன்றும் அவருக்குப் புலப்படவில்லை.

சந்தனம் —
குளிர்ந்த மணம்
ஆதிகாலந்தொட்டு சந்தனத்தின் விலையற்ற குணங்க
ளில் ஒன்று அதன் குளிர்ச்சியளிக்கும் தன்மையே.
ஜுரத்தாலேற்படும் தாபத்தை தணிப்பதற்குரிய
ஔஷதமாகவன்றி சோர்வுற்ற அவயவங்களுக்குப்
புத்துயிர் அளிப்பதற்கும் உபயோகப்படுகின்றது குறை
வற்ற தன்மையை முன்னோர்கள் சந்தனத்திற்கு ஒப்
பிடுவார்கள். அதே சந்தனம் இன்று மைசூர் சந்தன
சோப் என்னும் நாகரீக உருவத்தில் சரீரத்தின்
குளிர்ச்சிக்கும், சோர்வையகற்றுவதற்கும் பயன்பட்டு
வருகிறது.
மைசூர்
சந்தன சோப்
சந்தனம் குறிப்பது குற்றமற்ற குணமே
★ ★ மைஸூர் கவர்மெண்டு தயாரிப்பு ★ ★

கடைசியில் அன்னை பவானியின் அடிகளைச் சரண் அடைந்து, ஆறுகக் கண்ணீர் பெருக்கி உள்ளம் நெகிழ்ந்தார். தம்மையும் மறந்து அப்படியே அன்னையின் அடிகளை இறுகப் பற்றிக்கொண்டு கண்ணயர்ந்து விட்டார்.



அந்தப் பக்தி நித்திரையில் அவர் உள்ளம் பரவசமடைந்தது. அன்னையின் அருள் மொழிகள் அவர் உள்ளக்கவலையை அறவே போக்கின.

'பெரியவரே! நியம நிஷ்டைகள் தவறாது விரதம் பூண்டு, அன்னையை ஏழு நாட்கள் தியானம் செய்துவிட்டு, எட்டாம் நாளாகிய பௌர்ணமி தினத்தன்று, நடுநிசிப் பொழுதினிலே பவானி தேவியைப் போன்ற விக்ரகம் ஒன்றைச் செம்பை உருக்கி வார்த்துவிடும். அவ்விக்ரஹத்தின் கண்கள் மட்டும் கோபாக்கினியைக் கக்கிக்கொண்டு, ரௌத்திராகாரமாய் இருக்க வேண்டும். இதுதான் விக்ரஹம் வார்ப்பதில் கவனிக்க வேண்டிய முக்கிய விஷயமாகும். அதன் பின்பு, சூரியோதயத்திற்குள்ளாக, அவ்விக்ரஹத்தைக் குளிரச் செய்து, மஞ்சள் துணியினால் நன்றாக மூடிவிடவேண்டும். நீர் இதைச் செய்துவிட்டு, விக்ரஹத்தைக் குறிப்பிட்ட தினத்தன்று அரசசபைக்கு எடுத்துச் செல்லும். மஞ்சள் துணியை விலக்கிய மாத்திரத்தில் விக்ரஹத்தின் கண் திருஷ்டி நேரடியாகப் படும் பொருள் எல்லாம் பஸ்மமாகிவிடும்' என்று யாரோ ஒரு கன்னிப்பெண் கணீரென்ற குரலில் கூறிவிட்டு மறைந்துவிட்டாள்.

ஜயசங்கர் திடுக்கிட்டெழுந்தார். தான் கண்டது கனவென்பதை உணர அவருக்கு நெடுநேரம் பிடிக்கவில்லை. அன்னை பவானியே அக் கன்னிப் பெண்ணின் வடிவில்வந்து, அருள் புரிந்தாள் என்று எண்ணி அவர் ஆனந்தம் அடைந்தார். அவர் உள்ளம் உவகையால் துள்ளியது. ஹிந்துக்களின் கஷ்டம் இன்றோடு விடிந்தது என்று நினைத்து ஆனந்தக் கண்ணீர் விட்டார். அன்னையை மீண்டும் ஒருமுறை தொழுதுவிட்டு, மேலே நடக்க வேண்டிய காரியங்களைப் பார்க்கச் சென்றார்.

* * *

மொகலாய மன்னன் குறிப்பிட்டிருந்த தினம். மஞ்சள் துணியால் நன்றாக மூடப்பட்டிருந்த விக்ரஹம் ஒன்றை இரு கைகளில் ஏந்தியபடி அரசசபையினுள் நுழைந்தார் ஜயசங்கர். எல்லாருமே விக்ரஹத்தின் சக்தியைப் பார்க்க விரும்பி, போட்டி போட்டுக் கொண்டு இடத்தைப்பிடித்துக்கொண்டனர். மன்னன் ஜயசங்கரைப் பார்த்து, 'எங்கே, உங்கள் விக்ரஹத்தின் சக்தியைக் காட்டும் பார்க்கலாம்' என்று கட்டளையிட்டான். உடனே விமலாதித்தன் ஒரு துணியை விக்ரஹத்தின் முன்பு பிடிக்க, அவர் மஞ்சள் துணியை விலக்கினார். என்ன ஆச்சரியம்! நொடிப்பொழுதில் துணி நெருப்புப் பிடித்து எரிய ஆரம்பித்தது. மன்னன் வியப்படைந்தான். ஆனாலும் சிலர் 'இதில் ஏதோ சூது இருக்கிறது. வேறொருவர் விக்ரஹத்தை வைத்துக்கொண்டு அதேபோலச் செய்யட்டுமே, பார்க்கலாம்' என்றனர். ஜயசங்கரும் அதற்கு இசைந்தார். வேறொருவன் விக்ரஹத்தை வாங்கிக்கொள்ள, அவர் வேண்

டியவைகளைச் சொல்லி எச்சரித்தார். மற்றொருவன் துணியைப் பிடித்துக்கொண்டான் விமலாதித்தன் பிடித்துக்கொண்டது போல. அதாவது தான் விக்ரஹத்தின் நேரடியான கண் திருஷ்டியில் படாமல் நின்றுகொண்டான், மஞ்சள் துணி விலக்கப்பட்ட மாத்திரத்தில், துணி நெருப்பிற்கு இரையானது.

அப்பொழுதும் சில மொகலாயர் திருப்தியடையவில்லை. விக்ரஹத்தை நீரில் அமிழ்த்தி வைத்துப் பின் சோதனை செய்யட்டும் என்றனர். அரசன் நடப்பவைகளைப் புன்சிரிப்புடன் பார்த்துக்கொண்டு இருந்தான். ஒரு பாத்திரத்தில் நீர் கொண்டுவரப்பட்டது. வெகு ஜாக்கிரதையாக மஞ்சள் துணியை விக்ரஹத்தின் கண்களுக்கு நேராக விலக்கிவிட்டு, விக்ரஹத்தை நீர் நிறைந்த பாத்திரத்தில் அமிழ்த்தினர்.

சற்று நேரத்தில் பாத்திரத்தில் இருந்த நீரெல்லாம் ஆவியாகிவிட்டது. பாத்திரம் கூடப் பழுக்கக் காய ஆரம்பித்தது. பலர் திகைத்தனர். விக்ரஹத்திற்கும் சக்தி உண்டா என்று வியந்தனர் சிலர். மொகலாய மன்னனின் ஆணையின்பேரில் ஜயசங்கர் மஞ்சள் துணியைக்கொண்டு, விக்ரஹத்தை மூடிக் கைகளில் எடுத்துக்கொண்டார். அரசன் அடிக்கடி தன் தாடியைத் தடவிக்கொண்டு வெகு தீவிரமான சிந்தனையில் ஆழ்ந்தான்.

ஜயசங்கர் அவ்வேந்தனிடம், 'சாதாரணப் பொருள்களை எரிக்கக்கூடிய விக்ரஹம் இது. இதைப்போலவே மக்களின் மனதில் உள்ள தீய எண்ணங்களையும், பாப எண்ணங்களையும் எரிக்கக்கூடிய விக்ரஹங்கள் இருக்கின்றன' என்று கூறினார்.

மன்னன் சற்று நேரம் மறுமொழி பேசாமல் இருந்தான். பின்பு, 'விக்ரஹங்களுக்குச் சக்தி உண்டென்று நான் ஒப்புக்கொள்ளுகிறேன்' என்று சொல்லி தன் தோல்வியை மறைமுகமாக ஒப்புக் கொண்டான். மொகலாயர் பலர் ஒரே வியப்பில் ஆழ்ந்தனர். அரசசபை கலைக்கப்பட்டது. ஜயசங்கர் வெற்றியுடன் தம் இருப்பிடம் சேர்ந்தார். இந்தச் செய்தியைக் கேட்ட ஹிந்துக்கள் பெரிதும் சந்தோஷமடைந்தனர். ஜயசங்கர் இருக்கும் நந்தவனத்திற்குச் சென்று அவரைத் தரிசித்து, வாயார வாழ்த்தினர்.

அன்று முதல் அரசன் பெரிதும் கலங்கினான். ஹிந்துக்களுக்கு விக்ரஹ ஆராதனை செய்ய அனுமதி கொடுக்காவிட்டால், அரசனே அநீதியைக் கடைப்பிடித்தது போலாகும். அநீதியைக் கடைப்பிடிக்க அவன் விரும்பவில்லை. ஆயினும் பிறமதத்தினரை இஷ்டப்போல் விட்டுவிட்டால், புது மதமாகிய மகம்மதிய மதத்திற்கு ஆதரவு கிடைக்காது. இதற்கென்ன செய்வது என்று யோசித்தான் அல்லும்பகலும். ஒன்றும் விளங்கவில்லை.

இதற்கிடையில், 'விக்ரஹங்களுக்குச் சக்தி உண்டென்பதைத் தாமே நேரில் பார்த்து அறிந்தும், விக்ரஹ ஆரதனையை அனுஷ்டிக்க அனுமதி கொடுக்காமல் அரசர் இருப்பது அநியாயம்' என்று ஹிந்துக்கள் பலவாறாகப் பேசிக்கொள்வதை ஒற்றர் மூலம் அறிந்துகொண்டான், இதனால் இன்னும் அதிகமாகக் கவலைப்பட்டு எப்படியாவது நிலைமையைச் சமாளிக்க எண்ணினான்.

இந்த எண்ணத்தின் பலனாக விக்ரஹ ஆராதனைமீது விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் எல்லாம் தளர்த்தப்பட்டன. ஹிந்துக்கள் இதைக் குறித்துச் சந்தோஷப்பட்டனர். ஆனால் அச்சந்தோஷத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தது அடுத்தநாள் அரசன் விதித்த ஜிஸியா என்னும் தலைவரி. இதுதான் ஜிஸியாவரியின் கதை.

198077

ஸ்திரீகளின்
ஆரோக்கியத்திற்கு

பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்

அருணா

கர்ப்பாசயரோக நிவாரணி

ஸ்திரீகளின் தேக சுகத்திற்கு அவசியமான சிறந்த டானிக் முறைப்படி தவருமல் உபயோகித்தால் ஆரோக்கியத்தை விருத்தி செய்து வாழ்க்கையை நன்குரஸிக்கச் செய்யும்.

ஆயுர்வேதாஸ்ரமம் லிட்
தி. நகர் . . . . மதராஸ்.

EASTERNS 376.

வான்கார்டு

பயர் & ஜெனரல்
இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி
லிமிடெட்

308/309, லிங்கிசெட்டித் தெரு,
மதராஸ்-ஜி. டி.

•

தென் இந்தியாவில் அதிக மூலதனம் செலுத்தப்பட்ட ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் ஸ்தாபிதம்

•

நெருப்பு, மோட்டார், தொழிலாளர் நஷ்டஈடு, முதலிய சகலவிதமான இன்ஷ்யூரன்ஸுகளும் செய்யப்படும்.

H. D. ராஜா,
ஜெனரல் மானேஜர்.

BITA CAFFIN

பிடகாபின்

(தலைவலி மாத்திரைகள்)

தலைவலி, பல்வலி, கால்களிலும் மூட்டுகளிலும் வலி, சூதகத்தின் போதுள்ள வலி முதலிய சகல வலிகளையும் நீக்கும். தூக்கமின்மை, மலேரியாசுரம் இவைகளையும் கண்டிக்கும். இருதயத்துக்கோ, குடலுக்கோ எவ்வித திங்கும் செய்யாது.

எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்

மூன்று மாத்திரைகள் கொண்ட பாக்கெட் அணு 1

BITA LAX

பிடலாக்ஸ்

இனிப்பான சாக்லேட் சுகபேதி இலேசாகவும், சுகமாகவும், மலச்சிக்கலை போக்க வல்ல குணமுள்ளது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்

Stockist:- **M/s Dadha & Co.,** P. T. Madras

Ceylon Agent:- **M. K. Kaparia,**

100, Second Cross Street, COLOMBO.

Manufactured by:-

BOMBAY TABLET Mfg. Co.,

Post Box 2092 176, Zaveri Bazaar, BOMBAY—2

திலக் மார்க் மிஸ்கி பெருங்காயத்தையே உபயோகியுங்கள்

GOPALJI CHAMPSHI & Co.,

GOVINDAPPA NAICK ST, G.T. MADRAS.

ஹெட் ஆபிஸ்: பம்பாய்



பிராஞ்சு: மதுரை

எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

கோபால்ஜி சாம்ஷி & கோ., 30, கோவிந்தப்பநாயக்கன் தெரு, மதராஸ்.

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

FAS
295

இன்றியமையாதது

Signal

போக்கு வரத்து முறையை ஒழுங்கு படுத்தி விபத்து எதுவுமிராமல் தடுப்ப தற்கான முதல் முக்கிய சாதனம் ஒரு நம்பிக்கையான ஸிக்னல் விளக்கு முறையாகும். வாழ்க்கை பரிமளிப் பதற்கு அவசியமான சரீர வனப் பும், சருமத்தின் தூய்மையும் அளிக்கும் சாதனம்...மலபார் லிம்டா ஸோப்.



மலபார்
லிம்டா சோப்

வெஜிடபில் சோப் ஒர்க்ஸ்

கள்ளிக்கோட்டை

புரோப்ரைடர்ஸ்: சேட். N.P. & கோ. கள்ளிக்கோட்டை ..பம்பாய்..சென்னை

— டி. எஸ். ஆர். கோகுல் தைலத்தை —

தொடர்ந்து உபயோகித்த இம்மங்கை தனது கூந்தல் அடர்ந்து கவர்ச்சியாக வளர்ந்திருப்பதைக் கண்டு — அகமகிழ்கிறாள் —

இம் மகிழ்ச்சியை நீங்களும் - எளிதில் அடையலாம் -

டி. எஸ். ஆர்.

கோகுல் கூந்தல் தைலம்

சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம்

இவைகள் குற்றால ஸ்நானத்தின் குளிர்ச்சிக்கு நிகரானவை!

மதராஸ் ஸிடி ஏஜண்டு **புஷ்பவனம் ஸ்டோர்ஸ்** பைக்ராப்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி.

T. S. R. & CO. PERFUMERS KUMBAKONAM

Cauveri Colour Press, Kumbakonam.